விலை: 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆனி 06 புதன்கிழமை (20.06.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 183

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுகள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

## நல்லிணக்கம் என்ற பெயரை சொல்லிக்கொண்டு

# அரசாங்கம் இனங்களுக்கிடையே இடைவெளியை ஏற்படுத்தியுள்ளது


## முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றச்சாட்டு

(கொழும்பு) தற்போதைய அரசாங்கம் நல்லிணக்கம் என்ற பெயரில் இனங்களுக்கிடையே இடைவெளியை ஏற்படுத்தியுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார். அநுராதபுரத்தில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பிரதேச சபை உறுப்பினர்களுடனான சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். மேலும் அரசு இனங்களை ஒன்றிணைக்கும் நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை எனவும் தெரிவித்துள்ளார். (23-ம் பக்கம் பார்க்க...)



வலி. வடக்கில் இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்து

## வயாவிளான் ஞானவைரவர் ஆலயம் நேற்று விடுவிப்பு



23

## வல்வை பொலிஸார் மீது சித்திரவதை குற்றச்சாட்டு

மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மீது நடுப் புக்காவல் சித்திரவதை குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. மோதல் சம்பவம் ஒன்றில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவர் நீதிமன்றப் பிணையில் வெளிவந்து இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர்.

சித்திரவதைக்குள்ளாகிய இருவரும் யாழ்ப்பாணம் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர். அத்துடன், அவர்கள் இருவரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை 23

கர்ப்பிணி படுகொலை

## கணவனுக்கு மரண தண்டனை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - கொக்கட்டிசோலை பகுதியில் தனது மனைவியை வெட்டி படுகொலை செய்த கணவருக்கு மரண 23

## மருத்துவ சேவைக் கட்டணங்கள் மீதான வற்வரி நீக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

தனியார் மருத்துவமனைகளில் மருத்துவ நிபுணரின் ஆலோசனை பெறல், மருத்துவ அனுமதி மற்றும் சத்திரசிகிச்சை 24

## துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட இளைஞனின் சடலம் நேற்று நல்லடக்கம்

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் பகுதியில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான இளைஞரின் உடல் நேற்று மாலை நல்லடக்கம் செய்யப்பட்டது. மல்லாகம் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற வன்முறை சம்பவத்தின் போது பொலிஸார் மேற்கொண்ட 24

## விக்னேஸ்வரனுக்கு இருக்கும் துணிச்சல் முஸ்லிம் அரசியல் பிரதிநிதிகளுக்கு இல்லை

கொழும்பு மாநகரசபை உறுப்பினர் அசாத் சாலி தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரனுக்கு இருக்கும் துணிச்சல் ஏன் முஸ்லிம் அரசியல் பிரதிநிதிகளுக்கு இல்லை என கொழும்பு மாநகரசபை உறுப்பினர் அசாத் சாலி கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கை ஜனாதிபதி கிளிநொச்சி சென்ற போது, ஜனாதிபதிக்கு எதிரிலேயே, அவர் சொல்வது எதனையும் நிறைவேற்றுவதில்லை என்று சுட்டிக்காட்டிய 24



## மாகாண சபைத் தேர்தல் தொடர்பில்

நாளை கலந்துரையாடல்

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் நாளை வியாழக்கிழமை இடம்பெறவுள்ள கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் விடயத் 23

பிரதியமைச்சராக

## புத்திக பத்திரன நேற்று பதவியேற்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரன கைத்தொழில் மற்றும் வர்த்தக பிரதி அமைச்சராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பதவியேற்றார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று மாலை 5.15 மணி 23

ஹண்டர் வாகனச் சாரதியின் கவனயீனத்தால்

## மாவட்ட உத்தியோகத்தர்களின் 12 மோட்டார் சைக்கிள் சேதம்



23

## வடக்கு சுகாதார உத்தியோகத்தர்கள் வெளி மாகாணங்களுக்கு நியமனம்

வடக்கில் அதிகளவு வெற்றிடம் காணப்பட்டும் தென்பகுதியில் நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் அரச குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் பதவிக்கு அதிகளவான வெற்றிடங்கள் காணப்படும் நிலையில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த அரச குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் வெளி மாகாணங்களுக்கு நியமிக்கப்பட்டதால் பாரிய நெருக்கடிக்குள்ளாகியிருப்பதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளில் அரச குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடம் அதிகள 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## கொவிசெத

திகதி 2018.06.19
சீட்டிழுப்பு இலக்கம் 1795
ஆங்கில எழுத்து G
வெல்லப்பட்ட இலக்கங்கள் 27 28 46 55
தேசிய லொத்தர் சபை

## மஹஜன சம்பத

திகதி 2018/06/19
சீட்டிழுப்பு இலக்கம் 3683
ஆங்கில எழுத்து P
வெல்லப்பட்ட இலக்கங்கள் 4 1 4 5 6 0
தேசிய லொத்தர் சபை

## நீரோகா

திகதி 2018/06/19
சீட்டிழுப்பு இலக்கம் 409
லக்கினம் மகரம்
வெற்றி இலக்கங்கள் 03 05 15 59 14
தேசிய லொத்தர் சபை

## தவறிவிட்டது

நீர்வேலி வடக்கு, நீர்வேலி என்னும் விலாசத்தில் வசிக்கும் பரராசசிங்கம் தர்மரூபன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (இல.791192641V) யாழ்ப்பாணம் சென்றுவரும்போது தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் **021 205 4822** எனும் தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.
**சன்மானம் வழங்கப்படும்.** (4590)

## சிதம்பரம் கவரிங்
### வேலைக்கு ஆட்கள்
# தேவை

ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது. விபரம் நேரில் தொடர்பு கொள்ளவும்.

**இல.01. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்**
**(பஸ் நிலையம் அருகாமை)**
**T.P - 076 921 8855**
**076 480 7788**
(C-3015)

## சிறுநீரகம் தேவை

20 வயதுடைய மாணவர் ஒருவருக்கு சிறுநீரகம் செயலிழந்தமையால் ($O^+$ அல்லது $O^-$ இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடன் தேவை.

தொடர்புகளுக்கு: 077 391 1406
077 9797 403. 021 222 7263
(4585)


## போதைப்பொருள் விற்பனையாளர் கைது

26 வயதுடைய பிரதான போதைப் பொருள் விற்பனையாளரான ஜயரத்னகே கிஹான் சந்தருவன, பேலியகொட பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

விசேட அதிரடிப் படையினரால் இவர் நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் இவரிடம் இருந்து 5 கிராம் ஹெரோயின் மற்றும கைக்குண்டு ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ம)


## மனோதத்துவ வைத்தியம்

**மனோதத்துவ நிபுணர் (General Psyohotheraphy)**

**Dr.P.ஆறுமுகம்**

**T.P :- 0777 569 205**

18.06.2018-24.06.2018 வரை
8 நாட்கள் மட்டுமே இருப்பார்
பதிவுக் கட்டணம் ரூபா 300/=



மீண்டும் யாழில்

ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்தின் மூலம் யாழ்ப்பாணத்தில் பலருக்கு குழந்தை கிடைத்தமைக்கு எம்மிடம் ஆதாரங்கள் உண்டு.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறப்பில் ஆண்மைக்குறைவை தவிர) எந்தமோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோ தத்துவ ரீதியிலும் மிகத்திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம்.

ஆரம்ப மனநோய், நீரிழிவு நோய், ஆஸ்துமா, மாதவிடாய் கோளாறுகள், தலையிடி, முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு இயற்கை மூலிகை மருந்துகள் மூலம் சிகிச்சை.

இளைஞர்கள் ஞாபகத் திறன் குறைவு கல்வியில் நாட்டம் குன்றி பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளை திருத்தி வாழ்வில் வெற்றிபெற

**தொடர்பு கொண்டு வரவை உறுதிப்படுத்துங்கள்**

இவை அனைத்துக்கும் மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

**இப்போது நாம் புதிய முகவரியில்**

## விதுனா லொச்

ஜும்மா பள்ளிவாசல் பின் பக்கம் யாழ்ப்பாணம்.
(அருமை உணவகத்துக்கு அருகில்) தொ.பே: 021 722 3409
(C-3013)


# நன்றி நவில்கிறோம்



## திருமதி கந்தையா நாகம்மா

எமது அன்னை திருமதி கந்தையா நாகம்மா அவர்கள் அமரத்துவம் அடைந்தமையிட்டு நேரில் வந்து ஆறுதல் கூறியும், மலர்வளையங்கள் சாத்தியும் பதாகைகள் ஊடாகவும் குறும் செய்திகள் ஊடாகவும் முகநூல்கள் ஊடாகவும் இணையங்கள் ஊடாகவும் தொலைபேசி மூலமாகவும் தங்கள் இறுதி மரியாதையையும் அஞ்சலியையும் செலுத்திய உறவினர்கள், கட்சித் தோழர்கள், நண்பர்கள், பல்வேறு கட்சிகளின் தலைவர்கள், அரசியல் சமூகத்தினர், சமூக அமைப்புக்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பாடசாலை சமூகங்கள், மாகாண கல்வி அமைச்சின் பல்வேறு துறையினர், வலயக்கல்வியியலாளர்கள், மற்றும் பிரமுகர்களுக்கும், அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற தொலை தூர பிரதேசங்களில் இருந்து வந்து எமது அன்னையின் இறுதிக்கிரியைகளிலும், இறுதி யாத்திரையிலும் கலந்து கொண்ட அனைவருக்கும் அன்னையின் இறுதி யாத்திரையை கௌரவமாகவும் அமைதியாகவும் நடத்துவதற்கு உதவி புரிந்த அனைத்து தோழர்கள், நண்பர்கள், உறவினர்களுக்கும் எமது அன்னையை வைத்தியசாலையில் பராமரிப்பதற்கு உதவிசெய்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும், வைத்தியர்களுக்கும், தாதிமார்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக இதயம் கனிந்த நன்றிகளை சமர்ப்பிக்கின்றோம்.

எமது குடும்பத்தின் சார்பில்
சுரேஷ்பிரேமச்சந்திரன் (முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)
கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் (வடக்கு மாகாண கல்வி அமைச்சர்)
(சி-3017)

## யாழ்ப்பாணம் நாவற்குழி
## சிவபூமி திருவாசக அரண்மனை வளாகத்திலுள்ள சிவதெட்சணாமூர்த்தி திருக்கோயில்
## மகா கும்பாபிஷேகப் பெருவிழா

எண்ணெய்க்காப்பு 22.06.2018 காலை 6மணி முதல்
சிவதெட்சணாமூர்த்திக்கும் 108 சிவலிங்கத்திருமேனிக்கும் அடியார்கள் எண்ணெய் சாத்தலாம்.

**திருவாசக அரண்மனை திறந்துவைத்தல்**
24.06.2018 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு
(திருவாசகம் முழுவதும் கருங்கல்லில் பதித்து காட்சிப்படுத்தப்பட்டுள்ளது)

**அதிதி**
வைத்தியநிபுணர்.வை.மனோமோகன் தம்பதிகள் (அவுஸ்ரேலியா)
"கருங்கல் ரதம் திறந்து வைத்தல்"
திருமதி அபிராமி கயிலாசபிள்ளை அவர்கள்

**மகாகும்பாபிஷேகம்**
25.06.2018 திங்கட்கிழமை காலை
பிரதமகுரு. சிவஸ்ரீ. சபா. வாசுதேவக் குருக்கள்
அனைவரும் வருகை தந்து சிவனருளை பெற்று உய்யுமாறு வேண்டுகின்றோம்.

A9 வீதி, நாவற்குழி, யாழ்ப்பாணம். (4594)
நிர்வாக சபை
சிவபூமி அறக்கட்டளை

# வாழ்த்தி மகிழ்கின்றோம்

திருவாளர்
## செல்லையா சண்முகலிங்கம்



அவர்கள் 2018.06.14ம் திகதி அன்று அகில இலங்கை சமாதான நீதவானாக பதவி ஏற்றமையை வாழ்த்துவதோடு மேன்மேலும் பல பட்டங்களையும் பதவி உயர்வுகளையும் பெற பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கோண்டாவில், கிழக்கு
கோண்டாவில்.

வாழ்த்துவோர்
உறவினர்கள்
(4583)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.
## முத்துக்குமாரு கெங்காதரன்
(NDT (Sci) BA, PGDE, MEd, SLTES III)

எமது பாடசாலையில் விஞ்ஞான பாட ஆசிரியராக இருந்து கல்வியியலாளராகப் பதவி உயர்வு பெற்றுச் செல்லும் திரு. முத்துக்குமாரு கெங்காதரன் அவர்கள் மேலும் பல பட்டம் பதவிகள் பெற்று உயர்வு பெற வாழ்த்துகின்றோம்.

யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்.
ஆசிரியர் கழகம்
(4582)

# தகைமைகளை விருத்தி செய்ய அரசியல்வாதிகளுக்குப் பயிற்சி

## வடக்கு முதலமைச்சர் பரிந்துரை

(யாழ்ப்பாணம்)

அனுபவத்தில் இருந்து தான் நாங்கள் எங்கள் திறன்களையும் தகைமைகளையும் விருத்தி செய்ய முடியும் எனத் தெரிவித்த வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அதேபோன்று பெற்றோருக்கும் அரசியல்வாதிகளுக்கும் போதிய பயிற்சி வேண்டும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆளணி மற்றும் பயிற்சி அலுவலகம் நடத்திய பெறுகை நடைமுறைகளும் ஒப்பந்த நிர்வாகமும் கற்கைநெறியின் சான்றிதழ் வழங்கலும் இணையத் தளத்தைத் திறந்து வைக்கும் வைபவமும் நேற்று யாழ்.பொது நூலக கருத்தரங்க மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் வடமாகாண சபையை ஏற்றுக்கொண்டபோது அலுவலர்களிடையே பல குறைபாடுகளைக் கண்டோம். மிக சிரேஷ்ட அலுவலர்களாக இருந்தவர்கள் கூட தீர்மானங்களை எடுக்காது அவற்றை அரசியல்வாதிகளான எங்களிடம் கோவை களைத் தள்ளி வந்தார்கள். ஏன் என்று ஆராய்ந்த போது எமக்கு முன்னரான நிர்வாகம் ஒரு படைத் தளபதியின் நெறிப்படுத்தலின் கீழ்த்தான் நடந்து வந்தது என்று கண் டோம்.

அவர் "இணங்கு அல்லது இடத்தைக் காலி பண்ணு" என்ற முறையில்தான் நிர்வாகம் நடத்தி வந்ததாகக் கேள்விப்பட்டோம். ஆகவே பல பிழையான காரியங்களுக்கு எமது அலுவலர்கள் தலையாட்டி வந்தது மட்டுமல்லாது சிலர் பிழையை எவ்வாறு சட்டதிட்டங்களுக்கு அமைவாகச் சரிபோல் செய்வது என்று ஆளுநருக்கு அறிவுரை கொடுத்தும் வந்தார்கள் என்றும் கேள்விப்பட்டோம். அவ்வாறு செய்தவர்கள் ஆளுநருக்கு வேண்டியவர்கள் ஆனார்கள். முடியாது என்றவர்கள் ஒறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டார்கள்.

முன்னைய போர் வீர ஆளுநருக்கு சட்டம் ஒரு பொருட்டல்லாது இருந்தது. தனது தீர்மானங்களே சட்டமாகப் பாவிக்கப்பட வேண்டும் என்று அவர் எதிர்பார்த்திருந்தார். இதனால் எமது அலுவலர்கள் சட்டத்திற்கும் ஆளுநரின் சங்கற்பத்திற்கும் இடையில் திண்டாடியே "நீங்கள் சொல்வதைப் போல் செய்கின்றோம்" என்று அவர் முன் பணிந்து செயலாற்ற முன் வந்திருந்தார்கள்.

அவ்வாறான ஒரு அடிமை நிர்வாக சேவையுடன்தான் நாங்கள் எங்கள் பதவிக் காலத்தைத் தொடங்கினோம். சில அலுவலர்கள் வெளியாரின் ஆலோசனையின்படி முரண்டு பிடித்தார்கள். இவற்றிற்கெல்லாம் நாங்கள் முகங் கொடுக்க வேண்டியிருந் தது.

சிவில் சேவை என்பது மக்களால் மிகவும் மதிக்கப்பட்ட ஒரு சேவையாக முன்பிருந்தது. சிவில் சேவை போய் அதன்பின் நிர்வாக சேவை வந்தபோது கூட அந்த ஆரம்பகால அலுவலர்கள் மிக உயர்ந்த நியமங்களைக் கடைப்பிடித்தார்கள். ஆனால் 1970 களில் மாற்றங்கள் ஏற்பட்டன. கட்சிகளின் ஆதிக்கம் முன்னிலைக்கு வந்தது.

படித்த பேராசிரியர்களாக அவர்களுள் பலர் இருந்திருந்தாலும் அவர்கள் குறித்த கட்சிகளின் நலன் கருதியே நடந்து கொண்டனர். கட்சிகளின் அரசியல் ரீதியான கொள்கைகளுக்கு அமைவாக அலுவலர்கள் நடக்க வேண்டும் என்ற ஒரு புதிய நடைமுறை மெல்ல மெல்ல பொதுநிர்வாக சேவைக்குள் நுழைந்தது.

நிர்வாக சேவை என்பது சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பக்கச்சார்பின்றி நடை முறைப் படுத்தப்பட வேண்டிய தொன்று. இந்த இடத்தில் தான் முகாமைத்துவ அபிவி ருத்தி முக்கியத்துவம் பெறுகி ன்றது.

ஒரு நிறுவனத்தை எவ்வாறு கொண்டு நடத்துவது என்பது பற்றிய அறிவே முகாமைத்துவ அறிவாகும். அதனை சாதாரணமாக எமது அடிப்படைப் பாடத்திட்டத்தினுள்ளிருந்து பெறமுடியாது. அதனை அனுபவமே எமக்கு ஊட்டி விடவேண்டும்.

எமது சகல நடவடிக்கைகளும் ஏற்கனவே பலரால் முகங் கொடுக்கப்பட்ட நடவ டிக்கைகள். அவர்களின் அனுபவத்தில் இருந்துதான் நாங்கள் எங்கள் திறன்களையும் தகைமைகளையும் விருத்தி செய்யலாம். அந்த அடிப்படையில் தான் பெற்றோருக்கும் அரசியல்வாதிகளுக்கும் போதிய பயிற்சி வேண்டும் என்றேன். வருங்காலத்தில் அவ்வாறு நடக்கும் என்று எதிர்பார்க்கின்றேன். அவ்வாறாக உங்களின் தகை மையை விருத்தி செய்யும் கற்கை நெறிகளே எம்மால் உங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. உங்களின் தேர்ச்சியும் திறனும் தகைமையும் கடைசியாக நிர்வா கத்திறனுக்கு வழிவகுப்பன என்பது மட்டுமல்லாமல் எமது போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் சிறந் ஒரு சேவையை உங்களூடாகப் பெறவும் வழி வகுக்கும் என மேலும் தெரிவித்தார். (இ-9)

# சைட்டம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப்புகை, நீர்த்தாரைப் பிரயோகம்





(கொழும்பு)

அனைத்துப் பல்கலைக் கழக மாணவர்களின் ஆர்ப்பாட்டப் பேரணி மீது பாராளுமன்ற சுற்றுவட்டத்தில் வைத்து நேற்றுப் பிற்பகல் பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகங்களை மேற்கொண்டுள்ளனர்.

சைட்டம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் மீதே குறித்த கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொழும்பு கலைப்பீடத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட குறித்த ஆர்ப்பாட்டம் பொறளை ஊடாக பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்கு வழியாகச் சென்று அங்கிருந்து பாராளுமன்றம் நோக்கி நகர்ந்த நிலையில் பாராளுமன்ற சுற்றுவட்டத்தில் வைத்து ஆர்ப்பட்டக்காரர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகங்களை மேற்கொணடுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# வடக்கை அச்சுறுத்தலில் வைத்திருப்பதே அரச இயந்திரத்தின் பிரதான நோக்கம்

## மல்லாகம் துப்பாக்கிச் சூட்டை சுட்டிக்காட்டி மாகாண சபை உறுப்பினர் குகதாஸ் கருத்து

(யாழ்ப்பாணம்)

வடக்கை அச்சுறுத்தலில் வைத்திருப்பதே அரச இயந்திரத்தின் பிரதான நோக்கம் என வடக்கு மாகாண சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் சபா.குகதாஸ் தெரிவித்துள்ளார். பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் இளைஞன் ஒருவர் மல்லாகத்தில் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடமாகாணத்தில் இடம் பெறும் வாள்வெட்டு சம்பவங்கள் அரச இயந்திரத்தின் பின்னணியில் தான் நடைபெறுகின்றன என்பது அதன் செயற்பாடுகளில் இருந்து சாதாரண மக்களுக்குகூட தற்போது புரிந்துள்ளது.

இதற்கும் காரணம் இலங்கையிலுள்ள 9 மாகாணங்களிலும் வடக்கில் மட்டும் தான் சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலையீடு அதிகமாகவுள்ளது. இதனால் சிவில் பொலிஸ் நடவடிக்கைகளுக்கு மேலாக இராணுவ புலனாய்வாளர்களின் ஆதிக்கம் வடக்கில் பெரியளவில் காணப்படுகின்றன.

இதற்கு உதாரணமாக புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் 12000 பேரை தொடர்ந்து கண்காணித்து விசாரணை நடத்தி அவர்களை கட்டுப்படுத்த முடியுமாயின் வாள் வெட்டில் ஈடுபடும் சாதாரண 17 தொடக்கம் 22 வயதுக குட்பட்டவர்களை ஏன் கட்டுப் படுத்த முடியாது?

இதுதான் வடக்கு மக்களின் முன் எழுகின்ற கேள்வியாக இன்று உள்ளது. ஆகவே இச் செயற்பாடுகளின் பின்னணியில் அரச படையும் அரசும் உள்ளது என்பது புலனாகிறது. மல்லாகம் சம்பவத்தில் பொலிஸ் அதிகாரி சட்டத்தை கையில் எடுத்த முறை கூட பல சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது என அவர் மேலும் தெரித் தார். (இ-4)

புற்றுநோய் மற்றும் கட்டிகளுக்கான சிகிச்சை
Cancer & Tumor Prevention & Rehabilitation Therapy

புற்று நோய், மற்றும் கட்டிகளால் பாதிக்கப்படும் வாய்,தொண்டை (Oral Cancer:Lip, Tongue, Cheek, Throat) மார்பகம், கருப்பை, குடல் போன்ற உறுப்புகளில் ஏற்படும் தீங்கானகட்டிகள், தீங்கற்றகட்டிகள் (Benign & Malignant Tumor)கதிர்வீச்சு,ஹீமோ சிகிச்சையின் பின்னர்(Radiation & Chemotherapy) ஏற்படும் தொந்தரவுகளுக்கும், வாய்ப்புண் ( Persistent Mouth Sore) விழுங்க முடியாமை, தாடையில் வலி, முரசுவலி, வீக்கம், உமிழ்நீர்ச்சுரப்பி வீக்கம் (Lump or Thickeninig in the cheek) முரசில் இரத்தக்கசிவு, உண்ணும் போது வேதனை, பலவீனம் உடம்பில் எரிச்சல், சிறுநீர்க்கடுப்பு போன்ற பிரச்சினைக்கு ஆயுள்வேத சிகிச்சை பெறலாம்.

சிகிச்சைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொண்ட பின் வரவும்

Dr.R.LAKSHMANA IYER D A M (Cey), D M G (ind)
Reg-7966, (Dep Ayu-6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதி உள்ளே) நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel:- 0212054066 / 0778725251

# தமிழர்களுக்கு உரிய அந்தஸ்தை எந்த அரசாங்கமும் வழங்கவில்லை

## அமைச்சர் மனோ சுட்டிக்காட்டு



(கொழும்பு)

தமிழர்களின்வாக்குகளைப் பயன்படுத்திக்கொள்ளும் அரசாங்கங்கள் தமிழர்களுக்கு உரிய அந்தஸ்தை தருவதில்லை. இதற்கு முன்பிருந்த அரசாங்கங்களும் தரவில்லை. இந்த அரசாங்கமும் தரவில்லை. இதனால், தமிழர்களுக்கு "எக்சகியூடிவ் பவர்" என்ற அமைச்சரவை நிறைவேற்று அதிகாரம் போதுமானளவு கிடைப்பதில்லை என தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்க, அரசகரும மொழிகள் அமைச்சரும் முற்போக்கு கூட்டணியின் தலைவருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

த.மனோகரனின் "உள்ளதைச் சொல்கின்றேன் நல்லதைச் சொல்கின்றேன்" நூல் வெளியீடு கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. இதில் சிறப்புரையாற்றிய அமைச்சர் மனோ கணேசன் மேலும் தெரிவிக்கையில்,

இன்று இந்நாட்டில் 5 அமைச்சரவை, 2 இராஜாங்க, சுமார் 5 பிரதி அமைச்சர்கள்களாக முஸ்லிம்கள் இருக்கிறார்கள். சுமார் 70 அரச நிறுவனங்கள் ஒட்டுமொத்த முஸ்லிம் அமைச்சர்கள் வசம் உள்ளன. அவை மூலம்கிடைக்கும் அந்த சேவைகளும் போதாது என்று முஸ்லிம்கள் தமது அரசியல் தலைவர்களை விமர்சனம் செய்தாலும்கூட, இதுதான் உண்மை. உண்மையில் நான் முஸ்லிம் மக்களை பாராட்ட விரும்புகிறேன். முஸ்லிம் மக்களை பார்த்து தமிழர்கள் பாடம் படிக்க வேண்டும்.

இந்நாட்டின், மொத்த சுமார் 200 இலட்சம் சனத்தொகையில், சுமார் 150 இலட்சம் சிங்களவர்கள், சுமார் 30 இலட்சம் தமிழர்கள், சுமார் 20 இலட்சம் முஸ்லிம்கள். இந்த அரசாங்கத்தை உருவாக்க வழங்கப்பட்ட சிறுபான்மை இன வாக்குகளில் தமிழர் வாக்குகளே பெரும்பான்மை வாக்குகள். ஆனால், தமிழர்களைப் பொறுத்தவரையில், 3 அமைச்சரவை, ஒரு இராஜாங்க, 3 பிரதி அமைச்சர்கள் தான் இருக்கிறோம்.

இதனால்தான், தமிழ்த்தேசிய கூட்டமைப்பை அரசில் இணைந்து அமைச்சுப் பதவிகளை பெறும்படி நான் பகிரங்கமாக அழைப்பு விடுத்தேன். ஒரு சிலர் எனது அந்த அழைப்பை விமர்சனம் செய்தார்கள். ஒரு சிலர் நான் சொல்வதில் உள்ள நியாயத்தைப் புரிந்து கொண்டார்கள். இன்று நிலைமை என்ன? தமிழர்களுக்கு அரசியல் தீர்வும் இல்லை. அபிவிருத்தியும் இல்லை. இது தான் இன்று தமிழர்களின் நிலைமையா? என்று நான் கேட்பதில் என்ன தவறு இருக்கின்றது? இந்த எனது கேள்வி வடக்கு, கிழக்கு, மலைநாடு, மேற்கு, தெற்கு என்று நாடு முழுக்க வாழும் தமிழர் மனங்களில் எதிரொலிக்கின்றது. உண்மையில் தமிழர் மனச்சாட்சியின் குரல்தான் என் குரல்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு அரசில் இணையாவிட்டால், உள்ளே இருக்கும் தமிழ் எம்.பிகளை தேடிப்பிடித்து அவர்களுக்கு மேலதிக அமைச்சுப் பதவிகளை இந்த அரசு கொடுக்க வேண்டும். தமிழ் அமைச்சர்களின் அமைச்சுகளுக்கு மேலதிக நிதி வளம் ஒதுக்க வேண்டும். ஆனால், இன்று தமிழ் அமைச்சர்களின் அமைச்சுகளும் மென்மேலும் பலவீனப்படுத்தப்படுகின்ற போக்கையே நாம் பார்க்கிறோம்.

இன்று இவைபற்றி யாராவது பேச வேண்டும். அதனால்தான், நான் இன்று பகிரங்கமாக பேசுகிறேன். இதன் மூலம் இதுபற்றிய நாடு தழுவிய ஒரு கலந்துரையாடலை ஏற்படுத்த நான் விரும்புகிறேன். இது தமிழர் மத்தியில் பேசுபடு பொருளாக மாற வேண்டும்.

இதனால், எமது அரசாங்கம் என்ற படகை கடற்பாறையில் முட்டி கடலில் மூழ்கடிக்க நான் தயார் இல்லை. ஆனால் வாயை மூடிக் கொண்டு சும்மா இருக்கவும் தயார் இல்லை. அரசுக்கு உள்ளே இருந்தபடியே இயன்ற உள்போராட்டங்களை செய்கிறேன் என அவர் மேலும் தெரித்தார். (இ)

# ஜமாய்த்தது ஜப்பான்

உலக கிண்ண கால் பந்து தொடரில் அதிர்ச்சி தொடர்கிறது. நேற்று நடந்த லீக் போட்டியில் வலிமை யான கொலம்பியா, 1-2 என்ற கோல் கணக்கில் வீழ்ந்தது.

ரஷ்யாவில் 21ஆவது உலக கிண்ண கால் பந்து தொடர் நடக்கிறது. இதன் 'எச்' பிரிவு லீக் போட்டியில் நேற்று உலகத் தரவரிசை யில் 16ஆவது இடத்தி லுள்ள கொலம்பியா, ஜப்பானை ('நம்பர் 61') சந்தித்தது.



கோல் அடித்த ஜப்பானின் ஒஸகோ (நடுவில்)

போட்டி தொடங்கிய 3ஆவது நிமிடத்தில் எதிரணி வீரர் அடித்த பந்தை கோல் வலைக குள் சென்று விடாமல் இருக்க தனது வலது கையை வைத்து தடுத்தார் கொலம் பியாவின் சான்செஸ். இது, கால்பந்து விதிமுறையை மீறிய செயல் என்பதால், உடனடி யாக 'ரெட் கார்ட்' காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார். இத்தொடரின் முதல் 'ரெட் கார்டாக' இது அமைந்தது. தவிர ஜப்பான் அணிக்கு 'பெனால்டி' வாய்ப்பு (2018ல் 9ஆவது) தரப் பட்டது. இதை ஷின்ஜி கவாஜா அப்படியே கோலாக மாற்ற ஜப்பான் அணி 1-0 என முன்னிலை பெற்றது.

### 10 பேர் மட்டும்

மறுபக்கம் மீதமுள்ள 87 நிமிடமும் 10 வீரர்களுடன் விளையாடும் நிலைக்கு தள் ளப்பட்டது கொலம்பியா.மனம் தளராமல் போராடிய இந்த அணிக்கு 39ஆவது நிமிடம் 'பிரீ கிக்' வாய்ப்பு கிடைத்தது. இதில், குயின்டெரோ கோல் அடிக்க, முதல் பாதி ஸ்கோர் 1-1 என சமனில் இருந்தது.

### ரொட்ரிக்ஸ் வருகை

இரண்டாவது பாதியில் 59ஆவது நிமிடம் ரசிகர்கள் பெரிதும் எதிர்பார்த்த ரொட்ரிக்ஸ் (2014ல் 6 கோல்) மாற்று வீரராக களமிறங்கினார். இருப்பினும் ஜப்பான் அணி அடுத்தடுத்து பல முறை தாக்குதல் நடத்தியது. போட்டியின் 73ஆவது நிமிடத்தில் ஜப்பான் அணிக்கு 'கோர்னர் கிக்' கிடைத்தது. இம்முறை சக வீரர் அடித்த பந்தை தலையால் முட்டி கோலாக மாற்றினார் ஒசாகோ.

77ஆவது நிமிடம் இதை சமன் செய்யும் வாய்ப்பு ரொட்ரிக்சிற்கு கிடைத்தது. ஓசாகா தடுக்க பந்து கோல் போஸ்ட் மேலாக சென்றது. போட்டியை எப்படியும் சமன் செய்து விட வேண்டும் என முயற்சித்த கொலம்பிய அணிக்கு கடைசி வரை கோல் வாய்ப்பு கிடைக்கவில்லை. முடிவில் கொலம்பிய அணி 1-2 என்ற கோல் கணக்கில் அதிர்ச்சித் தோல்வி அடைந்தது. கடந்த 2014 உலக கிண்ண லீக் சுற்றில் அடைந்த தோல்விக்கு (1-4), இம்முறை ஜப்பான் பழிதீர்த்தது.

### முதன்முறை

உலக கிண்ண தொடரில் தென் அமெரிக்க அணிகளுக்கு எதிராக ஆசிய அணிகள் 17 முறை மோதின. இதில் ஒன்றில் கூட வென்றது கிடையாது. நேற்று சாதித்த ஜப்பான் அணி முதல் வெற்றி பெற்று வரலாறு படைத்தது.

### 2

உலக கிண்ண அரங்கில் மிக விரைவாக 'ரெட் கார்ட்' பெற்ற வீரர்களில் கொலம்பி யாவின் சான்செஸ் (3வது நிமிடம்) இரண்டாவது இடம்பெற்றார். முதலிடத்தில் உருகுவே வீரர் படிஸ்டா (1986, முதல் நிமிடம்) உள்ளார்.

### கைய வச்சா... அது ராங்கா போனது

கடந்த 1994 உலக கிண்ண தொடரில் அமெரிக்க அணிக்கு எதிராக 'சேம் சைட்' கோல் அடித்தார் கொலம்பியாவின் எஸ்கோபர். இதில் 1-2 என தோற்ற இந்த அணி லீக் சுற்றுடன் திரும்ப நேர்ந்தது. இதனால் கோபமான கொலம்பிய ரசிகர்கள், 5 நாட்கள் கழித்து நைட் கிளப்பில் எஸ்கோபரை சுட்டுக் கொன்றனர்.

இம்முறை சான்செஸ் பந்தை கையால் தடுத்து ஜப்பான் அணிக்கு 'பெனால்டி' வாய்ப்பு கொடுத்தார். கொலம்பிய அணி தோல்விக்கு இது வும் ஒரு காரணம். இதனால் சான் செசிற்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.

# தூள் கிளப்பியது இங்கிலாந்து

உலக கிண்ண கால்பந்து லீக் போட்டியில் அசத்திய இங்கிலாந்து அணி, 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ரஷ்யாவில் நடக்கும் இத்தொடரின் 'ஜி' பிரிவு லீக் போட்டி யில் இங்கிலாந்து, துனிசியா அணிகள் மோதின.

11ஆவது நிமிடத்தில் இங்கிலாந்து அணிக்கு கிடைத்த 'கோர்னர் கிக்' வாய்ப்பில் சக வீரர் அடித்த பந்தை ஸ்டோன்ஸ் தலையால் முட்டி கோலாக்க முயன்றார்.

துனிசியா கோல் காப்பாளர் தனது இடது கையால் தள்ளி விட, அருகில் இருந்த அணித தலைவர் ஹரி கேன், கோலாக மாற்றினார். 33ஆவது நிமிடம் இங்கிலாந்து வீரர் வோக்கர் எதிரணி வீரரை 'பவுல்' செய்ய துனிசியாவுக்கு பெனால்டி கிடைத்தது. இதில் பெர்ஜானி கோல் அடிக்க முதல் பாதி 1-1 என சமன் ஆனது.

கடந்த 1998 உலக கிண்ண தொடருக்குப் பின் பெனால்டி முறை யில் இங்கிலாந்து விட்டுக் கொடுத்த முதல் கோல் இது தான். இரண்டா வது பாதியில் துனிசியா வீரர்கள் தற் காப்பு பகுதியில் அதிக கவனம் செலுத்த போட்டி சமனிலையாகும் என நம்பப் பட்டது.

போட்டியின் 'ஸ்ரொப்பேஜ்' நேரத்தில் (90+1 வது) மீண்டும் அசத்திய ஹரி கனே, தலையால் முட்டி கோல் அடி க்க இங்கிலாந்து அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.



இருகோல்களை அடித்த இங்கிலாந்து அணித் தலைவர் ஹரி கேன்

**1** கடந்த 1990ல் கேரி லினெகருக்குப் பின் (எதிர்-கமரூன்), உலக கிண்ண தொடரில் ஒரே போட்டியில்இரண்டு கோல்அடி த்த வீரர் ஆனார் ஹரி கேன.

**9** கடந்த 1986 உலக கிண்ண தொடர் முதல், இங்கி லாந்து களமிறங்கும் முதல போட்டியில், முந்தைய தொடரில் பங்கேற்ற எந்த வீரரும் இடம்பெற்றது கிடை யாது. தொடர்ந்து 9ஆவது முறையாக நேற்றும் இது தொடர்ந்தது.

# செனிகல் அசத்தல் வெற்றி

உலக கிண்ண லீக்போட்டி யில் செனிகல் 2-1என்ற கோல கணக்கில் வெற்றி பெற்றது. போலந்து வீரர் சியோனெக், 'சேம் சைட்' கோல் அடித்து சொதப்பினார்.

உலக கிண்ண கால் பந்து 'எச்' பிரிவு லீக் போட்டி யில் நேற்று போலந்து, செனிகல்மோதின.

போட்டியின் 13ஆவது நிமிடத்தில் செனிகல் வீரர் பெயே நியாங்கை பவுல் செய்த போலந்தின் கிரிசோ வியாக், 'மஞ்சள் அட்டை' பெற்றார். அடுத்த 2வது நிமி டத்தில் நியாங்கிடம் இரு ந்து பெற்ற பந்தை கோலாக மாற்றும் வாய்ப்பை தவற விட்டார் செனகலின் யூசுப் சபாலே.

தொடர்ந்து 33 வது நிமிடத்தில் செனிகல், கோல் அடிக்க முயற்சித் தது வீணானது. 38 வது நிமிடத்தில் போலந்தின் பிஸ் செக்கிடம் இருந்து பந்தை லாவகமாக பறித்த நியாங், கய்யேவிடம் 'பாஸ்' செய்தார். வந்த வேகத்தில் பந்தை கோல் போஸ்ட் நோக்கி அடித் தார் கய்யே. அப்போது கோல் ஏரியாவுக்கு முன் நின்று கொண்டிருந்த சியோனெக், வெளியே தள்ளி விட முயன் றார்.

துரதிர்ஷ்டவசமாக பந்து வலைக்குள் செல்ல, 'சேம் சைட்' கோலாக மாறியது. இது இத்தொடரில் அடிக்கப் பட்ட 4வது 'சேம் சைட்' கோல்.

இரண்டாவது பாதியில் போலந்து வீரர் கிரி சோவியாக்கிடம் இருந்து பந்தை பெற்ற நியாங் (60வது), மின்னல் வேகத்தில் போல ந்து கோல் போஸ்ட்டை நோக்கி ஓடி னார். முன்னோக்கி வந்த கோல்காப்பாளர் வோசி யச்சை ஏமாற்றி காலியாக கிடந்த வலைக் குள் தள்ளி அசத்தினார். செனிகல் 2-0 என முன்னிலை பெற்றது.

போட்டியின் 86வது நிமி டத்தில் கிரிசோவியாக், தலையால் முட்டி ஒரு கோல் அடித்த போதும், போலந்து 1-2 என பின்தங்கி இருந்தது. முடிவில் செனிகல் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இத் தொட ரில் ஆபிரிக்க அணி பெற்ற முதல் வெற்றி இதுவாகும்.










## மரண அறிவித்தல்

### வியாகுலம் பிரான்சிஸ்

(முன்னாள் வலம்புரி பிரதேச செய்தியாளர்)

மன்னாரைப் பிறப்பிடமாகவும் ஊர்காவற்றுறையை வசிப்பிடமாகவும் கொண்ட வியாகுலம் பிரான்சிஸ் (முன்னாள் வலம்புரி பிரதேச செய்தியாளர்) 19.06.2018 செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற லூர்தம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான யேம்ஸ், எலிசபேத்தம்மா, மற்றும் லில்லிமலர், தேவதாசன் ஆகியோரின் மைத்துனரும் பிறேமனின் அன்பு பெரியப்பாவும் ஆவார் அன்னாரின் பூதவுடல் இன்று (20.06.2018) புதன்கிழமை மாலை 03.00 மணிக்கு சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு ஊர்காவற்றுறை பொதுச் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஊர்காவற்றுறை

தகவல்
அ.தேவதாசன் (மைத்துனர்)
ஓய்வு நிலை அஞ்சல் ஊழியர்

## மரண அறிவித்தல்



### திருமதி செல்லம்மா சபாபதிப்பிள்ளை

மண்டைதீவு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பொற்பதி வீதி கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாக வும் கொண்ட திருமதி செல்லம்மா சபாபதிப்பிள்ளை அவர்கள் நேற்று (19.06.2018) செவ்வாய்க்கிழமை கால மாகிவிட்டார்.

அன்னார் கமலாதேவி, இரத்தினகுமாரன் (ஓய்வு நிலை கிராம அலுவலர்), விஜயகுமாரன் (தலைமைப் பூசகர், மண்டைதீவு பூம்புகார் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயம்), ஜெயக்குமாரன், உதயகுமாரன் ஆகியோரின் பாசமிகு தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத் தரப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (4598)

பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு

தகவல்:-
குடும்பத்தினர்

# இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் குற்றச்செயல்களில் ஈடுபடுகின்றனர்

## இராணுவத் தலைமையகம் எச்சரிக்கை

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களுக்கு அடைக்கலமளிப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை இராணுவத் தலைமையகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் மற்றும் தொடர்ந்தும் விடுப்பில் இருப்பவர்களை கைதுசெய்வதற்கான நடவடிக்கை நாடளாவிய ரீதியில் இடம்பெறுவதாக இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அவர்களுக்கு அடைக்கலம் அளிப்பதை அனைவரும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அதேபோன்று அவர்களுக்கு உதவுவது மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளில் அவர்களை ஈடுபடுத்துவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் இராணுவ தலைமையகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களில் ஒரு பிரிவினரும் விடுமுறையில் சென்ற பின்னர் தலைமறைவாகியுள்ள சிலரும் கொள்ளைகள் மற்றும் சமூக விரோத செயல்களில் ஈடுபடுகின்றனர் என்ற தகவல் பொலிஸார் மூலம் கிடைத்துள்ளது எனவும் இராணுவ தலைமையகம் தெரிவித்துள்ளது.

இவர்களில் சிலர் அரசியல்ரீதியாக செல்வாக்குப் படைத்தவர்கள் மற்றும் மதகுருமார்களிடம் அடைக்கலம் பெறமுனைந்துள்ளனர் எனவும் இராணுவ தலைமையகம் தெரிவித்துள்ளது. (இ)

## வீதியைப் புனரமையுங்கள்



(கரணவாய்)

கரணவாய் மத்தி பொன்னம்பலம் வீதியைப் புனரமைத்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். குறித்த வீதியில் இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஒரு கிலோ மீற்றர் தூரம் புனரமைக்கப்பட்டது. பின்னர் புனரமைப்புப் பணிகள் இடை நிறுத்தப்பட்டன. இதனால் அவ் வீதி வழியாக பொதுமக்கள் பயணம்செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. எனவே குறித்த வீதியை புனரமைத்து தரும்படி கரவெட்டி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் கோரிக்கை முன்வைக்கப்பட்டு புனரமைப்பதாக முடிவெடுக்கப்பட்டது. இருப்பினும் குறித்த வீதி இதுவரை புனரமைக்கப்படவில்லை என பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (இ-9-60)

## மண்கும்பான் கிராமத்தில் வீதி விளக்குகள் பொருத்தல்



(வேலணை)

தீவகம் வேலணை மண்கும்பான் கிராமத்திற்கு அல்லையூர் இணையத்தின் அறப்பணிக் குடும்பத்தின் ஏற்பாட்டில் ஐம்பது வீதி விளக்குகள் பொருத்தும் பணி நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மண்கும்பான் மக்களின் வேண்டுகோளுக்கமைவாக பிரதேச சபை உறுப்பினர் செ.பார்த்தீபனின் ஒத்துழைப்புடன் அல்லையூர் இணையத்தின் அறப்பணிக் குடும்பத்தினரின் முயற்சியால் மண்கும்பான் கிராமம் முழுவதும் (கிழக்கு மற்றும் மேற்கு ) வீதி விளக்குகள் வேலணை பிரதேச சபையின் அனுமதியுடன் இலங்கை மின்சார சபையின் ஊழியர்கள் மூலம் மின்சாரத் தூண்களில் பொருத்தப்பட்டன.

இதனால் இரவு வேளைகளில் கிராமத்தவர்கள் பயமின்றி போக்குவரத்தில் ஈடுபடக்கூடியதாக இருக்கும். வீதி விளக்குகள் கொள்வனவுக்கு மண்கும்பானைச் சேர்ந்த அமரர்களான சிவப்பிரகாசம் தம்பதியரின் குடும்ப உறவுகளால் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. (இ-9)

## வடக்கில் ஐந்து பாடசாலைகளில் நான்காவது சர்வதேச யோகாதினம்

(யாழ்ப்பாணம்)

நான்காவது சர்வதேச யோகா தினம் நாளை 21 ஆம் திகதி சர்வதேச அளவில் கொண்டாடப்படவுள்ளது. அந்த வகையில் வடமாகாணத்திலும் நான்காவது சர்வதேச யோகா தினமானது அன்றைய தினம் கொண்டாடப்படவுள்ளது. இதற்கான நிகழ்வுகள் இந்தியத் துணைத் தூதரகத்தினால் வடக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சுடன் இணைந்து மேற்கொள்ளப்படவுள்ளன.

அன்றைய தினம் வடமாகாணப் பாடசாலைகள் அனைத்திலும் யோகா பயிற்சிகள் காலை 7.30 மணிக்கு மேற்கொள்ளப்பட வேண்டும் என வடமாகாணக் கல்வி அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வடக்கு மாகாணத்தில் 5 மாவட்டங்களிலும் தெரிவு செய்யப்பட்ட 5 பாடசாலைகளில் சிறப்பு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இதில் யாழ்ப்பாணம் - வேம்படி மகளிர் கல்லூரி, கிளிநொச்சி- சென்.திரேசா பெண்கள் கல்லூரி, முல்லைத்தீவு- வித்தியானந்தாக் கல்லூரி, மன்னார் - சென். சேவியர் மகளிர் கல்லூரி, வவுனியா- சைவப்பிரகாசா மகளிர் கல்லூரி என்பனவாகும்.

பங்கு பெற விரும்பும் யோகா ஆர்வலர்கள் அன்றைய தினம் காலை 7.30 மணிக்கு குறித்த பாடசாலைகளில் இடம்பெறவுள்ள நிகழ்வுகளில் இணைந்து யோகா செயன்முறையை மேற்கொள்ளலாம் என யாழ். இந்தியத் துணைத் தூதரகம் அறிவித்துள்ளது. (இ-9)

## ஓராண்டு நினைவு

அமரர் திருமதி.

**நித்தியலட்சுமி பாலசிங்கம்**

(அல்லைப்பிட்டி-கொழும்பு)

பிறப்பு: 1947.10.20 இறப்பு: 2017.07.01

திதி: ஆனி மாதத்து பூர்வபட்ச அட்டமி



பாசத்தின் உறைவிடமாய்<br>
எமை பாரினில்<br>
வாழவைத்த தெய்வமே<br>
ஆண்டு ஒன்று ஓடி மறைந்தது<br>
உம் நினைவுகள் எம் நெஞ்சில்<br>
என்றும் வாழும் அம்மா!

-குடும்பத்தினர்-

## கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் பத்தாவது ஆண்டு குருபூசை தினம்



(யாழ்ப்பாணம்)

ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தின் முன்னாள் பெருந்தலைவர், அன்னை சிவத்தமிழ்ச் செல்வி, துர்க்கா துரந்தரி, பண்டிதை, கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் பத்தாவது ஆண்டு குருபூசை வைபவம் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை தெல்லிப்பழையிலுள்ள ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது.

ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வு காலை விசேட பூசை வழிபாட்டுடன் ஆரம்பமாகி அன்னையின் உருவச்சிலை வழிபாடும் அதனைத் தொடர்ந்து பண்ணிசை அரங்கம், பிரார்த்தனை உரை, வாழ்த்துரை, தலைமையுரை என்பன நடை பெறவுள்ளன. தொடர்ந்து சிவஸ்ரீ பஞ்சாட்சரக் குருக்கள், சச்சிதானந்தக்குருக்கள், சிவஸ்ரீ. செவ்வந்திநாத ஐயா பரமானந்த குருக்கள் ஆகிய மூத்தசிவாச் சாரியார்களை கௌரவப்படுத்தி விருதுவழங்கும்நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

முற்பகல் 11 மணியளவில் திருமுறை வெளியீட்டில் பன்னிரெண்டாம் திருமுறையான திருத்தொண்டர்புராணம் (நாலாம் பாகம்) வெளியீடும் இடம்பெறவுள்ளது. (இ-9)

## இராசி பலன்

**மீனம்:** நீண்ட நாளைய விருப்பமொன்று கைகூடும் வாய்ப்புண்டு, உறவினர் வழியில் சுபசெய்திகள் வந்து சேரலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மேடம்:** மற்றவர்களின் மன நிலையை அறிந்து செயற்படுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்தியால் உற்சாகமடைவீர்கள், போசன சுகமுண்டு

**இடபம்:** கலைப் பொதுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பிள்ளைகளின் தேவைஅறிந்து பூர்த்திசெய்வீர்கள்.

**மிதுனம்:** நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கலாம், பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்:** கவலைகள் தீர கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள், நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள்.

**கடகம்:** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், விலையுயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்புண்டு, காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள்.

**மகரம்:** உங்களின் திறமைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், முயற்சிகளில் முன்னேற்றமுண்டு.

**சிம்மம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**தனுசு:** புதிய முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், அந்நியர்களின் உதவியுண்டு.

**விருச்சிகம்:** புதிய பொருட் சேர்க்கையுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும்.

**துலாம்:** நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்கவேண்டிய நாள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், பயணங்கள் இடம் பெறலாம்.

**கன்னி:** ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், விரும்பிய உணவுப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய அனுபவங்கள் ஏற்படலாம்

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | | | சூரி, புத |
| | இராசி பலன் | | ராகு, சுக். |
| செவ், கேது | | | சந் |
| சனி | | குரு | |

சந்திராஷ்டமம்<br>
அவிட்டம்<br>
மதியம் 1 மணிக்கு<br>
கன்-சந்

**20.06.2018**

ஆனி 06, புதன்கிழமை<br>
சூரிய உதயம் காலை 5.53 மணிக்கு<br>
சப்தமி முற்பகல் 10.31 மணிவரை<br>
பூரம் முற்பகல் 7.14 மணிவரை<br>
சுபநேரம் 4.24-5.54 மணிவரை<br>
இராகுகாலம் 11.54-1.24 மணிவரை<br>
இரவு நடேசர் அபிஷேகம்

வளவன்

# முதலமைச்சர் புதிய கட்சி ஆரம்பிப்பது குறித்து ஆர்னோட்டிடம் கேட்டறிந்த பிரி. உயர்ஸ்தானிகர்

(யாழ்ப்பாணம்)

வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் புதிய கட்சி ஒன்றை ஆரம்பிக்கவுள்ளாரா? என யாழ்.மாநகர முதல்வரிடம் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் கேட்டறிந்து கொண்டார். பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜேம்ஸ் டவ்ரிஸ்க்கும் யாழ்.மாநகர முதல்வர் மற்றும் ஆணையாளருக்கும் இடையில் நேற்று முன்தினம் மாநகரசபையில் சந்திப்பு இடம்பெற்றது. இதன்போதே இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலின்பின்னர் மாநகரசபை முதல்வர் இ.ஆனோல்ட் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் முதல்வர் பொறுப்பு சவாலாகவுள்ளதா? எனக் கேட்டார். கட்சி ரீதியாக வேறுபட்டாலும் சகல உறுப்பினர்களும் இணைத்து செயற்படுகிறோம். மக்கள் அபிவிருத்தியில் அனைவரும் ஒரே எண்ணப்பாட்டைக்கொண்டுள்ளோம் எனவும் அபிவிருத்திக்கு வெளிநாட்டு உதவிகளை எதிர்பார்க்கின்றோம் என தெரிவித்தேன்.

மாகாணசபை உறுப்பினராக இருந்து பல சவால்களை எதிர்கொண்டு இப்பதவிக்கு வந்துள்ளீர்கள் எனவும் மாகாணசபை பல்வேறு விடயங்களை செய்யவில்லை என்ற குறைபாடுகள் தொடர்பாகவும் பல விடயங்களை வினவியிருந்தார்.

இதற்கு மாகாணசபை மூலம் பல பொறுப்புக்களைச் செய்யத் தவறி விட்டோம். பல வாய்ப்புக்களை செயற்படுத்த தவறி விட்டோம் எனத் தெளிவாகக் கூறினேன். போரால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கைத் தரத்தில் மாற்றமில்லை. அதற்கு மாகாணசபையால் நாங்கள் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. மக்களை நோக்கி அபிவிருத்தித் திட்டம் எவையும் செய்யவில்லை என மாகாணசபையில் இருக்கும் போது உணர்ந்தோம். இப்போது அதில் கூடிய அக்கறையுள்ளவர்களாக உள்ளோம். மக்களின் வாழ்வாதாரத்தில் உதவித்திட்டங்களை, அபிவிருத்தியை முறையாக செய்யத் தவறிவிட்டோம். அவர்களின் பொருளாதார முன்னேற்றத்துக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை என தெரிவித்தேன்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரின் பங்களிப்பு நாளாந்தம் மக்களின் வாழ்க்கையில் இருக்கிறதா? எனவும் கேட்டார்.

இதற்கு சிவில் பொலிஸாரின் செயற்பாடுகள் வந்த பின்னர் நாளாந்த கருமங்கள் அவர்கள் ஊடாகத்தான் நடைபெறுகிறது. மொழிப் பிரச்சினை உள்ளது. அதற்கு உரிய பொறிமுறை வேண்டும். பொலிஸ் அதிகாரம் இல்லை. அது வேண்டும் எனத் தெரிவித்தேன். யாழில் இராணுவம் குடியிருப்பது உண்மை. 50 வீத நிலம்தான் விடுவிக்கப்பட்டது. அவர்கள் அகற்றப்பட வேண்டும். தமக்குரிய இடத்துக்குச் செல்ல வேண்டும் என தெரிவித்தேன்.

கோட்டைப் பகுதியில் மீண்டும் இராணுவத்தை விட முடியுமா? எனக் கேட்டார். அது மக்களுக்குரிய இடம். அங்கு இராணுவத்தை உட்படுத்த முடியாது. வெளியிடத்திலுள்ள அரச நிலத்தில் முகாம் அமைத்து உட்படுத்த முடியும் என தெரிவித்தேன்.

வடக்கு முதலமைச்சர் புதிய கட்சி ஆரம்பிக்கும் சூழ்நிலை உருவாகியுள்ளதா? எனக் கேட்டார்.

அவ்வாறு பேசப்படுகிறது. அவருடன் பணியாற்ற ஏனையோர் பகிரங்கமாக தெரிவித்துள்ளார்கள். உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை. தமிழ் மக்கள் பேரவையில் இணைத்தலைவராக உள்ளார். அது அரசியல் கட்சியாக வராது எனத் தெரிவித்தார்கள். இனிவரும் காலத்தில் எவ்வாறு மாற்றமடையும் என பொறுத்திருந்து பார்க்க வேண்டும் எனத் தெரிவித்தேன் என்று ஆனோல்ட் மேலும் தெரிவித்தார். (இ-9)

# ஆசிரியர் மீது தாக்குதல் வழக்கு; மாணவர்களுக்கு மறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஆசிரியர் தாக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய மாணவர்கள் இருவரையும் எதிர்வரும் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஆசிரியரான பிரதீபன் (வயது-41) கடந்த 6 ஆம் திகதி பாடசாலைக்கு அண்மையில் வைத்து தாக்கப்பட்டார்.

இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த 6 பேர் கொண்ட கும்பல் ஒன்றே இவர் மீது தாக்குதலை மேற் கொண்டது. இதையடுத்து ஆசிரியர் வழங்கிய தகவலின் அடிப்படையில், இரண்டு மாணவர்கள் கைது செய்யப்பட்டனர்.

விசாரணைகளின் பின்னர், அவர்கள் இருவரும் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். தொடர்ந்து இருவரும் நேற்று முன்தினம் வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டனர்.

இதையடுத்து, சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது தாக்குதலுக்குள்ளான ஆசிரியரை மன்றில் முன்னிலையாகுமாறு கட்டளையிட்ட நீதவான் சி.சதீஸ்தரன், வழக்கை பிற்பகல் வரை ஒத்திவைத்தார்.

வழக்கு மீளவும் பிற்பகல் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, தாக்குதலுக்குள்ளான ஆசிரியர் மன்றில் முன்னிலையானார்.

இதன்போது, எதிரிக் கூண்டில் நிற்கும் முதலாவது சந்தேகநபர் என்னைத் தாக்கினார். இரண்டாவது சந்தேகநபரும் அவ்விடத்தில் நின்றார் என்று ஆசிரியர் மன்றில் தெரிவித்தார். இதையடுத்து, "தாக்குதலுக்குள்ளான ஆசிரியருக்கு சிறிய காயங்களே உள்ளன. சாதாரண நோவுக்கும் வைத்தியசாலையில் கட்டு போடுகின்றனர் என்று எதிரிகள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி மு.றெமிடியஸ் வழக்காடினார்.

இருதரப்பு விண்ணப்பங்களையும் ஆராய்ந்த நீதவான் சி.சதீஸ்தரன் சந்தேக நபர்களை எதிர்வரும் ஜூலை 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (இ-4)

# நெடுந்தாரகை பணியாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும்



(நெடுந்தீவு)

நெடுந்தீவுக்கான கடல் வழிப்போக்குவரத்தில் ஈடுபடும் நெடுந்தாரகை பயணிகள் படகில் பணியாற்றும் பணியாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். நெடுந்தீவின் கடல் வழிப்போக்குவரத்துக்களில் ஈடுபட்டு வரும் நெடுந்தாரகை பயணிகள் படகில் படகைச் செலுத்துவதில் இருந்து ஏனைய பகுதிகளில் பணியாற்றுபவர்கள் கடற்படையைச் சேர்ந்தவர்களாகவுள்ளனர்.

இதேவேளை நெடுந்தீவு பிரதேசத்தைச் சேர்ந்த ஆறு பேர் பயணிகள் படகில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள போதும் இவர்களுக்கான நிரந்தர நியமனம் இதுவரை வழங்கப்படவில்லை என்றும் குறித்த ஆறு பேரும் தற்காலிக பணியாளர்களாகவே நீண்ட காலமாக பணியாற்றிவருகின்றனர்.

இவர்களுக்கான நிரந்தர நியமனம் இதுவரை வழங்கப்படவில்லை. இவர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் பல்வேறு தரப்பினரும் கோரியுள்ளனர்.

அத்துடன், குறித்த நெடுந்தாரகை படகு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளபோதும் இதற்கான முழுமையான சுத்திகரிப்பு இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்றும் சிறிய சிறிய திருத்தங்கள் மாத்திரமே மேற்கொள்ளப்படுவதாகவும் இவ்வாறு முழுமையான சுத்திகரிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-315)

# வாட்டி வதைக்கும் வரட்சி நெடுந்தீவு மக்கள் இடப்பெயர்வு



(நெடுந்தீவு)

நெடுந்தீவு மண்ணுக்கே உரித்தான குதிரை இனங்களும் கால்நடைகளும் அருகிச் செல்லும் நிலை காணப்படுவதாகவும் பல்வேறு தரப்பினரும் தெரிவித்துள்ளனர்.

யாழ். நெடுந்தீவில் போதிய வசதிகள் இன்மை, தொழில் வாய்ப்பின்மை, வரட்சி என்பவற்றால் இங்கு பூர்வீகமாக வாழ்ந்த மக்கள் வேறு இடங்களுக்கு இடப்பெயர்ந்து வருவதுடன், தொன்மையான குதிரை இனங்களும் அருகி வருகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, நெடுந்தீவு மேற்கு சாறாப்பிட்டி வீட்டுத்திட்டம், நெடுந்தீவு கிழக்கு 12 ஆம் வட்டாரம், 13 ஆம் வட்டாரம் போன்ற பகுதிகளில் வாழ்ந்த மக்கள் அண்மைக்காலமாக அதிகளவில் வெளியேறியுள்ளனர் என்றும் அதாவது மருத்துவ வசதி உள்ளிட்ட போதிய அடிப்படை வசதிகள் இன்மை, தொழில் வாய்ப்புக்கள் இன்மை காரணமாக அதிகளவான மக்கள் இங்கிருந்து வசதி வாய்ப்புக்களைத் தேடி வெளியேறி வருவதாகவும் இவ்வாறு ஒரு பகுதியினர் வசதி வாய்ப்புக்களைத் தேடி வெளியேறிவரும் நிலையில் மிகவும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்கள் குறித்த பகுதிகளில் தொழில் வாய்ப்புக்கள், வருமானங்கள் இன்றி தாம் பெரும் கஷ்டங்களை அனுபவிப்பதாகவும் தெரிவித்துள்ளனர். (இ-315)

# யாழ்.இந்துவில் பாடசாலைத் தோட்ட அறுவடை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, சுயன்முறைத் தொழில்நுட்ப மன்றத்தினரால் கல்லூரியில் செய்கை செய்யப்பட்டு வரும் பாடசாலைத் தோட்டத்தின் அறுவடை நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. மன்றத்தினரால் கத்தரி, வெண்டி, மிளகாய், தக்காளி மற்றும் மூலிகைத் தாவரங்கள் நாட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. குறித்த நிகழ்வில் கல்லூரி அதிபர் சதா நிமலன், மன்றப் பொறுப்பாசிரியர் க.சுவாமிநாதன் மற்றும் மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (இ)

# தொடர் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

சரவணை, பள்ளம்புலம் ஸ்ரீ முருகமூர்த்தி ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று முன்தினம் 18 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இந்த திருவிழாவை முன்னிட்டு தினமும் இரவு 7 மணிக்கு கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரனின் "செஞ்சொற் புணைமாலை" என்ற தலைப்பிலான தொடர் சொற்பொழிவு இடம் பெறுகின்றது. (இ)

## ஆதனவரியை செலுத்த நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி நிலுவை அறவீடுகளை மேற்கொள்ளும் பொருட்டு 21.06.2018 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை வட்டாரம் 2 இற்கான நடமாடும் சேவை குருநகர் சனசமூக நிலையத்தில் இடம்பெறும் என யாழ். மாநகரசபை ஆணையாளர் அறிவித்துள்ளார். (இ)

## அறிவுத் திருக்கோவிலில் உலக யோகா தினம் நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மனவளக் கலைமன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத்திருக் கோவிலில் நாளை மாலை 4.30 மணிக்கு உலகதினத்தை முன்னிட்டு ஞானாசிரியை அருள்நிதி எஸ் இந்திராவால் யோகாபற்றி சிறப்புரை நடைபெறும். (இ)



காரைநகர் விழுந்தாடை வீதியில் தொலைத்தொடர்பு கம்பம் கீழே விழுந்துள்ளது. இதனால் பாதசாரிகள் பல இன்னல்களைச் சந்தித்து வருகின்றனர். தொலைத்தொடர்பு நிறுவனத்தினரிடம் தொடர்பு கொண்டும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என பிரதேச மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (படம்:-மகாலிங்கம்)

# சர்வதேசத்தின் சதியால் ஞானசாரதேரர் சிறையில்

## டிலாந்த விதானகே குற்றச்சாட்டு



(கொழும்பு)

கலகொட அத்தே ஞான சார தேரர் கைது செய்யப்பட்டதன் பின்னணியில் சர்வதேச சதி முயற்சி இருப்பதாக பொதுபல சேனா அமைப்பின் நிறைவேற்று அதிகாரி டிலாந்த விதானகே தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் எக்னெலிகொட மனைவியான சந்தியா எக்னெலிகொடவுக்கு மரண அச்சுறுத்தல் விடுத்த குற்றச்சாட்டில் ஞானசார தேரருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் திங்கட்கிழமை கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர்இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் "2012 ஆம் ஆண்டுநாம்பொதுபலசேனாவை ஆரம்பித்தது முதல் கலகொட அத்தே ஞானசார தேரர் ஒரு போதும் தனது தனிப்பட்ட தேவைக்காக குரல் கொடுக்க வில்லை. இதனை அனைவரும் அறிவார்கள். சில செயற்பாடுகளை மேற்கொள்ளும்போதும் நாம் மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு செயற்பட்டோம்.

எனினும், சில காரணங்களினால் நீதிமன்றம் ஞான சார தேரருக்கு எதிராக தீர்ப்பளித்துள்ளது. நீதிமன்றின் இந்தத் தீர்ப்பை நாம் முழு மனதுடன் ஏற்றுக்கொள்கிறோம்.

ஆனால், இவரை சிறையில் அடைத்ததன் பின்னணியில் சர்வதேச சதியே உள்ளது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் ஒரு சில அமைச்சர்களும் ஞானசார தேரரை கைது செய்து ஒரு மாதத்துக்கேனும் சிறையில் வைக்க வேண்டும் என்றே கூறியுள்ளனர். இதன் பின்னணியில் பாரிய சதி முயற்சியொன்று உள்ளது.

இதன் பின்னணியில் அரச சார்பற்ற அமைப்புக்கள் காணப்படுகின்றன. இவருக்கு வழங்கப்பட்டுள்ள சிறைத் தண்டனையை நியாயப்படுத்தும் வகையிலேயே தற்போது சில தகவல்களும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

எனவே, இதற்கு எதிராக பொதுபல சேனா அமைப்பு மட்டுமன்றி ஏனைய அமைப்புக்களும் குரல்கொடுக்க முன்வரவேண்டும். இதன் பின்னணியில் உள்ள சதியை முறியடிக்க அனைவரும் ஒன்று திரள வேண்டும்.

மேலும், இவ்வாறான தடைகள் மூலம் எமது செயற்பாடுகளை தடுத்து நிறுத்தி விட முடியாது என்பதையும் நாம் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# சாதனை வீராங்கனைக்கு உதவி



(திருமலை)

தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் ஈட்டி எறிதலில் மூன்றாமிடம் பெற்ற திருகோணமலை மாணவி உதயவாணிக்கு அவரது பயிற்சி மற்றும் போசாக்கு உணவிற்கான மாதாந்த செலவினை ஏற்று மாதாந்த பணம் வழங்கல் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

இம்மாணவியின் குடும்ப வறுமைநிலை காரணமாக பயிற்சிகளை மேற்கொள்வதில் பல தடைகளை எதிர்நோக்குவதாக செய்திகள் மூலம் அறிந்து கொண்ட உலகத்தமிழ் மாணவர் ஒன்றியத்தினர் குறித்த மாணவியைத்தேடிச்சென்று அவரது குடும்ப நிலைமையினை ஆராய்ந்ததன் அடிப்படையில் இந்த உதவி வழங்கலை ஆரம்பித்தனர்.

இந்நிகழ்வில் உலகத் தமிழ் மாணவர் ஒன்றிய திருகோணமலை மாவட்ட இணைப்பாளர் ஜீவலதன் மற்றும் மூதூர் சிறுவர் நன்னடத்தைப்பிரிவு பொறுப்பாளர் அருட்செல்வன் மற்றும் பாடசாலை அதிபர் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-9)

# ஆலயத்திற்கு நிதியுதவி



(கரணவாய்)

பருத்தித்துறை பிரதேச உப தவிசாளர் கு.தினேஸின் வேண்டுகோளுக்கிணங்க தேவரையாளி கண்ணகை அம்மன் ஆலய குடிநீர் வழங்கல் சேவையை மேம்படுத்துவதற்காக 50 ஆயிரம் ரூபாய் பணத்தை லண்டனில் வசிக்கும் த. அருட்குமரன் ஆலய நிர்வாகத்திடம் கையளித்தார். (இ-9-60)

# இருபக்கத்தில் கால் வைத்து தேர்தலை எதிர்கொள்ள முடியாது

## எஸ்.பி. திஸாநாயக்க விளக்கம்



(கொழும்பு)

மகிந்த ஆதரவு ஸ்ரீலங்கா பொது ஜனபெரமுனவுடன் இணைந்து எதிர்வரும் தேர்தல் களுக்கு முகம்கொடுக்க தீர்மானித்துள்ளதாக அரசாங்கத்திலிருந்து விலகிய 16 பேர் கொண்ட குழு தெரிவித்துள்ளது.

மாத்தளையில் நேற்று முன்தினம் மனச்சாட்சிக்கான சுதந்திரம் எனும் தலைப்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கையில் முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

இரு பக்கத்தில் கால் வைத்துக் கொண்டு அடுத்த தேர்தலுக்கு முகம்கொடுக்க முடியாது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள ஏனையவர்களையும்இணைத்துக்கொண்டு அரசாங்க எதிர்ப்பு கூட்டணியொன்றை அமைப்பது எமது இலக்காகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# உரிய விசாரணை நடத்தினால் அரச அதிகாரிகளுக்கு ஆபத்து

## -கணக்காய்வாளர் காமினி-



(கொழும்பு)

நிதிச் சட்ட திட்டங்களை மீறிய குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவை விசாரணை செய்தது போன்று சரியான முறையில் அரச அதிகாரிகளின் நிதிக் கணக்குகளை விசாரணை செய்தால் அவர்களில் அரைவாசிப்பேர் இன்று சிறையில் இருப்பார்கள் என அரச கணக்காய்வாளர் காமினி விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற ஊடகவியலாளர்களை அறிவுறுத்தும் செயலமர்வு அரச நிதிகள் செயற்குழுவினால் பத்தரமுல்லையில்நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 40 செவ் 7 இல்
உயரம்: 6'1"
தகைமை/தொழில்: MBBS
வைத்தியசாலை
தொ.இ: B/8698

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: கேட்டை 2ஆம் பாதம்
கி.பா: 30
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:O/Lஅரசதொழில்
தொ.இ: B/8699

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: செவ் 7 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்:O/L
அவுஸ்திரேலியா PR
தொ.இ: B/8700

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: அனுசம் 1ஆம்பாதம்
கி.பா: 28சூரிசெவ் 4 இல்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்:MBBSவைத்தியர்
எதிர்பார்ப்பு: விவாகரத்தனரும் ஏற்கப்படும்
தொ.இ: B/6901

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 1ஆம்பாதம்
கி.பா: 31
தகைமை/தொழில்:HNDA அரச தொழில்
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: G/8116

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 2ஆம்பாதம்
கி.பா: 85சூரிசெவ் 8 இல்
உயரம்: 165cm
தகைமை/தொழில்: BBA NAITRA
அரசதொழில்
தொ.இ: G/8122

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: செவ் 8 இல்
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/8124

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: செவ் 1 இல்
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/8125

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 200 அறவிடப்படும்.

# விசேட நிதியொதுக்கீட்டின் மூலம் கிளிநொச்சியை அபிவிருத்தி செய்யுங்கள்

## சுயேட்சைக்குழு பிரதேசசபை உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் மனு

(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்டத்தை விசேட தேவைக்குட்பட்ட மாவட்டமாகக் கருதி விசேட நிதியொதுக்கீட்டின் மூலம் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரதேச சபைகளின் சுயேட்சைக் குழு உறுப்பினர்கள் கோரிக்கை மனுவொன்றை கையளித்துள்ளனர்.

கிளிநொச்சிக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த ஜனாதிபதியிடம் சுயேட்சைக் குழுவின் 19 உறுப்பினர்களும் கையொப்பமிட்டு கையளிக்கப்பட்டுள்ள கோரிக்கை மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இங்கு மீள்குடியேற்றத்திற்கு பின்னர் அரசின் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. முன்னெடுக்கப்பட்டும் வருகின்றன. ஆனாலும் எமது மாவட்டத்தின் தேவையை வருடாந்த வரவு- செலவுத் திட்ட நிதியொதுக்கீடு மூலம் பூர்த்தி செய்துகொள்ள முடியாது.

எனவேதான் கிளிநொச்சி மாவட்டத்தினை விசேட தேவைக்கு உட்பட்ட மாவட்டமாகக் கருதி விசேட நிதியொதுக்கீட்டை மேற்கொண்டு அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க வேண்டும். அந்த வகையில் மிக அவசியமான கோரிக்கைகளை தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம்.

இதன்படி, கிளிநொச்சி மாவட்டத்தின் மூன்று பிரதேச சபைகளுக்கும் சொந்தமான ஆயிரக்கணக்கான கிலோ மீற்றர் உள்ளக வீதிகள் விசேட நிதியொதுக்கீட்டின் கீழ் புனரமைப்புச் செய்ய வேண்டும்.

நவீன கழிவகற்றல் வாகனங்கள் பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதோடு கழிவு மீள் சுழற்சி வசதியை மேற்கொள்ளவும் உதவ வேண்டும்.

கிளிநொச்சி நகரில் அமைக்கப்பட்டு வருகின்ற சர்வதேச . தரத்திலான விளையாட்டு மைதானம் விரைவாக அபிவிருத்தி செய்ய வேண்டும்

கிளிநொச்சி மாவட்டத்தின் ஆயிரம் குடும்பங்களுக்கு உட்பட்டவர்களுக்கு இலவசமாக குடிநீர் விநியோக இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அதனை ஏனைய மக்களும் இலவசமாக பெற்றுக்கொள்ள ஆவணம் செய்ய வேண்டும். பூநகரி மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச குடிநீர் தேவையை பூர்த்தி செய்யவும் விசேட நிதியொதுக்கீடுகளை மேற்கொள்ள வேண்டும்.

கிளிநொச்சி மத்திய கல்லூரிக்குச் சொந்தமான காணி தற்போது படையினரின் பயன்பாட்டில் இருந்து விடுவித்து பாடசாலையிடம் கையளிக்க வேண்டும். அத்தோடு கரைச்சிப் பிரதேச சபைக்குச் சொந்தமான நூலகக் காணியும் முழுமையாக விடுவிக்கப் படல் வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-312)

# படையினர் வசமுள்ள மரமுந்திரிகை தோட்டம் இதுவரை விடுவிக்கப்படவில்லை

## மரமுந்திரிகை கூட்டுத்தாபனம்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேசத்தில் படையினர் வசமுள்ள மரமுந்திரிகைத் தோட்டத்தை தமக்கு விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்த போதும், அது இதுவரை விடுவிக்கப்படவில்லை என மரமுந்திரிகை கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

பூநகரி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட சுமார் இரண்டாயிரம் ஏக்கர் வரையான மரமுந்திரிகை பண்ணையை படையினர் தம்வசம் வைத்துள்ள நிலையில் இதனை விடுவிக்குமாறு தொடர்ச்சியாக கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது.

இது தொடர்பில் மரமுந்திரிகை கூட்டுத்தாபனம் கருத்து தெரிவிக்கையில், குறித்த பண்ணை சுமார் இரண்டாயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

இதில் தற்போது 450 ஏக்கர் நிலப்பரப்பில் மட்டுமே மரமுந்திரிகைகள் உள்ளன.

இதனை விடுவிக்குமாறு கடந்த 2016 ஆம் ஆண்டில் கோரிக்கை விடுத்தபோதும் இதுவரை விடுவிக்கப்படவில்லை.

இதேவேளை கடந்தாண்டில் 49.5 ஏக்கர் நிலப்பரப்பில் மரமுந்திரிகை செய்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாண்டிலும் 2 ஆயிரத்து 560 மரமுந்திரிகைக் கன்றுகள் மக்களுக்கு வழங்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ள மேற்படி மரமுந்திரிகை கூட்டுத்தாபனம் தற்போது மரமுந்திரிகை செய்கைகளில் ஈடுபவர்கள் நல்ல வருமானத்தைப் பெற்று வருகின்றனர்.

தற்போது ஒரு கிலோ மரமுந்திரிகை விதை 350 ரூபா முதல் 400 ரூபா வரை கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றது.

இதேவேளை படையினர் வசமுள்ள குறித்த பண்ணையை முழங்காவில் விநாயகர் விவசாயிகள் கூட்டுறவுச்சங்கத்திடம் பெற்றுத்தருமாறும் அதனை பயன்படுத்தி வருமானத்தைப் பெறும் அதேவேளை இப்பிரசேதத்தைச் சேர்ந்த 200 பேருக்கு வேலை வாய்புக்களை வழங்க முடியும் என கூட்றவுச் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான கோரிக்கை கடந்த மாதம் 28 ஆம் திகதி கிளிநொச்சிக்கு வருகைதந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனினால் முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)






முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மந்துவில் புதுநகர் சிவன் ஆலயத்தின் தேர்த் திருவிழா நேற்று நடைபெற்றபோது....

(படங்கள்-கண்டாவளை செய்தியாளர்)

# மத்திய மாகாண அரசுகள் இணைந்து அபிவிருத்திகளை முன்னெடுக்க விரும்பவில்லை

## வடக்கு மாகாண விவசாய அமைச்சர் தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

மத்திய அரசாங்கம் வடக்கு மாகாண அரசுடன்இணைந்து மக்களுக்கான அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ள விரும்பவில்லை என வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் தெரிவித்துள்ளார்

முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடுப் பகுதியில் அண்மையில் அட்டைக்குள் சுற்றுலா மையம் திறப்பு விழா நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் மத்திய அரசு வழங்குகின்ற மிக சொற்ப பணத்தினை வைத்து வடக்கு மாகாண அரசு சிறப்பாக செயற்படுத்தி வருகின்றது. 13ஆவது திருத்த சட்டத்தின் மூலம்தான் நாங்கள் எல்லோரும் பதவி ஏற்று இருக்கின்ற நிலை மிக சொற்ப அதிகாரங்களை கொண்டு மக்கள் மத்தியில் சேவை செய்யக்கூடிய நிலையில் தான் வடக்கு மாகாணசபை இருக்கின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பாரம்பரியங்களை சரியாக புரிந்து கொண்டவர்களால் மட்டும்தான் இங்கு சுற்றுலா மையங்கள் உருவாக்கப்பட வேண்டும்.முல்லைத்தீவு மாவட்டத்தின் மன்னர் ஆட்சிக்காலத்தினை கொண்ட இடமாக குருந்தூர் மலை காணப்படுகின்றது. அதில் தேரோடும் வீதி கூட இன்று இருக்கின்றது. இவ்வாறான இன்னும் அழிவடையாத பலவியங்களை கொண்ட பிரதேசத்தில் சுற்றுலா மையம் அமையப் பெறவேண்டும் என்பது எங்களின் விருப்பம்.

மகாவலி அபிவிருத்தி திட்டம் என்ற ஒரு விடயத்தை பிரதேசங்களை அபகரிக்கின்ற நோக்கமாகத் தான் அந்த திட்டத்தை கொண்டு வந்துள்ளார்கள்

ஆனால் இன்று மகாவலி அபிவிருத்தி திட்டத்திற்காக பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பறிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு சிங்கள மகன்கூட குடிப்பதற்கு ஒரு போத்தல் தண்ணீர் மகாவலி அபிவிருத்தி திட்டத்தில் இருந்து வடக்கு மாகாணத்திற்கு வரவில்லை என்பது தான் உண்மையான விடயம்.

எனவே மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் நீர் வந்துதான் வடக்கில் அபிவிருத்தியை செய்ய வேண்டிய தேவையில்லை.

மத்திய அரசு அபிவிருத்தி செய்ய வேண்டும் என்றால் வடக்கு மாகாணத்திடம் கொடுங்கள். மகாவலி அபிவிருத்தி திட் டத்தை வடக்கிற்கு நடை முறைப்படுத்த வேண்டும் என்று சொன்னால் வடக்கு மாகாணத்துடன் இணைந்து செய்யுங்கள்.

கடந்த ஆண்டு புனர்வாழ்வு அமைச்சர் ஊடாக அதிகளவான நிதியினை பெற்றுக்கொண்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் செயற்படுத்துவதற்காக வந்தார்கள். அவர்கள் நேரடியாக செயற்படுத்தும் பல திட்டங்களை செயற்படுத்தி சென்று விட்டார்கள்.

ஆனால் மத்திய அரசு மாகாண சபையுடன் இணைந்து செயற்படுத்த வேண்டிய நிதி எல்லாம் மீண்டும் திரும்பி சென்று விட்டது.

அவர்களுக்கு மாகாண அரசுடன் இணைந்து செயற்படுத்த விருப்பம் இல்லை. அபிவிருத்திதான் நோக்காக கொண்டால் அபிவிருத்தியினை வடக்கு மாகாணத்துடன் இணைந்து மேற்கொள்ளலாம்.

அபிவிருத்தியை மாகாண சபையினர் தடுக்கின்றார்கள் என்பதை ஒருபோதும் நம்பாதீர்கள் இதுதான் உண்மை எனத் தெரிவித்தார். (2-281)

# யானை வேலி அமைக்க ஐந்து மில்லியன் ரூபா நிதி

## ஜனாதிபதி தருவதாக தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட விசுவமடு பிரதேசத்தில் யானை வேலி அமைத்துக் கொடுப்படவுள்ளதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தனது உரையில் கூறிய போது ஜனாதிபதி அந்த நிதியை நாளைக்கே தருவதாகத் தெரிவித்துள் ளார்.

கிளிநொச்சியில் “சிறுவர்களைப் பாதுகாப்போம்” எனும் தேசிய செயற்றிட்ட மகாநாட்டில் கலந்துகொள்ள வருகைதந்த ஜனாதிபதியுடன் கலந்துரையாடிய போது அதற்கு தேவையான ஐந்து மில்லியன் ரூபா நிதியைத் தருவதற்கு சம்மதம் தெரிவித்துள்ளார் என வடக்கு முதலமைச்சர் தனது உரையில் கூறியபோது ஜனாதிபதி அந்த நிதியை நாளைக்கே தருவதாகத் தெரிவித்துள்ளார்

இதன்மூலம் விசுவமடு மக்களுக்கு யானைவேலி அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது.

கடந்த 16 ஆம் திகதி விசுவமடு அட்டைக்குளம் சுற்றுலாத்தளத்தைத் திறந்து வைக்கச் சென்ற வடக்கு மாகாண சபை முதலமைச்சரிடம் தமது குறைகளை நேரடியாக விசுவமடு மக்கள் தெரிவித்தனர்.

இதன்போது முத்லமைச்சருக்கு தமது ஊருக்குள் வருவது காட்டு யானைகள் அல்ல, இங்கு ஏதன்பகுதியில் இருந்து கொண்டுவந்து விட்ட யானைகள் அவை எனவும் கலைத்தாலும் செல்வதில்லை என்றும் யானை வேலி அமைப்பதே அதற்குத் தீர்வு எனத் தெரிவித்தனர். வேலி அமைப்பதக்கு தடையாக உள்ள வனவளப் பாதுகாப்பு பிரிவு உள்ளிட்டவர்களின் அனுமதிகளைப் பெறத் தருமாறு கூறினார்.

இதன்போது வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் முடியுமானவரை இதனை செய்துதர நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். (2-281)

# ஆனந்த சுதாகரனை விடுவிக்கக்கோரி

# மூன்று இலட்சம் கையெழுத்து மனுவை ஜனாதிபதியிடம் கல்வியமைச்சர் கையளித்தார்

(பரந்தன்)

ஆயுள் தண்டனைக் கைதியான ஆனந்த சுதாகரனை விடுவிக்கக்கோரி மூன்று இலட்சம் கையெழுத்துக்கள் அடங்கிய மனு வடக்கு மாகாணக்கல்வி அமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரனினால் “சிறுவர்களைப் பாதுகாப்போம்” எனும் தேசிய செயற்றிட்டம் தொடர்பான ஜனாதிபதியின் கிளிநொச்சி மாநாட்டில் வைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டது.



தாயை இழந்தும், தந்தையைச் சிறையில் அடைக்கப்பட்டதாலும் அநாதரவாக்கப்பட்டு, உறவினரின் அனுசரணையில் வாழும்,இரு பிள்ளைகளின் ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான எதிர்காலத்தை உத்தரவாதம் செய்யும் வகையில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு சிறையிலுள்ள அரசியல் கைதியான, ஆனந்தசுதாகரன் ஜனாதிபதியின் கருணை அடிப்படையில் விடுவிக்கப்படவேண்டுமென வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என இலங்கையின் அனைத்துப் பிரதேசங்களிலும் வாழும் தமிழ் மற்றும் சமூக, அரசியல் அமைப்புக்கள் ஏராளமான கையெழுத்துப் போராட்டங்களை கடந்த காலங்களில் நடத்தியிருந்தன.

அதனைத் தொடர்ந்து ஆனந்த சுதாகரன். கடந்த தமிழ்-சிங்கள புத்தாண்டளவில் விடுவிக்கப்படுவார் என்ற செய்தியும் ஜனாதிபதியிடம் இருந்து வெளிவந்தது.

எனினும் அவரது விடுதலையை உத்தரவாதப்படுத்த மேலும் வலியுறுத்தல்கள் தேவை என்ற அடிப்படையில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம். வடமாகாணக் கல்வி அமைச்சின் அனுசரணையுடன்,வடமாகாண கல்விச் சமூகமாகிய கல்விமான்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோரிடம் இருந்து சுமார் மூன்று இலட்சம் கையொப்பங்களைப் பெற்று ஜனாதிபதிக்குச் சமர்ப்பிக்கும்படி வடக்கு மாகாணக் கல்வி அமைச்சரிடம் கையளித்திருந்தனர்.

இதனை நேரடியாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கும் பொருட்டு, அதற்கான நேரம் ஒதுக்கித் தருமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கைகள் நினைவூட்டல்கள் அனுப்பிய போதும் அது கைகூடவில்லை.

எனினும் நேற்று முன்தினம் 18 ஆம் திகதி ஜனாதிபதி கிளிநொச்சிக்கு வருகை தர இருப்பதாலும், “சிறுவர்களைப் பாதுகாப்போம்” என்ற தேசிய செயற்றிட்டத்தை முன்னெடுக்கவே வருகின்றார் என்பதாலும் இங்கு வைத்து மூன்று இலட்சம் கையெழுத்துப் பிரதிகள் அடங்கிய மனுக்களைக் கையளிப்பது பொருத்தமாக இருக்கும்என்ற அடிப்படையில்வடக்கு மாகாண ஆளுநரின் ஊடாக இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

நேற்று முன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்ற மேற்குறிப்பிட்ட நிகழ்வில் ஆனந்த சுதாகரனை விடுதலை செய்யக்கோரி மூன்று இலட்சம் கையெழுத்துக்கள் மாகாணக் கல்வி அமைச்சரினதும், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினரதும் கோரிக்கைக் கடிதங்களுடன் கூடிய மனு ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

இதனைப்பெற்றுக்கொண்ட ஜனாதிபதி இவ்விடயத்தில் அக்கறையுடனேயே இருப்பதாகவும், அதனை நோக்கி தாம் செயற்பட்டு வருவதாகவும், நம்பிக்கையை ஏற்படுத்தும் பதிலை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சரிடம் வழங்கியிருந்தார். (2-312)



## மின்சார இணைப்பு பெற்றுத்தரப்படும்

### சிறிதரன் எம்.பி.உறுதி

பளைப் பிரதேசத்தில் முகமாலை கிராமத்தில் புனரமைக்கப்பட்ட வைரவர் ஆலயத்திற்கான மின்சார இணைப்பை பெற்றுத்தருமாறு பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனிடம் ஆலய நிர்வாகத்தினரால் கோரிக்கைவிடப்பட்டது. இதன்விளைவாக வைரவர் ஆலயத்திற்கு நேரடியாக பயணம்செய்த பாராளுமன்ற உறுப்பினர் ஆலய நிர்வாகத்துடன் கலந்துரையாடியதுடன் உடனடியாகவேமின்சாரஇணைப்பை பெற்றுத் தருவதாகவும் உறுதியளித்தார்.

இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன்,பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின்தலைவர்சு.சுரேன் ,பிரதேச சபையின் உறுப்பினர் த.ரமேஸ் மற்றும் முகமாலை கமக்கார அமைப்பின் தலைவர் மற்றும் முகமாலை வைரவர் ஆலய நிர்வாகத்தினர் என பலரும் உடனிருந்தனர்.(2)

## கற்றாலம்பிட்டியில் கற்றாழையை மீள்நடுகை செய்யுங்கள்



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் நானாட்டான் பிரதேச சபைக்குட்பட்ட வங்காலை கிராமத்தின் எல்லைப்பகுதியில் வங்காலை-மன்னார் பிரதான வீதியின் அருகில் உள்ள வனப்பிரதேசமான “கற்றாலம்பிட்டி” என அழைக் கப்படும் பிரதேசத்தினுள் காணப்பட்ட இயற்கை வளமான கற்றாழை தாவரங்களானது கடந்த மாதம் சில இனம் தெரியாத நபர்களால் வெளி பிரதேசத்திற்கு கொண்டு செல்வதற்காக பிடுங்கப்பட்ட போது பொதுமக்களின் எதிர்ப்பால் குறித்த முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டது.

சட்டவிரோதமாக அகழ்ந்தெடுக்கப்பட்ட கற்றாலம்பிட்டி பகுதியில் மிச்சமாக இருந்த கற்றாழை செடிகளும் அழுகிய நிலையில் மீள் வளர்ச்சி அடைய முடியாத நிலையில்காணப்படுகின்றன.

எஞ்சிய கற்றாழை செடிகளின் வேர்களும் குறித்த சட்டவிரோதமாக அகழ்வின் போது பாதிக்கப்பட்டதனால் ஒட்டுமொத்த கற்றாலைகளும் வாடி முழுவதுமாக அழுகிய நிலையில் காணப்படுகின்றது.இவ்வாறு அருகி வரும் வளங்களை அழித்திடாமல் பாதுகாத்து எம் வருங்கால சந்ததியினருக்கு பயன்பெற காத்திடவேண்டும்.

இவ்வாறான தவறுகள் இடம் பெறாத வகையில் எம் வளங்களை பாதுகாக்க இதற்கு பொறுப்பான அதிகாரிகள் கவனத்திற் கொண்டு கடுமையான சட்டத்தின் மூலம் அழித்திடாமல் பாதுகாக்க உதவுமாறு பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அத்துடன் கற்றாலம்பிட்டி பகுதி கற்றாழை செடிகள் வளர்வதற்கு பொருத்தமான இடமாக இருப்பதனால் அப் பிரதேசத்திலே கற்றாழை செடிகளை மீள் நடுகை செய்ய உதவ வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (2)

## நெற்செய்கை காணிகளில் வீட்டுத்திட்டங்களை அமைப்பதற்கு அனுமதிகள் பெறப்படவேண்டும்

### பூநகரி பிரதேச செயலர் எஸ். கிருஸ்னேந்திரன் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரிப்பிரதேசத்தில் நெற்செய்கை காணிகளில் வீட்டுத்திட்டங்களை அமைப்பதற்கு பிரதேச மற்றும் மாவட்ட விவசாய ஒருங்கிணைப்புக்குழு கூட்டங்களில் அனுமதிகள் பெறப்படவேண்டும் என பூநகரிப் பிரதேச செயலர் எஸ்.கிருஸ்னேந்திரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் நெற்செய்கை காணிகள் மண் இட்டு நிரப்பப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது.

அதாவது, விவசாய மாவட்டமாக காணப்படும் கிளிநொச்சி மாவட்டத்தில் பயிர்ச் செய்கை காணிகளை மண் இட்டு நிரப்பப்பட்டு மேட்டு காணிகளாக மாற்றப்பட்டு கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருவதனை தடுக்கும் வகையில் மேற்படி தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நீண்ட கால மாக பயிர்ச்செய்கை காணிகளுடன் இணைந்த மேட்டுக் காணிகளில்வாழ்ந்து வரும்குடும்பங்களுக்கான வீட்டுத்திட்டங்களை அமைப்பதற்கான அனுமதிகளைப்பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி பூநகரிப் பிரதேசத்தில் மிக நீண்டகாலமாக நெற்செய்கை காணிகளுடன் இணைந்த மேட்டு காணிகளில் வாழ்ந்து வரும் குடும்பங்களின் காணி ஆவணங்களில் நெற்பரப்பு காணிகள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளமையால் வீட்டுத்திட்டங்களை அமைப்பதற்கான அனுமதிகளைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்வதாக பலரும் கருத்து தெரிவித்துள்ளனர். இவ்வாறான அனுமதிகள் பெறுவதில் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக பூநகரிப் பிரதேச சபையின் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் கருத்து தெரிவித்த பூநகரிப் பிரதேச செயலர்,

இவ்வாறான அனுமதிகளுக்கு மாவட்ட மற்றும் பிரதேச விவசாய ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களில் அனுமதிகள் பெறப்படவேண்டும். இதற்கான அனுமதிகளை பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள் பெரும்பாக உத்தியோகத்தர்களிடம் உள்ளன. அவற்றை பெற்று விண்ணப்பிக்கும் போது அதற்கான சிபாரிசுகளை விவசாய குழுக்கூட்டங்களில் பெற்றுக்கொண்டு கமநல ஆணையாளரின்அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளமுடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

## சர்வதேச யோகாதினம் கிளிநொச்சியில்

(கிளிநொச்சி)

வடக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சர்வதேச யோகா தினம் நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் “விசேட தேவையுடைய சிறுவர் வாழ்வியலில் யோகா முறையின் சுதேச மருத்துவத் துறையின் வகிபாகம்” எனும் தொனிப்பொருளில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை சுகாதார, சுதேச மருத்துவ நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சர் வைத்திய கலாநிதி ஞானசீலன் குணசீலன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சபை மகளிர் விவகார, சமூக சேவைகள் அமைச்சர் அனந்தி சசிதரன் கலந்து கொள்ளவுள்ளார். (2)

## கனகபுரம் பாடசாலை விளையாட்டு மைதானம் ஜனாதிபதியால் மாணவர்களிடம் கையளிப்பு



ஜனாதிபதி செயலகத்தினால் பத்து மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு விமானப் படையினரால் புனரமைக்கப்பட்ட கிளிநொச்சி கனகபுரம் பாடசாலை விளையாட்டு மைதானம் நேற்று முன்தினம் ஜனாதிபதியினால் மாணவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.


கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 14 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கிளிநொச்சி அம்பாள் குளம் பொருளாதார மத்திய நிலையத்தை திறந்து வைப்பதற்காக வருகை தந்த போது கனகபுரம் பாடசாலை சமூகத்தினரால் பாடசாலை விளையாட்டு மைதானத்தை புனரமைத்து தருமாறு எழுத்து மூலம் கோரிக்கை விடப்பட்டது. அதற்கமைவாக ஜனாதிபதி செயலகத்தினால் பத்து மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு நேரடியாக விமானப்படையினரிடம் ஒப்பந்தம் வழங்கப்பட்டு அவர்களால் புனரமைப்புச் செய்யப்பட்டது.

சுற்று மதில் அமைத்தல், மைதானத்திற்கு புல் பதித்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு நேற்று முன்தினம் மாணவர்களின் பயன்பாட்டுக்கு ஜனாதிபதியினால் கையளிக்கப்பட்டுள்ளது.

1969 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கனகபுரம் பாடசாலையில் இன்று வரை நிரந்தரமான மைதானம் இன்றி காணப்பட்ட பிரச்சினைக்கு மைதானம் ஒன்று கிடைக்கப்பெற்றுள்ளமை மாணவர்களிடையே பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (2-312)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## மூலிகைகளை வளர்த்து, பராமரித்து சூழல் மாசடைதலை தடுப்போம்




பல்வேறு காரணங்களால் வளி, நீர், மண்மாசடைகின்றன. அத்துடன் காடுகளை அழிப்பதாலும் வெப்பம் சார் மாசடைதல் ஏற்படுகின்றன. மற்றும்நகரமயமாக்கல்போன்ற பல்வேறு செயற்பாடுகளினாலும் சூழல் மாசடைகின்றது.

உதாரணமாக கண்டல் காடுகள் பல்வேறு செயற்றிட்டங்களால் அழிக்கப்படுகின்றன.

அத்துடன் பெரிய குளங் கள் மூடப்படுகின்றன. இதனால் மழைநீர் சேகரிப்புகளும் இல்லாமல் போய் விடு கின்றன. உதாரணமாக சித்தர்கள், நிலவியல்பில்லாத மழைநீர், பனிநீர், ஆலங்கட்டி நீர் போன்றவையே ஆரோக்கியத்திற்கு உகந்தவையாக சித்தர்கள் எடுத்துக் கூறியுள்ளனர்.

விஞ்ஞானம் ஓர் எல்லையென மட்டுமே பதில் சொல்கிறது. அது விட்ட இடத்தைப் பற்றிக் கொள்கிறது மெய்ஞ்ஞானம்.

சித்த மருத்துவமோ விஞ்ஞானத்தில் தொடங்கி மெய்ஞ்ஞானத்தில் முடிகிறது.

மருத்துவத்தையே இலக்கியமாகவும் தத்துவமாகவும் வாழ்க்கை முறையாகவும் மாற்றிக் கொண்ட ஒரே துறை சித்த மருத்துவம் மட்டும்தான். சித்த மருத்துவத்துள் சோதிடம், யோகம், ஞானம் என்று விதம்விதமான கலைகளை அறிந்து கொள்ளலாம்.

சித்தர்கள் வாழ்க்கை உண்மைகளையும் மருத்துவ மகிமைகளையும் மறைவு மொழியில் எழுதிவிட்டுச் சென்றார்கள். தேடுங்கள் கண்டடைவீர் என்று எழுதியும் வைத்தார்கள். நாம் தேட வேண்டும், தேடிக் கண்டடைய வேண்டும் என்பதற்காக.

மண்ணின் வழிதான் மூலிக்கைகளின் மூலம் நம்மை வந்தடைய வேண்டும். நமக்கு ஏற்படுகின்ற நோயைத் தீர்க்கும் மருந்து இந்த மண்ணில் இருந்துதான் கிடைக்கவும் வேண்டும். அந்த இயற்கைப் பொருளைத்தான் நம் உடலும் ஒத்துக் கொள்ளும். நமக்கும் ஒத்துக்கொள்ளும். சங்க காலத் தமிழர்கள் தம் வாழ்வின் ஓர் அங்கமாகவே மூலிகைகளைக் கண்டார்கள். நிலங்களை ஐந்து வகையாகப் பிரித்த தமிழர்கள் அவற்றிற்கு தாவரங்களின் பெயரையே இட்டனர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய பூக்களின் பெயர்களைக் கொண்டு நிலங்களை அழைத்தார்கள். அந்தளவிற்கு அவர்களின் வாழ்க்கை இயற்கையோடு இயைந்ததாக இருந்தது. சூழல் மாசடைதலும் இன்றி பூமி இருந்தது.

ஆனால் இன்று வாழ்வியல் முறை, உணவுப் பழக்க வழக்கங்கள் முற்றிலும் மாறுபட்ட செயற்கை வாழ்வியலால் ஆரோக்கியத்தையும் தொலைத்து சூழலையும் மாசடையச் செய்கின்றான்.

மேலும் மண்ணில் பயன்படும் உரங்கள் கூட மூலிகைகளாலேயே இருந்தது. நெல்விதைக்க முன்பு வயலில் பசளையாக அவுரி இலை, காவிளாய் இலை, பூவரசம் இலைகள், ஆவாரை இலைகள் போன்றவை சேதனக் குழைகளாக நிலத்தில் புதைக்கப்பட்டு இயற்கை உரமேறிய நெற்களாக வளர்த்து இயற்கையையும் பாதுகாத்துள்ளது.

தெருவோரங்களில் மதில்களுக்குப் பதிலாக வேலிகள் அமைக்கப்பட்டு பூவரசு, முட்கிளுவை போன்ற மரங்கள்நாட்டப்பட்டு இருந்தன. இன்றைய காலகட்டத்தில் பூவரசு போன்ற இனங்கள் அருகி அழிந்து வருவதை கண்கூடாகப் பார்க்கக் கூடியதாக உள்ளது.

அன்று எமது முன்னோர்கள் தெருக்கள், வீதிகளுக்குக் கூட மருத்துவத் தாவரங்க ளின் பெயர்களை வைத்து அவற்றைப் பாதுகாத்தும் பயன்படுத்தியும் வந்துள்ளார்கள்.

உதாரணமாக கடுக்காய் வீதி, இலுப்பையடி, கருவேலடி ஒழுங்கை, தாழையடி, மருதடி, நொச்சிக்குளம், வேப் பங்குளம், ஆலம்குளாய் போன்ற இடங்களைக் குறிப்பிடலாம். இவற்றுள் பல இடங்களில் அந்த மரங்களே இன்று இல்லாமல் இருப்பது, இயற்கையை அழித்து, இயற்கையிலிருந்து பிறழ்ந்து போவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.



அத்துடன் வீடுகளில் விஷ ஜந்துகள் வீட்டுக்குள் வராமலிருப்பதற்காக கருந்துளசி, சிறியாள் நங்கை போன்ற செடிவகைகளை வளர்த்தார்கள். உதாரணமாக கருந்துளசியிலிருந்து வெளியாகும் வாயுக்கள் சூழலைச் சுத்தமாக் குகின்றன. மற்றும் ஆற்றோரங்களில் மருத மரம், தேற்றாமரம் போன்றவற்றை வளர்த் தார்கள். மருத மரத்தின் வேருக்கும், தேற்றா விதைகளுக்கும் நீரை இயற்கையாக சுத்திகரிக்கும் தன்மை உண்டுஎன்பது குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

அத்துடன் உணவு அருந்தும் தட்டுகளாக பனிவில் சொட்டு, ஆலம் விதை, சமண்டலை இலை, வாழையிலை, வாழைமடல் போன்றவற்றை தட்டுகளாக அமைத்து உணவை பரிமாறினார்கள். ஆனால் இன்று பிளாஸ்ரிக் போன்ற பாவனைகளும் தற்கால வேளாண்மை முறைகளும் மண் மாசடைவதற்கு பெருமளவு பங்களிப்புச் செய்கின்றன.

எமது சீத உஷ்ணத்திற்கு ஏற்றவாறான தாவரங்களால் பொதுவாக கருங்காலி, முதிரை, பாலை, பிரம்பு, தர்ப்பை ஆகிய மூலிகைகளாலான கட்டில், நாற்காலி, பாய் போன்றவற்றை பயன்படுத்தியமையால் வாத நோய்கள், பித்த நோய்களின் தாக்கத்திலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொண்டதோடு தாங்களாகவே இம் மூலிகை மரங்களையும் பாதுகாத்துக் கொண்டார்கள்.

அத்துடன் பெண்கள் அழகு சாதனங்களாக கண்மைக்கு கரிசலாங்கண்ணி மூலிகையும்வியர்வைத் துர்நாற்றத்தை நீக்குவதற்கு கற்றாழை மூலிகையும் முகப்பருவுக்கு திருநீற்றுப்பச்சை, வட்டத்துத்தி வேர்ப்பட்டை போன்றமூலிகைகளையும்பயன்படுத்தி வந்துள்ளார்கள். இதனால் மூலிகைகளை இனங்காண்பதிலும் அவற்றைப் பாதுகாப்பதிலும் அக்கறைகாட்டி வந்துள்ளார்கள்.

உதாரணமாக எமது தமிழ் மக்களின் தினமும் பயன்படுத்த வேண்டிய நல்லெண்ணெய் என்பதற்காக அதற்கு “தின நெய்” என்ற அர்த்தமும் அகராதியில் உண்டு. அதேபோல் இந்த நல்லெண்ணெயைசெக்கில்ஆட்டுவதற்கு புளியமரம் உரலாகவும் முதிரை உலக்கையாகவும் இலுப்பை துலாவாகவும் பயன்படுத்தப்பட்டது. இதற்குஒரு புளிய மரத்தை தறித்தால் இரண்டு மரம் நாட்டி வளர்க்க வேண்டும் என்பது அன்றைய முறை. இதை யார் இப்போது செய்வது? எனவே தூய வளியும் இயற்கை வனப்பின் காட்சிகளும் பறவைகளின் இனிய ஒலியும் எவ்வாறு இயற்கை வாழ்வில் நுகரப்படுகின்றதோ அதேபோன்று அன்றைய மக்களின் வாழ்க்கை முறைகளும் உணவுப் பழக்க வழக்கங்களும் இயற்கையுடன் ஒன்றியதாய் மகிழ்ச்சியுடன் அனுபவிப்பதாக அமைந்துள்ளது.

எனவே பண்டையகால பழக்க வழக்கங்கள், உணவு முறை, வாழ்வியல் முறைகளை சீர்தூக்கி ஆராய்ந்து பகுத்தறிவது எமது ஆரோக்கியத்திற்கும் சூழலின் ஆரோக்கியத்திற் கும் ஏற்றமானவையாகப் பின்பற்றி வாழப் பழகிக்கொள்ள வேண்டும்.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்




### பல்லவி

நயினையின் நாயகியே நாக பூஷணியே
நல்லருள் புரிவாயம்மா-அம்மா. (நயினை...)

### அனுபல்லவி

மணிபல்லவத்திலே அணி செய்யும் தாய் நீயே
பணி செய்யும் அடியார்க்கு பரமபதம் அருள்வாய் (நயினை...)

### சரணம்

மலரமுதம் குடித்து மாந்திய வண்டுபோல
அருளமுதம் பருகி ஆர்ப்பரித்தோம் அம்மா
மனமலரில் உன்னை மாண்புறக்கொலுவிருத்தி
கர மலரால் உன்னை பூசிக்கின்றோம் அம்மா (நயினை..)

எஸ். சிவானந்தராஜா
அளவெட்டி.

## அன்னபூரணியின் அழகுத்திருக்கோலம்

அருள்நிறை நயினையம்பதியில்
அன்னபூரணியின் அழகுத் திருக்கோலம்
அழகிய சிரமதில் மணிமுடி மின்ன
மலர்வதனத்தாமரை குறுநகையாட
மலரும் மின்னல் மேனி ஈசன்
திருவுடல் மேவிட கண்டேன்
மெய் மறந்து நின்றேன்.

எஸ்.கௌரி
கொக்குவில்.

## அப்பாலும் இப்பாலும்

பொறிபுலனைந்தும் கடந்தவள் நீ
புலன் வழியறிவைத் தருபவளும் நீயே!
அறியா அறிவிலும் அறிவாய் நீயே
நின்று அருள் வாக்களிப்பவள் நீ
அறிந்துன்னருளை அறிபவர்க்கு அறிவை
வளர்த்து அறிவை அறிய வைப்பவளும் நீயே!
அறிவுக்கு அப்பாலும் இப்பாலும் நின்று
அருளும் நயினை நாக பூஷணி தாயே!

இராம ஜெயபாலன்





# ஆனந்த வாழ்வு தரும் ஆனித் திருமஞ்சனம்

ஈசன் அபிஷேகப்பிரியன் என்கின்றன புராணங்கள். சதா அபிஷேகத்தை விரும்பும் அவன் நடேசனாக வடிவம் கொள்ளும் போது ஆண்டுக்கு ஆறுமுறை மட்டுமே திருமஞ்சனம் காண்கிறான்.

அந்த ஆறு அபிஷேகத் திருநாட்களே விசேஷமானவைதான். ஆனி மாதத்தில் நடக்கும் திருமஞ்சனம் சற்று கூடுதல் சிறப்பானது. எல்லா சிவாலயங்களிலுமே இத்திருவிழா கொண்டாடப்பட்டாலும் சிதம்பரத்தில் 10 நாட்கள் நடக்கும் பெரு விழாவாகவே கொண்டாடப்படுகிறது.

ஆனித்திருமஞ்சனம் தோன்றிய காரணம்: ஆனிமாதம், உத்தராயண புண்ய காலத்தின் கடைசி மாதம். நமக்கு ஓர் ஆண்டு என்பது தேவர் உலகில் ஒருநாள் என்பது கணக்கு. அந்த வகையில் தேவர்களின் பகல் பொழுது முடிந்து மாலைப் பொழுது தொடங்கும் நேரம் ஆனி மாதம் பொதுவாக சூரிய உதயம் தொடங்கும் சமயமான காலை சந்தியிலும் முடியும்நேரமான மாலை சந்தியிலும் தெய்வத்தை ஆராதிப்பது சிறப்பான பலன் தரும் என்பது ஐதீகம். அதன்படி விண்ணவர்கள் விடைவாகனனை வேண்டி வணங்கும் மாலை சந்தியே ஆனி மாதம்.

இந்த மாதத்தில் நடராஜப் பெருமான் சிறப்பு அபிஷேகம் காண்பதற்குக் காரணமாக புராணக் கதை ஒன்று உண்டு.ஒரு சமயம் அசுரர்களின் அட்ட காசத்தால் தேவர்கள் மிகவும் அல்லலுற்றார்கள். எங்கே சென்றாலும் அஞ்சி நடுங்கினார்கள். பல காலம் தொடர்ந்த அந்தப் பரிதாபமான நிலைகண்ட சிவபெருமான். அசுரர்களை அழித்து அமரர்களைக் காப்பாற்றினார்.

அரக்கர் தொல்லை முடிவுக்கு வந்தது என்றாலும் தாங்கள் பட்ட அவல நிலைய நினைத்து வருந்தினார்கள் தேவர்கள். நாளுக்கு நாள் அந்த வேதனை வாட்டவே இந்திரன் உள்ளிட்டவர்கள் ஈசனை வணங்கி மனக்கவலை மாற்றிட வேண்டுவதற்காக கயிலை நோக்கிச் சென்றார்கள். வழியில் அவர்கள் நாரத முனியைக் கண்டார்கள். தங்கள் கலக்கத்தை அவரிடம் சொன்னார்கள்.

இந்திரன் ஒருபடி மேலாகச் சென்று சகல வைபோகங்களுக்கும் அதிபதியாக இருந்தும் எப்போதும் ஆபத்து வந்து கொண்டே இருக்கிறது. அல்லற்பட்டு அஞ்சி அஞ்சி வாழ வேண்டிய நிலை! அமுதம் அருந்தியதால் சாகவும் வழியின்றி இப்படி ஒரு கேவலமான வாழ்க்கை வாழ மனம் இடமளிக்கவில்லை என்று புலம்பினான்.

அதைக் கேட்டுச் சிரித்த நாரதர் இந்திரா ஒவ்வொரு முறை சங்கடம் வரும் போதும் உதவி வேண்டி இறைவனை நினைப்பதும் பிரச்சினை தீர்ந்த பிறகு கடவுளை மறந்து போவதுமே உங்கள் வழக்கமாக உள்ளது. அதன் விளைவே இந்த நிலை! இதை மாற்ற வேண்டுமானால் நீங்கள் சிவபெருமானைக் குளிர்விக்க வேண்டும். ஆலகால விஷத்தை அருந்தியதாலும் அக்கினியை ஏந்தியிருப்பதாலும் சுடலை நீறைப் பூசியிருப்பதாலும் சிவபெருமானின் திருமேனி வெப்பத்தால் தகிக்கும். அதைத் தணிக்க மாலை சந்தியா காலத்தில் விதவிதமான அபிஷேக ஆராதனைகள் செய்யுங்கள் உங்கள் துன்பம் நீங்கும் என்று கூறினார்.

அப்படியே செய்து மனத்துயர் நீங்கப் பெற்றனர் தேவர்கள். ஆனித் திருமஞ்சனம் ஆரம்பித்தது தேவருலகில் தான். அவர்கள் மாலை சந்தியில் இந்த வழிபாட்டை செய்ததால் அவர்களது மாலை நேரம் தொடங்கும் ஆனி மாதத்தில் பூவுலகில் இப்பூசை செய்யப்படுகின்றது.

சிதம்பரத்தில் ஆனித் திருமஞ்சனம்:- தேவருலகில் நடந்த இந்த வழிபாட்டை முதலில் அறிந்தவர் பதஞ்சலி முனிவர். தனது தவவலிமையால் இந்த வழிபாட்டின் சிறப்பை உணர்ந்த அவர் ஆனி மாதத்தில் உத்திரம் சந்திரனோடு சேரும் நாளான ஆனி உத்திரதினத்தில் அது நடத்தப்படுவதையும் அறிந்து கொண்டார். அதன்படி ஆனி மாதம் உத்திர நட்சத்திரத்தன்று ஆனித்திருமஞ்சனம் எனப்படும் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் செய்ய விதிவகுத்தார். அனைத்து சிவாலயங்களிலும் திருமஞ்சனம் நடத்தப்படுமாறு பார்த்துக் கொண்டார். பதஞ்சலி முனிவரால்தான் நமக்கு ஆனித் திருமஞ்சனம் என்ற சிறப்பு நாள் கிடைத்தது.

## ஆடல் வல்லானின் ஐந்து சபைகள்:-

கோள்முதல் நாள்வரை இந்த பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தின் இயக்கமும் இறைவனின் தாண்டவத்தால்தான் நிகழ்கிறது. படைத்தல், காத்தல், மறைத்தல், அருளல், அழித்தல் ஆகிய ஐந்தொழில்கள் இறைவனுடையவை. ஒவ்வொரு தாண்டவ முறையாக வகைப்படுத்தி தனித்தனி சபையினை ஏற்படுத்தி வைத்தார்கள். பொற்சபை-சிதம்பரம், ரத்னசபை -திருவாலங்காடு, ரஜதசபை (வெற்றி சபை)- மதுரை, தாமிர சபை- திருநெல்வேலி, சித்திர சபை- திருக்குற்றாலம்.

பொற்சபை (கனகசபை):- பதஞ்சலி வியாக்ரபாதர் வேண்டுகோளுக்கு இணங்க அன்னை சிவகாமியோடு இறைவன் ஆனந்த தாண்டவம் புரிந்த இடம் தில்லை என்று மக்களால் அழைக்கப்படும் சிதம்பரம். இங்கு நடக்கும் தாண்டவம் ஐந்து தொழில்களையும் குறிக்கும் என்று கூறுகிறார்கள். சித் +அம்பரம் என்பதே சிதம்பரம் என்றானது. இறைவன் வானமாக அதாவது அண்டவெளி முழுவதும் அவனே நிறைந்திருக்கிறான் என்பதைக் குறிக்கிறது இத்தலம் என்றும் கூறுவார்கள். ஆனந்த தாண்டவம் முடிந்ததும் முனிவர்கள் அனைவரும் சிவபெருமானையே போற்றி நின்றதால் அன்னை கோபம் கொண்டாள். காளியாக அவதாரம் எடுத்து இறைவனை விட்டு விலகி தனியே கோயில் கொண்டாள். அவளது கோயில் இன்றும் தில்லைக் காளி அம்மன் கோயில் என்று விளங்குகிறது. கோபம் கொண்ட அன்னையை சமாதானம் செய்ய ஆனித் திருமஞ்சனத்தன்று காளிதேவிக்காகக் காத்திருப்பதும் அவள் வந்து இறைவனை வணங்கிய பின்பே மீண்டும் அம்பலத்துக்குச் செல்லும் வழக்கமும் இன்று வரை உள்ளது.

ரஜதசபை (வெள்ளி சபை):- மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணத்துக்காக மதுரை வந்தனர் பதஞ்சலியும் வியாக்ரபாதரும். திருமண விருந்து தொடங்கியபோது அவர்கள் ஐயனே உமது நடனத்தைப் பாராமல் நாங்கள் உணவருந்தும் வழக்கமில்லையே என்றனர். அப்போது மீனாட்சியும் சொக்கருமே சிவனும் பார்வதியாக மாறிப் புரிந்த திருநடனமே கௌரி தாண்டவம். அதனால் மதுரை வெள்ளி சபை என்னும் பெருமை பெற்றது. இந்த நடனம் காத்தல் என்னும் தொழிலைக் குறிக்கிறது. இங்கு மற்றொரு சிறப்பும் உண்டு. பாண்டிய மன்னனான ராஜசேகர பாண்டியன் அறுபத்து நான்கு கலைகளில் அறுபத்து மூன்றைக் கற்றுக் கொண்டு விட்டு அறுபத்துநான்காவதாக நடனக்கலையைக் கற்றுக் கொள்ளத் தொடங்கினான். அப்போது அவனுக்கு கால்களில் மிகுந்த வலி ஏற்பட்டது.

சில நாட்களாக ஆடும் தனக்கு இத்தனை வலி என்றால், இறைவன் யுகம் யுகமாக வலக்காலை ஊன்றி இடக்காலைத் தூக்கி ஆடுகிறாரே அவருக்கு எவ்வளவு வலிக்கும் என எண்ணினான். வருந்தினான். நடராஜரின் சந்நிதியில் நின்று கசிந்துருகி வேண்டினான். ஐயனே! உனது இடது திருவடியை ஊன்றி வலது திருவடிக்கு சற்றே ஓய்வு கொடு! என்று வணங்கினான். ஆனால் மாற்றம் எதுவும் நிகழவில்லை. எனவே, கத்தியால் தனது உயிரைப் போக்கிக் கொள்ள முயன்றான். மனமிரங்கிய பரமன் உடனே வலக்காலைத் தூக்கி இடக்காலை ஊன்றினார். இன்றும் கால் மாறி ஆடும் அபூர்வக் கோலத்தை மதுரையில் கண்டு மகிழலாம்.

ரத்னசபை:- ஊர்வசியின் சாபத்துக்கு உள்ளான பரத்வாஜ முனிவருக்கு திருவலிதாயம் என்று அழைக்கப்படும் பாடி தலத்தில் சாப விமோசனம் கிடைத்தது. ஆனாலும் மனதில் ஏதோ ஒன்று அவரை வாட்டியது. மகேசனின் ஆடல்கண்டால் மனக்குறை நீங்கும் என உணர்ந்த அவர் திருவாலங்காடு என்ற இடத்தில் கடுந்தவம் புரிந்தனர். அப்போது திருவாலங்காடு முற்றிலும் காடாகவே இருந்தது. ஊரே இல்லை. பரத்வாஜ முனிவரின் தவத்தை மெச்சிய இறைவன் ஊர்த்துவதாண்டவன் எனப்படும் தாண்டவத்தை ஆடினார். வலக்காலை முழுவதுமாக உடலை ஒட்டி மேலே தூக்கி சிரசோடு இணைத்து வைத்து ஆடுவதே ஊர்த்துவ தாண்டவம் ஆகும். மிகவும் கடினமான இந்த நடனத்தால் இத்திருத்தலம் ரத்ன சபை என்று பெயர் பெற்றது. பின்னாட்களில் காரைக்கால் அம்மையார் வழிபட்டு முக்தியடைந்த இடமும் இந்தத் திருவாலங்காடுதான்.

தாமிரசபை: அம்மையப்பர் திருமணம் கயிலையில் நடந்தபோது நிலை சரிந்த பூமியை நேர்ப்படுத்த அகத்தியரை அனுப்பினார். பூவுலகம் வந்த குறுமுனி அம்மையப்பரின் திருமணத்தைக் காண இயலாதே என ஏங்கினார். அவருக்காக அம்பா சமுத்திரத்தில் அம்மையப்பராகக் காட்சி அளித்தார் சிவபெருமான். பிறகு தாமிரபரணி நதிக்கரையில் வேணுவனம் என்ற இடத்துக்கு சென்ற அகத்தியர் அங்கு இறைவனை நோக்கிக் கடுந்தவம் செய்தார். இறைவன் காட்சி கொடுக்க இறைவா! இங்கும் நீ உனது நடனக்கோலத்தில் நிலை பெற வேண்டும்! உன்னை வணங்கும் அடியார்கள் குறை தீர்க்க வேண்டும்! என வேண்டினார். அதன் படியே சிவபெருமான் காளிகா தாண்டவம் அல்லது முனி தாண்டபவம் என்று சிறப்பிக்கப்படும் தாண்டவத்தை ஆடினார். வேணுவனமே திருநெல்வேலியாகும். அங்கு தாமிர சபை உள்ளது. இங்கு இறைவனின் ஆடல் படைத்தலைக் குறிப்பதாக உள்ளது.

சித்திரசபை:- மனிதர்களின் நன்மைக்காக இறைவன் அருளிய நாட்டியத்தின் சிறப்பைக் கேள்வியுற்ற பிரம்மாவும் திருமாலும் இறைவன் தங்களுக்காக சங்காரத் தாண்டவத்தை ஆடி அருள வேண்டும் என வேண்டினர். சங்காரத் தாண்டவம் ஆடினால் உலகம் அழிந்து விடும். ஆகையால் அந்த ஆசையை விட்டு விடுங்கள் என்று கூறினார் சங்கரன். ஆனால் பிரம்மா பிடிவாதம் பிடிக்கவே திரிகூட மலையில் அந்தத் தாண்டவத்தை ஆடுவதாகவும் அங்கு வந்து தரிசிக்குமாறும் கூறினார் விடை வாகனர்.

திருமாலும் பிரம்மாவும் தேவர்களோடு வந்து குழுமினர். இறைவனும் அம்மையும் சங்கார நடனத்தை ஆரம்பித்த சில நொடிகளிலேயே மலை நடுங்க ஆரம்பித்தது. பூமி பிளவுபடத் தொடங்கியது. அனைத்து உயிர்களும் கதறின. உடனே அந்த நடனத்தை நிறுத்துவதற்காக இறைவனை இறுகக் கட்டிப்பிடித்து நிறுத்தினார் திருமால். அப்போது ஈசனின் மேனியை திருமால் முழுவதுமாக மறைத்து விட்டார். நடனம் நின்றதும் பிரம்மன் பூமியை முன் போலச் செய்தார். தங்கள் தவறை மன்னிக்குமாறு வேண்டினர் இரு மூர்த்திகளும்.இங்கு மீண்டும் ஆனந்த தாண்டவத்தை ஆடுகிறோம். அதனால் உயிர்கள் தழைக்கும். இங்கு என் உருவத்தை முழுவதுமாக மறைத்து மக்களை அழிவிலிருந்து நீங்கள் காத்ததால் இந்த சபை சித்திர சபையாக விளங்கும். எனது சித்திரமே இங்கு இருக்கும். விக்கிரகங்கள் இருக்காது! என்று அருளினார் பரமன். ஆனந்த தாண்டவம் என்றாலும் சித்திரசபை மறைத்தல் தொழிலைக் குறிக்கிறது என்பார்கள்.

ஆனித் திருமஞ்சனம் சிறப்புகள் என்றும் ஒளி குன்றாமல் வடக்கில் தோன்றி வழிகாட்டும் துருவ நட்சத்திரத்துக்கு உரிய சிறப்பு உத்திர நட்சத்திரத்திற்கு உண்டு என்று ஜோதி சாஸ்திரம் கூறுகிறது. ஆனி மாதம் உத்திர நட்சத்திரத்தோடு கூடிய நன்னாளில் துருவ நட்சத்திரமானது தனது துணை நட்சத்திரங்களுடன் சிதம்பரம் ஆயிரங்கால் மண்டபத்துக்கு மேலாகக் காட்சியளிக்கும் என்று மிகவும் பழைமையான நூல்கள் குறிப்பிடுகின்றன. இதுவே சிதம்பர ரகசியம் என்றும் கூடச் சொல்லப்படுகிறது. அந்த நட்சத்திரக் கூட்டத்திலிருந்து வெளிவரும் காஸ் மிக் ரேஸ் எனப்படும் வானியல் கதிர்கள் நம் உடலில் பட்டால் மனதுக்கு உறுதியும் நினைத்ததை முடிக்கும் ஆற்றலும் கூடும். அதோடு சிவபெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்யும் சிறப்பும் சேர்ந்து கொள்ளும் போது அதனால் உண்டாகும் நற்பலன்களை அளவிட இயலாது.

ஆயிரங்கால் மண்டபத்திலிருந்து நடராஜரும் சிவகாமசுந்தரியும் ஆனந்த நடனம் ஆடியபடி செல்லும் திருக்காட்சியே மகா தரிசனம் எனப்படுகிறது. அந்த நேரத்தில் இறைவனோடு நாமும் வலம் வருவதால் இறையருளால் வானத்திலிருந்து வெளிப்படும் நல்ல சக்தி தரும் கதிர்கள் நம் உடலில் படுகின்றன. அதனால் உடலும் மனதும் சீராகி நம்மை ஆரோக்கியமாக இயங்க வைக்கின்றன.

ஆனித் திருமஞ்சனத்தன்று மிகவும் விசேஷமான பொருட்களால் ஆராதிக்கப்படுகிறார் இறைவன். ஒவ்வொரு பொருளும் ஒவ்வொரு பலனைத் தரக்கூடியவை என்பார்கள்.

தண்ணீர்- ஒன்பது விதமான பாவங்களைப் போக்கும். அரிசி மா- கடன் தொல்லை நீங்கும், எண்ணெய்- சுக வாழ்வு கிட்டும், நெல்லி முள்ளிப் பொடி (நெல்லிக்காய்களைத் துண்டுகளாக்கிக் காய வைத்தது) - நோய் நீங்கும், பஞ்ச கௌவியம்- மனத் தூய்மை உண்டாகும், இளநீர்- குடும்ப ஒற்றுமை , தேன்- மன மகிழ்ச்சி ஏற்படும், பால்- ஆயுள் விருத்தி, தயிர்- நன் மக்கட்பேறு, நெய்- வீடு பேறு, கரும்புச்சாறு- உடல் ஆரோக்கியம், சந்தனம் செல்வம் செழிக்கும், பன்னீர் பணத்தட்டுப்பாடு நீங்கும், பழங்கள் (பஞ்சாமிர்தம் தயாரிக்க)- அனைத்து முயற்சிகளிலும் வெற்றி.

இவை அனைத்திற்கும் மேலாக ஆனித் திருமஞ்சனத்தன்று அதிகாலை எழுந்து நீராடி விட்டு தூய மனத்துடன் நமசிவாய மந்திர த்தை ஓதினால் அஷ்ட ஐஸ்வரியங்கள் கிடைக்கும் என புராண நூல்கள் கூறுகின்றன.

பக்கத்தில் உள்ள சிவாலயத்திற்குச் சென்று ஆனித் திருமஞ்சன அபிஷேகம், ஆராதனைகளில் கலந்து கொண்டால் நினைத்தது யாவும் நடக்கும் என்பது ஐதீகம். நம்மால் இயன்ற அபிஷேகப் பொருளை அளிப்பதுடன் அம்மை அப்பரின் ஆனந்த தாண்டவத்தை கண்ணால் கண்டு வணங்கி பிறவிப் பெற்றதன் பயனை அடைவோம். சிவன் அருளால் ஆயுள், ஆரோக்கியம், ஐஸ்வரியம் முதலான 16 பேறுகளும் பெற்று உலகில் புகழோடு வாழ்வோம்.

**சிவாய! குரு சம்பவாய! சிவ தாண்டவாய நம ஓம்!**

**பவாய! சசி சேகராய! ஆனந்த தாண்டவாய நம ஓம்!**

# பாரதம்

# ஆண்டிபட்டித் தொகுதியில் இடைத்தேர்தல் நடத்தாவிட்டால் சிறை நிரப்பும் போராட்டம்

## தங்கதமிழ்செல்வன் எச்சரிக்கை



(ஆண்டிபட்டி)

ஆண்டிபட்டித் தொகுதியில் விரைவில் இடைத் தேர்தல் நடத்தாவிட்டால் மூன்று இலட்சம் மக்களை திரட்டி சிறை நிரப்பும் போராட்டம் நடத்துவேன் என தங்க தமிழ் செல்வன் எச்சரிக்கை விடுத்தார்.

18 சட்டப்பேரவை உறுப்பினர்கள் தகுதி நீக்க வழக்கில் 2 நீதிபதிகள் மாறுபட்ட தீர்ப்பு கூறினர். எனவே இந்த வழக்கு 3ஆவது அமர்வுக்கு மாற்றப்பட்டுள்ளது.

இத்தீர்ப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் கொள்கை பரப்புச் செயலர் தங்கதமிழ் செல்வன் வழக்கை வாபஸ் பெறுவதாக அறிவித்தார்.

இந்நிலையில் ஆண்டிபட்டி சட்டப்பேரவை உறுப்பினர் அலுவலக வளாகத்தில் மக்கள் கருத்து கேட்கும் கூட்டத்தை நேற்று முன்தினம் நடத்தினார். இதில் சுமார் 500 பேர் கலந்து கொண்டனர்.

18 எம்.எல். ஏக்கள் தகுதி நீக்க வழக்கில் நீண்ட விசாரணைக்குப் பிறகு தீர்ப்பு கிடைத்துள்ளது. அரசுக்கு எதிராக வாக்களித்த ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்டோர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது. இனியும் நீதிமன்றத்தை நம்பிப் பலன் இல்லை. எனவே வழக்கை வாபஸ் பெறலாமா? அல்லது இடைத்தேர்தலை சந்திக்கலாமா? எனக் கருத்து கேட்டார்.

அதற்கு பதிலளித்த மக்கள் வழக்கை வாபஸ் பெற்று இடைத்தேர்தலில் போட்டியிட வேண்டும் எனத் தெரிவித்தனர்.

இதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தங்க தமிழ்செல்வன், இந்த வழக்கை வாபஸ் பெற முடிவு செய்துள்ளேன். துணை பொதுச்செயலர் தினகரனும் என் முடிவை ஏற்றுக் கொண்டார். பிற எம்.எல். ஏக்களும் இதேபோன்ற முடிவெடுக்க வாய்ப்புள்ளது.

18 பேரும் வழக்கை வாபஸ் பெற்று ராஜினாமா செய்தால் எங்கள் போராட்டம் இன்னும் வலுவடையும்.

ஆண்டிபட்டி தொகுதியில் ஏராளமான அடிப்படை பிரச்சினைகள் உள்ளன. எனவே இங்கே ஒரு பிரதிநிதி தேவை. இங்கே உடனடியாக இடைத் தேர்தல் நடத்தாவிட்டால் மக்களை திரட்டி சிறை நிரப்பும் போராட்டம் நடத்துவேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# வலுக்கும் வர்த்

## சீனப் பொருட்களுக்கு கூடுதல் வரி விதித்து பதிலடி கொடுத்தார் ட்ரம்ப்

(வோஷிங்டன்)

சீனப் பொருட்களுக்கு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கூடுதலாக 10 சதவீதம் வரி விதிக்க முடிவு செய்துள்ளதால் இரு நாடுகளுக்கிடையே வர்த்தக போர் தீவிரமடைந்துள்ளது.

அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையே வர்த்தகப் போர் தொடங்கியுள்ளது. அமெரிக்காவில் சீனப் பொருட்கள் குவிந்து கிடப்பதுடன் மலிவாகவும் கிடைப்பதால் அமெரிக்க பொருட்களின் வர்த்தகம் சரிந்தது. இது அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. ஏற்கனவே, அமெரிக்கர்களுக்கே முன்னுரிமை என்ற கொள்கையை கடைப்பிடித்து வரும் ட்ரம்ப், சீனப் பொருட்களுக்கு 4 இலட்சம் கோடி ரூபாய் வரை வரி விதித்தார்.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் அமெரிக்க பொருட்களுக்கு சீனா கூடு தல் வரி விதித்தது. ஏற்க னவே இருக்கும் 25 சதவீத வரியுடன் தற்போது கூடுதல் வரியை விதித்த தால் அமெரிக்கா கடும் அதிருப்தி அடை ந்தது.


சீனாவின் இந்த வரிவிதிப்பு வர்த்தக சமநிலையை பாதிப்பதாக அமெரிக்கா கூறி வந்த நிலையில், சீனப் பொருட்கள் மீது கூடுதல் வரி விதிக்க திட்டமிட்டுள்ளது. அதன்படி, நேற்று முதல் 200 பில்லியன் டொலர் மதிப்பு



ள்ள சீன
கூடுதல்
இதனா

# கல்லூரி முதல் நாளிலேயே ஆயுதங்களுடன் மாணவர்கள் 50 பேர் பொலிஸாரால் கைது





(சென்னை)

சென்னையில் கல்லூரிகள் திறக்கப்பட்ட முதல் நாளிலேயே தங்கள் 'வேலை'யைக் காட்டிய மாணவர்களைப் பொலிஸார் மடக்கிப் பிடித்துக் கைது செய்தனர். மாநகரப் பேருந்துகளில் ரகளை செய்த மாணவர்கள் 50 பேர் இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

இந்த ஆண்டுக்கான கல்வியாண்டில் கல்லூரிகள் நேற்று முன்தினம் முதல் திறக்கப்பட்டன. முதல் நாள் கல்லூரியில் மாணவர்களிடையே மோதல் ஏற்படலாம் என்று பொலிஸாருக்கு ரகசியத் தகவல் கிடைத்தது. இதையடுத்து பொலிஸார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

குறிப்பாக பச்சையப்பன் கல்லூரி, மாநிலக் கல்லூரி, நந்தனம் கலைக்கல்லூரி, புதுக்கல்லூரி மாணவர்களிடையே பேருந்தில் யார் ஆதிக்கம் செலுத்துவது உள்ளிட்ட பல பிரச்சினைகளில் மோதல் ஆரம்பித்து வருகிறது. இந்த விவகாரத்தை ஒட்டி "பஸ்டே" கொண்டாடுவதை பொலிஸார் தடை செய்தனர். ஆனாலும் மாணவர்களிடையே எல்லைத் தகராறும் யார் பெரியவர் என்ற போட்டியினாலுமே மோதலும் நடக்கிறது.


இந்நிலையில் பல்வேறு இடங்களில் பொது மக்களுக்கு இடையூறாக பேருந்தில் ரகளையில் ஈடுபட்ட 50 மாணவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். இவர்களில் நந்தனம் கல்லூரி மாணவர்கள் 33 பேர். மாநிலக் கல்லூரி மாணவர் கள் 13 பேர். பச்சையப்பன் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் 4 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 50 மாணவர்களிடம் கத்திகள், கோடரி உள்ளிட்ட பயங்கர ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இதில் பச்சையப்பன் கல்லூரியைச் சேர்ந்த முன்னாள் மாணவர் மணிகண்டன், மற்றொரு கல்லூரியின் முன்னாள் மாணவர் ஜெகன் என்பவரும், ஐடிஐ மாணவர் ஒருவர் மற்றும் ஒரு சிறுவனும் அடங்குவர். இவர்களிடம் 10 பட்டாக் கத்திகள் கைப்பற்றப்பட்டன. அத்தனை கத்திகளும் சில நாட்களுக்கும் முன்தான் தயாரிக்கப்பட்டவை. இவர் கள் இதைத் தயாரித்து கல்லூரியில் மாணவர்களுக்கு வழங்க கொண்டு வந்தார்களா? எனப் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (இ)

பே

தலி

(காட
"போ
சூரிய உ
டுப்பாட்
தலிபால
என்ற அ
ஏற்பட்டு
ஆப்
நோன்ப
பதி அ
அறிவித்
முறைய
போர் நி
3 நாளி



# மெரினாவில் ஜெயலலிதாவுக்கு நினைவிடம் கட்டக் கூடாது

## உயர் நீதிமன்ற நீதிபதி தெரிவிப்பு

(சென்னை)

உலகப் புகழ்பெற்ற மெரினா கடற்கரையில் விதிமுறைகளுக்கு புறம்பாக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா நினைவிடம் உட்பட எந்தக் கட்டடமும் கட்டக் கூடாது என்பது தான் எனது தனிப்பட்ட விருப்பம் என்று தலைமை நீதிபதி இந்திரா பானர்ஜி, கருத்து தெரிவித்துள்ளார்.



மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் உடல் அடக்கம் செய்யப்பட்ட மெரினா கடற்கரையில் தமிழக அரசு சார்பில் நினைவிடம் கட்டப்படுகிறது.

சொத்துக் குவிப்பு வழக்கில் உச்ச நீதிமன்றத்தால் குற்றவாளி என அறிவிக்கப்பட்டவருக்கு அரசு சார்பில் நினைவிடம் கட்டக் கூடாது என எதிர்ப்பு தெரிவித்து சமூக ஆர்வலர் டிராபிக் ராமசாமி, சட்டத்தரணி எஸ். ஜெயசீலன் உள்ளிட்டோர் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளனர்.

'கடற்கரை ஒழுங்கு முறை மண்டல விதிமுறைகளை மீறி மெரினா கடற்கரையில் எந்தக் கட்டடமும் கட்டக் கூடாது என தடை விதிக்க வேண்டும்' என மனுவில் கோரியிருந்தனர்.

இந்த மனுக்கள் மீதான விசாரணை தலைமை நீதிபதி இந்திரா பானர்ஜி, நீதிபதி பி.டி.ஆஷா ஆகியோரைக் கொண்ட முதன்மை அமர்வில் நேற்று முன்தினம் நடந்தது.

அப்போது அரசு தலைமை சட்டத்தரணி விஜய் நாராயணன் ஆஜராகி, "மெரினா கடற்கரையில் உள்ள எம்.ஜி.ஆர். நினைவிட வளாகத்தின் உள்ளே தான் ஜெயலலிதாவுக்கும் நினைவிடம் அமைக்கப் படுகிறது.

கடலோர ஒழுங்கு முறை மண்டல விதிகள் உருவாக்கப்படுவதற்கு முன்பே எம்.ஜி.ஆர். நினைவிடம் கட்டப்பட்டு விட்டது.

மேலும் விதிமுறைகளுக்கு உட்பட்டுத்தான் ஜெயலலிதா நினைவிடம் கட்டப்பட்டு வருகிறது. இது தொடர்பான வரைபட அனுமதியை தாக்கல் செய்கிறோம்" என்றார்.

இதன் போது தலைமை நீதிபதி தெரிவிக்கையில், உலகிலேயே இரண்டாவது மிக நீளமான கடற்கரையாக விளங்கும் மெரினா தமிழகத்திற்கு மட்டுமன்றி இந்தியாவுக்கே பெருமை சேர்க்கும் கடற்கரையாக விளங்குகிறது. வீதிகளால் செல்லும் மக்கள் எந்தவொரு இடையூறும் இன்றி கடற்கரையின் அழகைக் கண்டு ரசிக்க வேண்டும்.


கடற்கரை ஒழுங்கு முறை மண்டல விதிமுறைகளுக்குப் புறம்பாக மெரினாவில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா நினைவிடம் உட்பட எந்தவொரு கட்டடமும் கட்டக்கூடாது என்பது தான் எனது தனிப்பட்ட விருப்பம்.

இது என்னுடைய சொந்த விருப்பமாக இருந்தாலும் இரு தரப்பாலும் எடுத்து வைக்கப்படும் வாதங்களைப் பொறுத்தே இந்த வழக்கின் இறுதி முடிவுக்கு வர முடியும். இவ்வாறு தலைமை நீதிபதி தெரிவித்தார்.

இதையடுத்து வழக்கின் விசாரணையை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார். (இ)

# அமெ. இராணுவத்

## ட்ரம்ப் அதிரடி உத்தரவு



அமெரிக்க இராணுவத்தில் விண்வெளிப் படையை உருவாக்க பென்டகனுக்கு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அமெரிக்க இராணுவத்தில் தரைப்படை,

# வெளிநாடு

# ...த்தகப் போர்!



...ள்ள சீனப் பொருட்களுக்கு 10 சதவீதம் கூடுதல் வரி விதிக்கப்படவுள்ளது. இதனால் இரு நாடுகளுக்கிடையி லான வர்த்தகப் போர் மேலும் தீவிரம டைந்துள்ளது.

சீனாவின் ஏற்றுக் கொள்ள முடியாத வரி விதிப்பு காரணமாக, புதிய வரிகளை விதிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருப்பதாக ட்ரம்ப் கூறியுள்ளார். மேலும் சீன அரசு தனது நியாயமற்ற நடை முறைகளை மாற்றி, அதன் சந்தைகளை அமெரிக்க பொருட்களுக்கு திறந்து, அமெரிக்காவுடன் சமநிலையான வர்த்தக உறவை ஏற் றுக் கொள்ளும்வகையில், மேலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். (இ)

# போர் நிறுத்தம் நீடிக்காது!

## தலிபான்கள் அறிவிப்பால் ஆப்கானில் பதற்றம்

(காபூல்)

"போர் நிறுத்த நீடிப்பு இல்லை. சூரிய உதயத்திற்கு முன்னர் அரசு கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளிலிருந்து தலிபான்கள் வெளியேற வேண்டும்" என்ற அறிவிப்பால் பதற்றமான நிலை ஏற்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் ரமழான் நோன்பு காலத்தையொட்டி, ஜனாதிபதி அஷ்ரப் கனி போர் நிறுத்தத்தை அறிவித்தார். அதனை ஏற்று முதல் முறையாக தலிபான்களும் 3 நாள் போர் நிறுத்தம் அறிவித்தனர். அந்த 3 நாளில் போர் நிறுத்தம் மீறப்பட வில்லை.

மாறாக ரமழான் பண்டிகையை யொட்டி ஆப்கானிஸ்தான் படையினரும், தலிபான்களும் ஒருவரையொருவர் கட்டித்தழுவி வாழ்த்து பரிமாறியதோடு, தலிபான்கள் பொதுமக்களுடன் 'செல்பி' படங்களும் எடுத்துக் கொண்டனர். இது ஆப்கானிஸ்தான் மக்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்றதால் போர் நிறுத்தத்தை மேலும் நீடிப்பதாக ஜனாதிபதி அஷ்ரப் கனி அறிவித்தார்.

ஜனாதிபதியின் இந்த முடிவை அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் வரவேற்றன.

ஆனால் ரமழான் பண்டிகை முடிந்து விட்டதால் நேற்று முன்தினம் இரவு முதல் மீண்டும் ஆயுதங்களை ஏந்த தலிபான்களுக்கு அந்த அமைப்பு உத்தரவிட்டது.

இது தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்ட செய்திக் குறிப்பில் "போர் நிறுத்தம் நீட்டிப்பு இல்லை. சூரிய உதயத்திற்கு முன்னர் அரசு கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் இருந்து தலிபான்கள் வெளியேற வேண்டும்" எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும், அரசு தரப்பு போர் நிறுத்தத்தையடுத்து 10 நாட்களுக்கு தொடரும் என்றும், அதே சமயம் பாதுகாப்புப்படை வீரர்கள் தாக்குதலுக்கு உள்ளாகிறபோது தங்களைத் தற்காத்துக் கொள்ள எதிர்த் தாக்குதலை நடத்தலாம் என்றும் ஜனாதிபதி அஷ்ரப் கனி அறிவித்துள்ளார்.



ஒரு தரப்பு போர் நிறுத்தம் முடிவுக்கு வந்து விட்டதாகவும், மற்றொரு தரப்பு போர் நிறுத்தம் தொடருவதாகவும் அறிவித்திருப்பதால் ஆப்கானிஸ்தானில் பதற்றமான சூழல் உருவாகியுள்ளது. (இ)

# “இதயத்தோடு ஆட்சி செய்ய வேண்டும்”

## குடியேற்றவாசிகளின் குழந்தைகளால் ட்ரம்ப்-மெலானியா கருத்து முரண்பாடு

(வோஷிங்டன்)

ஐக்கிய அமெரிக்காவுக்குள் சட்டவிரோதமாக நுழையும் குடியேற்றவாசிகளின் பிள்ளைகளை, அவர்களிடமிருந்து பிரித்து, அவர்களைக் கூண்டிலடைக்கும் நடைமுறைக்கு, அமெரிக்காவின் பல்வேறு தரப்பிலிருந்தும் எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது. அரசியல் ரீதியாகத் துருவப்படுத்தலை ஏற்படுத்தியுள்ள இப்பிரச்சினை தொடர்பாக, ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் மனைவியும் நாட்டின் முதற்பெண்மணியுமான மெலானியா ட்ரம்ப்பும், தனது கவனத்தைத் திருப்பியுள்ளார்.

இதற்கு முன் இருந்த முதற் பெண்மணியான மிஷெல் ஒபாமா, அரசியல் விடயங்களிலும் தனது அதிக ஆர்வத்தை வெளிப்படுத்தியிருந்த நிலையில், மெலானியா ட்ரம்ப், அரசியல் விடயங்களிலிருந்து பெருமளவுக்கு ஒதுங்கியே காணப்பட்டிருந்தார்.





இந்நிலையில் தான், அவரது பேச்சாளரால் வெளியிடப்பட்ட அறிக்கை, அதிக கவனத்தை ஈர்த்துள்ளது. "தங்களது குடும்பங்களிலிருந்து, சிறுவர்கள் பிரிக்கப்படுவதைப் பார்ப்பதை, மெலானியா ட்ரம்ப் வெறுக்கிறார். இரு தரப்புகளும் ஒன்றிணைந்து, வெற்றிகரமான குடியேற்ற சீர்திருத்தமொன்றைக் கொண்டுவருமென அவர் நம்புகிறார். அனைத்துச் சட்டங்களையும் பின்பற்றும் நாடாக இருக்க வேண்டுமென அவர் நம்பும் அதே வேளை, இதயத்துடன் ஆளும் நாடாகவும் இருக்க வேண்டு மெனவும் அவர் நம்புகிறார்" என்று, அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க - மெக்ஸிக்கோ எல்லையூடாக நாட்டுக்குள் நுழையும் குடும்பங்களிலிருந்து சிறுவர்கள் பிரிக்கப்பட்டு, தனியாக அடைத்து வைக்கப்படும் செயற்பாட்டை, ஜனாதிபதி ட்ரம்பும் அவரது அரசாங்கமும், தொடர்ச்சியாக நியாயப்படுத்தி வந்தன. அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்த சட்டமா அதிபர் ஜெவ் செஷன்ஸ், பைபிளை உதாரணங்காட்டி, அந் நடவடிக்கையை நியாயப்படுத்தியிருந்தார். வெள்ளை மாளிகையின் ஊடகச் செயலாளர் சாரா சான்டர்ஸும், அதே கருத்தையே வெளிப்படுத்தினார்.

நாட்டின் குடியேற்ற வாசிகள் தொடர்பில், கடுமையான நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்கப் போவதாக உறுதியளித்து ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி ட்ரம்ப், சிறுவர்களைப் பிரிக்கும் இந்நடைமுறையை எதிர்ப்பது போல் காட்டிக் கொண்டாலும், முன்னர் ஆட்சியிலிருந்த ஜனநாயகக் கட்சியினரின் சட்டம் காரணமாகவே இந்நிலை ஏற்பட்டுள்ளது எனக் கூறியுள்ளார். எனினும், அப்படியான சட்டமேதும் அமெரிக்காவில் இல்லாத நிலையில், தற்போதைய நிர்வாகம் கொண்டு வந்த நடைமுறை காரணமாகவே, இவ்வாறு சிறுவர்கள், தங்கள் குடும்பங்களிலிருந்து பிரிக்கப்படும் நிலை உருவாகியுள்ளது.

எனவே, "இதயத்தோடு ஆட்சி செய்ய வேண்டும்" என மெலானியா ட்ரம்ப் கூறியுள்ளமை, அவரது கணவரை விமர்சிக்கும் வகையில் அமைந்துள்ளதா என்ற கேள்விகள் எழுந்துள்ளன. ஆனால், இரு தரப்புகளும் இணைந்து, இவ்விடயத்தில் பணியாற்ற வேண்டுமென அவர் கோரியுள்ளமை, இவ் விடயத்தில் ஜனநாயகக் கட்சியினர் மீதும் பழியைப் போடுவதற்கான முயற்சியே என அரசியல் விமர்சகர்கள் கருத்துரைத்துள்ளனர். (இ)

# துருக்கி விமானப்படைத் தாக்குதலில் 26 குர்திஷ் போராளிகள் உயிரிழப்பு

(இஸ்தான்புல்)

ஈராக்நாட்டின் வடபகுதி மற்றும் துருக்கி நாட்டின் தென்கிழக்கு மாகாணங்களில் துருக்கி விமானப் படை நடத்திய தாக்குதலில் 26 குர்திஷ் போராளிகள் உயிரிழந்தனர்.

ஈராக்கிலுள்ள குர்திஷ் தான் தொழிலாளர்கள் கட்சி என்னும் அமைப்பை அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் மற்றும் துருக்கி உள்ளிட்ட நாடுகள் பயங்கரவாத அமைப்பாக அறிவித்துள்ளன.

பெரும்பாலும் ஈராக்கின் வடக்கு பகுதியில் ஆதிக்கம் செலுத்திவரும் குர்திஸ்தான் பயங்கரவாதிகள், கான்டில் மலைப்பகுதியில் முகாம்களை அமைத்துள்ளனர்.

இங்கிருந்தவாறு துருக்கி எல்லையில் பயங்கரவாதத் தாக்குதல்களை அவ்வப்போது நடத்தி வருகின்றனர்.

இவர்களை அழிக்கும் பணியில் துருக்கி நாட்டின் விமானப் படைகள் ஈடுபட்டுள்ளன.


இந்நிலையில், குர்திஷ் தான் பயங்கரவாத குழுக்கள் முகாம்கள் அமைத்து தங்கியுள்ள, தென்கிழக்கு துருக்கியின் தியார்பகிர், சிர்னாக் மாகாணங்கள் மற்றும் வடக்கு ஈராக்கின் அவாசின் - பாஸ்யான் பகுதிகளில் துருக்கி விமானப் படையினர் கடந்த 17 மற்றும் 18 ஆம் திகதிகளில் வான் தாக்குதல் நடத்தினர்.

இதில், சுமார் 23 குர்திஷ் பயங்கரவாதிகள் உயிரிழந்துள்ளனர் என டுவிட்டர் மூலம் துருக்கி இராணுவம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மேலும், பயங்கரவாதிகளின் முகாம்கள், ஆயுதக் கிடங்குகள் மற்றும் வெடிமருந்துகளும் இந்தத் தாக்குதல் மூலம் அழிக்கப்பட்டுள்ளதாகவும் துருக்கி இராணுவம் தெரிவித்துள்ளது. (இ)

# ...றுவத்தில் விண்வெளிப் படை

## ...ந்தரவு



...விண்வெளிப் ...கு ஜனாதிபதி ...பிறப்பித்துள் ...

...தரைப்படை, விமானப்படை, கடற்படை, கப்பல்படை, கடலோர பாதுகாப்பு என 5 பிரிவுகள் உள்ளன.

இந்நிலையில் 6ஆவது படைப் பிரிவாக விண்வெளிப்படை உருவாக்கப்படுகிறது. அமெரிக்க இராணுவத்தின் தலைமையகமாக பென்டகனுக்கு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உத்தரவு பிறப்பித்துள்ளார். வோஷிங்டன் வெள்ளை மாளிகையில் நேற்று நடந்த நிகழ்ச்சி ஒன்றில் ட்ரம்ப் கலந்து கொண்டார்.

இதில் அவர் மேலும் தெரிவிக்கையில், "அமெரிக்கா வெறுமனே விண்வெளியில் இருப்பை கொண்டிருப்பது போதுமானதாக இருக்காது. நாம் கண்டிப்பாக விண்வெளியில் ஆதிக்கம் செலுத்த வேண்டும்.

எனவே 6ஆவது விண்வெளிப்படையை நாம் உடனடியாக உருவாக்க வேண்டும். அதுகுறித்து இராணுவம் மற்றும் பென்டகனுக்கு நான் உத்தரவிடுகிறேன். நம்மிடம் ஏற்கனவே விமானப்படை உள்ளது. இருந்தாலும் தற்போது விண்வெளிப் படையும் அமைக்கப்படுகிறது. இரண்டும் தனி தனியானது. ஆனால் இரண்டும் சம வலிமை மிக்கவை.

விண்வெளிப்படையின் நடவடிக்கை குறித்து தற்போது உடனடியாக அறிவிக்க இயலாது. மேலும் அதை உடனடியாக அமைக்கவும் முடியாது. ஏனெனில் இதற்கு அமெரிக்க பாராளுமன்றத்தில் ஒப்புதல் பெற வேண்டும்" என்றார்.

மேலும் அவர் கூறும் போது, அமெரிக்கா ஒரு குடியேற்ற முகாமாக இருக்காது. அமெரிக்காவை ஒரு குடியேற்ற முகாமாக மாற்ற நான் ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன்" என்றார். (இ)

# அரச நிறுவனங்களால் ரூ.50 பில்லியன் நட்டம்

## சபாநாயகர் கரு ஜெயசூரிய தகவல்

(கொழும்பு)

அரசாங்க நிறுவனங்கள் கடந்த வருடத்தில் 50 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நட்டத்தை எதிர்கொண்டிருப்பதாக சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நாடாளுமன்ற ஊடகவியலாளர்களை விழிப்புணர்வூட்டும் செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே சபாநாயகர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசாங்க நிறுவனங்கள் எதிர்கொண்ட பில்லியன் கணக்கான நட்டம் குறித்து பொதுமக்கள் அதிக கவனம் செலுத்தவில்லை.

எனினும், 118 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் குறித்த விடயங்களே மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளன.

2014 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட மதிப்பீட்டில், அரசாங்கத் திணைக்களங்களினால் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களில் 40 வீதம் வீண்விரயமாகும்.

இவ்வாறான நிலையில் கோப் குழு மற்றும் அரச கணக்குக்குழு போன்றன அரசாங்க நிறுவனங்களில் ஏற்படக்கூடிய நட்டங்கள் மற்றும் வீண் விரயங்களை ஊடகங்கள் மூலம் வெளிச்சத்துக்குக் கொண்டு வருகின்றன.

ஒழுங்கான பொது நிதி முகாமைத்துவத்தை அரசாங்க நிறுவனங்கள் கடைப்பிடித்திருந்தால் இந்த பில்லியன் ரூபாய்களை பொது மக்களின் நலன்புரிக்கு அல்லது பொருளாதார அபிவிருத்திக்கு பயன்படுத்தியிருக்க முடியும் என்று சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார். (இ)

# கொழும்பு துறைமுகத்தின் எரிபொருள் குழாய் புனரமைப்புப் பணிகள் விரைவில் பூர்த்தியாகும்

## பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தில் காணப்படும் பிரதான எரிபொருள் குழாயில் ஏற்பட்ட வெடிப்பினை விரைவில் சரி செய்யும் பணிகள் இடம்பெற்று வருவதாக பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்த சேதத்தை இரண்டு தினங்களுக்குள் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பெற்றோலிய கூட்டுத்தாபனம் இந்த எரிபொருள் குழாயில் ஏற்பட்ட வெடிப்பு தொடர்பாக விசாரணையை மேற்கொண்டுள்ளது. முதற்கட்ட விசாரணையில் இந்த எரிபொருள் குழாய் 2012 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்டதாக தெரியவந்துள்ளது.

இதற்கமைய இந்த எரிபொருள் குழாய் கொள்வனவு சம்பந்தமான விடயங்கள் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ)

# நீண்டநாள் பகையால் நேர்ந்த விபரீதம் குடும்பஸ்தர் சீவல் கத்தியால் வெட்டிக்கொலை

(காத்தான்குடி)

காத்தான்குடி - ஆரையம்பதி, மாவிலங்குதுறையில் ஆறு பிள்ளைகளின் தந்தையொருவர் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை மாவிலங்கு துறையிலுள்ள வீட்டுத்திட்டப் பகுதியில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையில் சம்பவம் தொடர்பில் அயல் வீட்டுக்காரர் மற்றும் அவருக்கு உதவிய நான்கு பேரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

சம்பவத்தில் மா.லெட்சுமணன் என்பவரே உயிரிழந்துள்ளதுடன், அயல் வீட்டுக்காரருடனான நீண்ட நாள் பகையே கொலைக்குக் காரணமாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சீவல் கத்தியால் லெட்சுமணனின் தலைப்பகுதியில் சரமாரியான வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ள நிலையில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட குற்ற தடயவியல் பிரிவு பொறுப்பதிகாரி கே.ரவிச்சந்திரன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் விசேட விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

உயிரிழந்தவரின் சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# சீனர்களின் இதயத்தில் மகிந்தவுக்கு சிறப்பு இடம்



## ரஞ்சன் ராமநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

சீனாவிலுள்ள நிறுவனங்களில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நிழற் படங்களைக் காணக் கூடியதாகவுள்ளது என பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

தாம் சீனாவுக்கு மேற்கொண்டிருந்த பயணத்தின் போது முன்னணி சீன நிறுவனம் ஒன்றின் பணியகத்தில் மகிந்த ராஜபக்ஷவின் நிழற்படம் தொங்கவிடப்பட்டிருந்ததை கண்டதாக அவர் தெரிவித்தார்.

இலங்கையை சீனாவுக்கு விற்பனை செய்த மகிந்த ராஜபக்ஷவுக்கு சீனர்களின் இதயத்தில் சிறப்பாக இடம் இருப்பதை இதன்மூலம் தான் உணர்ந்து கொள்ள முடிந்தது என்றும் ரஞ்சன் ராமநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# இலங்கைப் படையினர் முதன்முறையாக பங்கேற்கும் சர்வதேச பயிற்சிக்காக புறப்பட்டது அமெரிக்க கப்பல்

(வோஷிங்டன்)

இலங்கையின் படையினர் முதல் தடவையாக பங்கேற்கும் ரிம் ஒப் பசுபிக் என்ற கடற்படை பயிற்சிக்காக அமெரிக்க விமான தாங்கி கப்பலான யு.எஸ்.எஸ்.கார்ல் வின்சன் நேற்று முன்தினம் சன்டியாகோவிலிருந்து புறப்பட்டுள்ளது.

இந்த சர்வதேச பயிற்சிகள் ஜூன் 27 முதல் ஓகஸ்ட் 2 வரை கலிபோர்னியா மற்றும் ஹவாயன் தீவுகளில் இடம்பெறவுள்ளன.

கனடா, அவுஸ்திரேலியா, பிரான்ஸ், ஜேர்மனி, இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட 26 நாடுகள் இதில் பங்கேற்கின்றன.

இலங்கை, பிரேஸில், இஸ்ரேல் மற்றும் வியட்நாம் முதலான நாடுகள் முதல் முறையாக ரிம் ஒப் பசுபிக் என்ற கடற்படை பயிற்சியில் பங்கேற்கின்றமை முக்கிய அம்சமாகும்.

இதில் 26 நாடுகளைச் சேர்ந்த ஐயாயிரம் கடற்படை வீரர்கள் உட்பட்ட 25ஆயிரம் பேர் பங்கேற்கவுள்ளனர். 50 இற்கும் மேற்பட்ட போர்க்கப்பல்களும் நீர்மூழ்கிக் கப்பல்களும் இதில் பங்கேற்கவுள்ளன. (இ)

## இன்று ஒரு தகவல்

# சிக்கனத்தின் மறுபக்கம்

மனிதர்களால் நேசிக்கப்படாத நபர்களின் பட்டியலை எடுத்தால் அதில் சிக்கனக்காரர்களின் பெயரும் இருக்கும்.

எவரைப் பற்றியும் கவலைப் படாமல் எதைப் பற்றியும் பொருட்படுத்தாமல், எப்போது பார்த்தாலும் காசை இறுக்கிப் பிடிப்பதிலேயே குறியாக இருப்பவர்களை மற்றவர்களுக்கெல்லாம் பிடிக்குமா என்ன?

சிக்கனக் கொள்கை மட்டுமே வாழ்வில் தலையாய விடயம் என்று நினைப்பவர்கள் வெற்றியாளர் பட்டியலில் இடம்பெற இயலாது. வாழ்வின் வெற்றி என்பது பொருளாதார வளத்தால் மட்டும் அளக்கப்படுவதில்லை.

அதற்காகச் சிக்கனம் தவறென்று நான் வாதிட முன்வரவில்லை. அந்த வாதம் எடுபடாது என்பதையும் நான் நன்கு உணர்கிறேன்.

மனிதர்களைவிடக் காசு முக்கியம் என்பவர்கள் மீதுதான் நமக்குக் கோபம்.

சிக்கனமானவர்களில் நியாயவாதிகளும் உண்டு. நாம் செய்து தருகிற வசதிகளை ஓசியில் கிடைக்கிறது என்பதற்காக ஏற்காமல், பிறர் பொருள் விடயத்திலும் சிக்கனமாக இருப்பவர்கள் இவர்கள். பெரியார் இந்த ரகத்தைச் சேர்ந்தவர்தான்.

ஆனால் பிறர் காசு என்றால் ஆட்டம் போடு; தன் காசு என்றால் அடக்கி வாசி என்கிற கொள்கை உடையவர்கள் கோளாறானவர்கள்.

சிக்கனத்தின் தொடர்ச்சியாக இவர்கள் வேறு சில தவறுகளையும் செய்கிறார்கள். ''ஒரு போன் பண்ணிக்கலாமா? என்று எவரேனும் கேட்டால் போன் சாவியைத் தொலைச்சுட்டேன்'' என்பார்கள். ஹோட்டலில் பில் கொடுக்கும் நேரமாகப் பார்த்து கைகழுவப் போய்விடுவார்கள். தப்பித் தவறி சர்வர் பில்லை இவரிடம் கொடுத்துவிட்டால், இனித் தவிர்ப்பது நாகரிகமில்லை என்பது கூட இவர்களுக்குப் புரிவதில்லை. அதன் பிறகும் அடுத்து அமர்ந்திருப்பவரிடம் பில்லை நகர்த்தி விடுவார்கள்.

சேர்ந்து பிக்னிக் போனால் ஒரு சில செலவுகளையாவது நாம் செய்வோம் என்று எண்ணமாட்டார்கள். எந்தக் கட்டத்திலும் தங்கள் பேர்ஸ் வெளியே வராதபடி பார்த்துக் கொள்வார்கள். இதற்கு பிக்னிக் போவானேன்?

கோப்பியா காலமெல்லாம் நீயே வாங்கு, சினிமா டிக்கெட்டா? நீ தானே கூப்பிட்டாய் நீயே வாங்கு என்பன இவர்களது கண்ணோட்டம். மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்கிற ஒரு நினைப்புத்தான் இந்த உலகில் பல தவறுகளைக் குறைக்கும் மிகப் பெரும் சாதனமாக இருந்து வருகின்றது. பொலிஸ், சட்டம் ஆகியவற்றைவிட இந்த நினைப்புத் தான் வலிமை வாய்ந்தது. இந்தச் சிந்தனைக்குக்கூட சிக்கனக்காரர்கள் மதிப்புத் தருவதில்லை என்றால் இவர்களை எந்த ரகத்தில் சேர்ப்பது?

அலெக்ஸாண்டர் தன் கைகளை வெளியில் வைத்துப் புதைக்கச் சொன்னாராம். ''உலகையே வென்ற நான் இந்த உலகிலிருந்து எதையுமே எடுத்துச் செல்லவில்லை'' என்பதை இந்த உலகம் உணரட்டும் என்பதற்காக இந்த வேண்டுகோளாம்.

உள்ளங்களைச் சம்பாதிக்கத் தவறிய சிக்கனக்காரர்களின் சிக்கனத்தை இந்த உலகம் வரவேற்கத் தயாராக இல்லை.

**லேனா தமிழ்வாணன்**

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்



செல்வி தா.குணரஞ்சினி
(யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை
ஓய்வு பெற்ற ஆசிரியர்)

தமிழ்மொழி
நேரம் : ஒரு மணித்தியாலம்

- **எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை அளிக்கவும்.**




**பொருத்தமான உருவைத் தெரிந்து கோடிடுக.**

01. நீரில் நீந்தும் உணவாகப் பயன்படும்.

1 2 3

02. கட்புல செவிப்புல சாதனம் இலத்திரனியல் உபகரணத்தைச் சேர்ந்தது.

1 2 3

03. பின்வரும் எண்கோலத்தில் பொருத்தமற்ற எண்ணின் கீழ்க் கோடிடுக.

2, 10, 5, 8, 12, 11,

1. 8, 11  2. 10, 12  3. 5, 11

04. 1, 5, 3, 9, 14, 27

1. 5, 14  2. 14, 27  3. 1,5


05. 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் எத்தனை நாட்களைக் கொண்டது.

1. 29  2. 31  3. 28

06. கோலத்திற்கு ஏற்ப வெற்றிடத்தில் இருக்க வேண்டிய எண் யாது?

123, 234, 345, ..............., 567

1. 456  2. 468  3. 678

07.  இவ்வுருவில் உள்ள சதுரத்தின் எண்ணிக்கை?

1. 15
2. 14
3. 9

08. லீப் வருடம் ஒன்றில் உள்ள நாட்களின் எண்ணிக்கை யாது?

1. 365 1/4 நாட்கள்  2. 365 நாட்கள்  3. 366 நாட்கள்

09. ஒரு முட்டை அவிய 5 நிமிடங்கள் தேவைப்படுகிறது எனில் 10 முட்டை அவிய எடுத்த நேரம் யாது?

1. 10 நிமிடங்கள்  2. 5 நிமிடங்கள்  3. 100 நிமிடங்கள்

10. முதல் 5 ஒற்றை எண்களின் கூட்டுத்தொகை யாது?


1. 15  2. 25  3. 16

11. ஒரு வைத்தியசாலையில் அதிக எண்ணிக்கையில் காணப்படுவது?

1. வைத்தியர்  2. நோயாளிகள்  3. தாதியர்

12. ஒரு வாகனத்தரிப்பிடத்தில் ஆறு கார்களும் 7 மோட்டார் சைக்கிள்களும் உள்ளன. அங்குள்ள சில்லுகளின் எண்ணிக்கை?

1. 40  2. 38  3. 18

13. 

தரப்பட்டுள்ள தளவடிவங்களைக் கொண்டு ஆக்கக் கூடிய திண்ம உரு எது?

1. உருளை  2. கோளம்  3. கூம்பகம்

14. வானவில் ஒன்றில் காணப்படாத நிறம் ஒன்று?

1. செம்மஞ்சள்  2. கறுப்பு  3. நீலம்

15. பல சமச்சீர் அச்சுக்களைக் கொண்டது.

1. முக்கோணம்  2. வட்டம்  3. செவ்வகம்


16. கட்டத்தில் உள்ள பெறுமானத்தின் சமமான பெறுமானத்தைத் தரும் விடையைத் தெரிவு செய்க. 3 + [5 x 3] = 18

1. 5 + 3  2. 10 + 5  3. 7 + 6


17. [10 + 6] + 7 = 23

1. 5 x 2  2. 2 x 8  3. 15 x 4

18. வித்தியாசமான உருவின் கீழ்க் கீறிடுக.



1 2 3.

19. 

1 2 3.

20. சரியான கோவையைத் தெரிவு செய்க.

1. 4 x 7 + 3 = 40
2. 8 x 8 + 6 = 70
3. 6 x 6 + 6 = 18

21.

1. 5 + 5 + 5 = 125
2. 7 + 3 - 6 = 16
3. 10 + 10 - 10 = 10

22. சிங்கம் : மிருகம் எனின் கிளி?

1. பச்சை  2. மிருகம்  3. பறவை


23. பாடசாலை – மாணவர்கள் எனின் வைத்தியசாலை?

1. தாதியர்கள்  2. நோயாளிகள்  3. வைத்தியர்கள்

24. 16 இன் காற்பங்குடன் 5 ஐக் கூட்டி 3 ஆல் பெருக்க வரும் விடை.

1. 13  2. 27  3. 12

25. வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்.




**1. 1  2. 8  3. 16**


26. 1/2 என்ற பின்னத்தை தசம எண்ணத்தில் கூறினால்?


1. 0.3  2. 0.5  3. 0.05

27. ஜனவரி மாதம் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை எனின் 28 ஆம் திகதி என்ன கிழமை?


1. சனிக்கிழமை  2. ஞாயிற்றுக்கிழமை  3. வெள்ளிக்கிழமை

- கீழேயுள்ள தொடர்பை அவதானித்து விடையைத் தெரிவு செய்க?





28.  இன் பெறுமானம்

1. 10  2. 8  3. 4

29.  இன் பெறுமானம்

1. 6  2. 7  3. 5

30.  இன் பெறுமானம்

1. 15  2. 16  3. 25

31. சதுர எண்ணிக்கை வரமுடியாதது எது?

1. 15 2. 16 3. 25

32. யானை தாவர உண்ணி எனின் காகம்?

1. ஊனுண்ணி 2. தாவர உண்ணி 3. அனைத்துமுண்ணி

● ஆங்கில எழுத்துக்களின் எண் பெறுமானத்தை கவனத்திற்கொண்டு விடையைத் தெரிவு செய்க.

P - 1 Q - 6 R - 7 S - 3

33. P x Q

1. 7 2. 16 3. 6

34. P + S + Q

1. 10 2. 18 3. 7

35. தோள் கொடுத்தல் என்ற மரபுத் தொடரின் கருத்துக்குப் பொருத்தமான வேறு ஒரு மரபுச் சொல்?

1. கைகலத்தல் 2. கைபிடித்தல் 3. கைகொடுத்தல்

36. 3/5 இன் சமவலுப் பின்னமாக அமைவது?

1. 7/9 2. 6/10 3. 8/25

37. 10 தொடக்கம் 19 வரையுள்ள எண்ணில் 1 எழுதப்படும் தடவைகள்?

1. 10 2. 11 3. 12

38. 9ஆல் மிகுதியின்றி வகுபடக் கூடிய எண்?

1. 163 2. 513 3. 365

39. 5 மனிதர் 10 நாளில் செய்த வேலையை 25 மனிதர் எத்தனை நாட்களில் செய்வர்?

1. 50 நாட்கள் 2. 20 நாட்கள் 3. 2 நாட்கள்

40. கண்டி நகரம் அமைந்துள்ள மாகாணம்?

1. மேல்மாகாணம் 2. மத்திய மாகாணம் 3. வடமத்திய மாகாணம்

**நேரம் :**
**இரண்டு மணித்தியாலம்**

● **பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்க.**

**நான் பிறந்த சூழல் மிகவும் அழகான இயற்கைக் காட்சிகளைக் கொண்டது. பச்சைக் கம்பளம் விரித்தது போன்ற மலைத்தொடர்கள். நன்கு செழித்து வளர்ந்திருக்கும் மரங்கள். அக்காட்சிகளைப் பார்த்துக் கனிகளை உண்டு நான் நண்பர்களுடன் பறந்து கொண்டிருப்பேன்.**

01. கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து எழுதுக.

1. நன்கு செழிந்து வளர்ந்திருந்தவை எவை?
2. உவமை ஒன்றைக் குறிப்பிடுக?
3. பழங்களை என்பதன் ஒத்தசொல் யாது?
4. தன்மைப் பெயர்ச்சொல் ஒன்றைக் குறிப்பிடுக?
5. மலைத்தொடர்கள் என்பதை பிரித்தெழுதுக.
6. கீழ்க்காலும் சுழியும் கொண்ட எழுத்தையுடைய சொல்லை எழுதுக?

02. சரியாக எழுத்துக்கூட்டப்பட்டுள்ள சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1. ஆராச்சி, ஆராய்ச்சி, ஆராட்சி
2. கைநூல், கைந்நூல், கைய்நூல்

03. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1. மாணவர்கள் பாடசாலைக்குச் ................................................ (சென்றான் / சென்றார்கள்)
2. மரங்களில் மலர்கள் ................................................ (மலர்ந்திருந்தது / மலர்ந்திருந்தன)
3. ஒவ்வொரு ................................ (பழமாகச் / பழங்களாகச்) சுவைத்து உண்டான்.
4. சிறந்த ................................ (நூல் / நூல்கள்) நல்ல நண்பர்கள் போன்றன.

04. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களைப் பூரணப்படுத்துக.

1. மயில் அகவும் போல ஆந்தை ................................
2. மானின் ஆண் கலை அது போல யானையின் ஆண் ................................

05. பழமொழியைப் பூரணப்படுத்துக.

அடம்பன் கொடியும் ................................

06. கீழே தரப்பட்டுள்ள சொற்றொடருக்குரிய தனிச் சொல்லை புள்ளிக் கோட்டில் எழுதுக.

அகர வரிசைப்படி சொற்களுக்குப் பொருள் கூறுவது.

................................................................

07. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

1. கமக்காரன் **அல்லும் பகலும்** அயராது உழைத்தான். தடித்த எழுத்திலுள்ள இணை மொழியின் கருத்து ................................ (கடின உழைப்பு / மிகவும் கவனம்) என்பதாகும்.
2. மாணவர்கள் சுற்றுலா சென்றனர். இங்கு மாணவர்கள் என்பது ...................... (முன்னிலைப் பன்மை / படர்க்கைப் பன்மை) சொல்லாகும்.
3. ஆபத்து வேளையில் **கைகொடுத்தல்** சிறந்த பண்பாடு. இங்கு கை கொடுத்தல் என்பது ............... (மனம்வருந்துதல் / உதவிசெய்தல்)

08. கீழே தரப்பட்டுள்ள பாடலில் உள்ள வெற்றிடங்களைப் பூரணப்படுத்துக.

அருமை மிக்க நண்பனுக்கு
கடிதம் எழுதவே
................................................
எடுத்துக்கொள்ளுவேன்.

09. கீழே தரப்பட்டுள்ள கவிதையை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாவுக்குரிய விடையை புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

**கண்ணே எழுந்திடுவாய்**
**கண்மணியே கண்மலர்வாய்**
**துயில் நீங்கி எழுவாய்**

இப் பாடலில் வரும் அடுக்கிடுக்குத் தொடரை எழுதுக.

................................................................

10. பின்வரும் வாக்கியத்திற்குப் பொருத்தமான குறியீடுகளை இடுக.

குழந்தாய் நீ யார் என்று அன்போடு முதியவர் கேட்டார்

11. கீழே தரப்பட்டுள்ள ஆங்கில சொல்லிற்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

1. Black board ................................................
2. Knife ................................................

12. கீழே தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களில் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1. These ............................ (is, are) Pens
2. I ............................ (am, are) eating a Mango

13. பின்வரும் வாக்கியம் ஆங்கிலத்தில் சொல்லப்படும் விதத்தில் ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

இது என்னுடைய புத்தகம் ................................................

14. பின்வரும் சிங்களச் சொல்லின் கருத்தை தமிழில் எழுதுக.

வதுஹல் பதி ................................................

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை தமிழில் எழுதுக.

மீண்டும் வாருங்கள் ................................................

16. உடற்பயிற்சியின் அவசியம் பற்றி மூன்று வாக்கியம் எழுதுக.

(ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெறவேண்டும் எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.)

1. ................................................................
2. ................................................................
3. ................................................................

● **தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் விடைகளை எழுதுக.**

17. ஐயாயிரத்து நாற்பத்து மூன்று என்ற எண்ணை இலக்கங்களில் எழுதுக.

................................................................

18. 1. 10இற்கு அடுத்து வரும் எண்ணை உரோமன் எண்ணில் எழுதுக.

................................................


2. XV, X, IX, XI ஆகிய உரோம எண்களை ஏறுவரிசைப்படுத்தி எழுதுக.

................................................

19. 1. 15 மாம்பழங்களில் 2/3 பகுதி விற்கப்பட்டால் மிகுதி எத்தனை?

2. 

0.6 என்ற தசம பின்னத்தை நிறந்தீட்டிக்காட்டுக.

20. 

இந்த உருவில் எத்தனை சமச்சீர் அச்சுக்கள் வரையலாம்?

................................................

21. 525 பேனைகளை பிள்ளையொன்றுக்கு 5 பேனைகள் வீதம் எத்தனை பிள்ளைக்கு பகிர்ந்தளிக்க முடியும்?

# மானிட வாழ்க்கையை அர்த்தமுடையதாக்கும் யோகக்கலை உணர்த்தி நிற்கும் வாழ்வியற் கூறுகள்

இந்து மதத்தின் ஊற்றுக்கண்களாகவும் மனிதவாழ்வியலை வளம்படுத்துகின்றனவாகவும் விளங்கும் இந்தியப் பெருங்கலை வடிவங்களுள் ஒன்றாகத் திகழும் யோகக்கலைக்கு காத்திரமான பங்குண்டு.மனிதப்பிறவியெடுத்த நாம், சாதார்ண மனித நிலையில் வாழ முற்படாது கடைநிலையான விலங்கு நிலையிலே வாழ்ந்து வருகிறோம். இவ்விரு நிலைகளையும் தாண்டி உயர்ந்த நிலையாகிய தெய்வீக நிலைக்குயர்த்தும் புனிதத் தன்மை வாய்ந்த கலையாக யோகக்கலை மிளிர்கின்றது. மனிதர்களிடத்தில் இயல்பாகவே உள்ள மனித குணங்களுடன் கீழான மிருக குணங்களும் மேலான தெய்வீக குணங்களும் இரண்டறக் கலந்துள்ளன. ஒருவனிடத்தில் மனித குணங்களுடன் மிருக குணங்கள் மிகுகையில் அவன் அசுரத் தனமாக,மிருகங்கள் போல் நடந்து கொள்கிறான். அதே சமயம் தெய்வீக குணங்கள் அதிகமாகும்போது அவன் புனிதனாக உயர்ந்த வாழ்க்கையை வாழத்தலைப்படுகிறான். இக்கருத்தை வலியுறுத்துவதாகவே மனிதனுக்குள் இருக்கக்கூடியதான முக்குணங்கள் பற்றி (ராஜசம்-மிருககுணம்,தாமசம் - மனிதகுணம், சத்துவம் - தெய்வீககுணம்) இந்துமதம் எடுத்தியம்புகின்றது.

மனிதன் இயற்கையின் அங்கம் என்பதால், இயற்கை கூட முக்குணங்களாலானதும் ஆளப்படுவதுமாகும். மேற்கூறப்பட்ட முக்குணங்கள் மனிதனுக்கிருக்கும் குணங்களை மட்டும் குறிப்பதல்ல. அதற்குமப்பால் பிரபஞ்சத்தின் பன்முகப்பட்ட படைப்புகள் தோன்றுவதற்கும் நிலை பெறுவதற்கும் அடிப்படையானவையாகும். இவற்றாலேயே கூர்ப்பும் நடை பெறுகிறது. கூர்ப்பு என்பது படைப்பும், அது சார்ந்த தொடர்ச்சியான விருத்தி நிலைகளும் ஆளுமையும்,உடல்,மனம், பிராணன் என்பவற்றின் சேர்க்கையுமாகும்.

இவற்றுக்கிடையிலான ஒருங்கிசைவற்ற தன்மைகள் ஏற்படுகையில்,மனிதன் முக்குணங்களின் பிடியில் சிக்கி அல்லலுறுவதுடன் பல்வேறு விதமான பிரச்சினைகளுக்கும் இடர்களுக்கும் நோய்களுக்கும் முகங்கொடுக்கின்றான். யோக சாதனையே இவற்றின் பிடியிலிருந்து மனிதனை விடுவிக்கும் கருவியாக அமைகின்றது. எனவேதான்,உயர் தரமான வாழ்க்கையை வாழ்வதற்கு உயர்ந்தமான கருவியொன்று தேவை. அதுவே யோகம் என்பதாக அமைகின்றது. இதன் பின்னணியிலிருந்து தான் இந்துப் பண்பாட்டுப் பாரம்பரியங்களும் பொதுமைப்பாடுடைய நடத்தைசார் வாழ்வியல் விழுமியங்களும் எழுச்சி பெற்றன எனக் கொள்ளலாம்.

கால,தேசவர்த்தமானங்களுக்கு அப்பாற்பட்டு விளங்கும் இக்கலையின் சிறப்புக்கூறுகள் பற்றிநோக்கு முன்,யோகம் என்ற விடயப் பரப்புப் பற்றிபூர்வாங்கமாக நோக்குவோம். பொதுவாக யோகமானது ஆழ்ந்த பொருட் தத்துவத்தை எமக்கு வெளிப்படுத்தி நிற்கிறது ."யுஜ்" எனும் வினையடியினின்று பிறந்த இச்சொற்பதம் குறித்து நிற்கும் பொருளை நோக்கின்,' இணைத்தல்'அல்லது 'ஒன்று சேர்த்தல்'என்ற நேரடி அர்த்தம் கொண்டு, நமது உடல், மனம்,ஆன்மா ஆகிய மூன்று முக்கிய பொருட்களையும் ஒன்றிணைத்து மனித வாழ்வியற் சமன்பாட்டிற்கு வித்திடும் அறிவியற் கலையாக விளங்குகிறது. இதனை இன்னொரு விதமாகக் கூறும் போது ஜீவாத்மா, பரமாத்மாவுடன் இணைதலுக்கான ஒழுக்க நெறிகளை வாழ்வியல் ரீதியான விடயங்களை போதிக்கும் துறை இதுவாகும். இறைவனால் மனிதனின் ஆன்ம ஈடேற்றம் கருதி அளிக்கப்பெற்ற அரும்பெரும் பொக்கிஷமான இக் கலையைச் சூத்திரவடிவில் முதலில் தொகுத்தளித்த பெருமை யோகி பதஞ்சலி மாமுனிவரையே சாரும். இவரே பின்னாளில் யோகத்தின் தந்தையாக போற்றிச் சிறப்பிக்கப்படுகிறார்.

சித்தத்தை செம்மைப்படுத்தும் போதே வாழ்க்கையானது சிறக்கின்றது- பூரணத்துவமடைகின்றது. வாழ்க்கை மேம்பாட்டைவதற்கு இடைவிடாத யோகப் பயிற்சிகளே பெரிதும் உதவு கின்றன என இந்துசமய நூல்களில் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளன. "சித்தமலம் அறுவித்து சிவமாக்கியெனையாண்ட அத்தன்..."என்ற திருவாசக அடிகள் மூலம் மாணிக்கவாசகர்,சித்தத்தை செம்மைப்படுத்தும் போது சிவப்பேற்றை அடையமுடியும் என்கிறார். மேலும் "சித்த விருத்தி நிரோதக"என்பது யோகத்தின் அடிப்படைக் கருத்தியல். இதனை யோகக் கலையின் தந்தையாக விளங்கும் பதஞ்சலி மாமுனிவர் கூட தனதுயோகசூத்திரத்தில் வலியுறுத்திக் கூறுகிறார்.

யோகம் சித்தவிருத்திகளை அழிக்கும் தன்மை வாய்ந்தது அதாவது சித்தம் என்பது எண்ணங்களின் / சிந்தனைகளின் ஒட்டு மொத்த இருப்பிடமாகும். இது பல நிலைகளில் பலவாறு செயற்படும் தன்மையது. நான் - எனது எனும் அகங்கார, மமகாரங்களும் சேர்ந்தியங்கும் முனைப்புறு தன்மையே சித்தமாகும். இதுவே மனிதவாழ்வை சீர்படுத்தவும் சீரழிக்கவும் காரணமாகிறது. துன்பம், விரக்தி, வெறுப்பு, கவலை போன்ற பல விரும்பத்தகாத எதிர்மறையானவிளைவுகளுக்கும் மகிழ்வு, இன்பம், வெற்றி, களிப்பு முதலியபல விரும்பப்படுகின்ற நேர்மறையான சம்பவங்களுக்கெல்லாம் காரணம்மனமாகும். எனவே முதலில் ஐம்புலன் களிடமிருந்தும் மனதை பிரித் தெடுத்து எதுவும் நிலை யற்றது என்ற யதார்த்தத்தை உணர்ந்து மெய்யெது? பொய்யெது? என்றாய்ந்துணரும் வேளை மனதை எண்ணங்களற்றதாக்குவது மிகஎளிது. எனவே நமது மனதில் பதிந்துள்ள எண்ணங்களின்முழுத்தொகுதிகளின் ஒட்டுமொத்த எழுச்சி நிலைகளே சித்த விருத்தியாகும்.

அவற்றை மனதினின்றும் அழித்தலே சித்த விருத்தி நிரோதக என்பதன்பொருள் விளக்கமாகும். இதிலிருந்து யோகக்கலையானது சித்தத்தை செம்மைப்படுத்துவதற்கான பல்வேறு வாழ்வியல் அம்சங்களையும் தத்துவங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றதெனலாம்.

யோகமானது, கோட்பாட்டு ரீதியில் - பிரயோக அடிப்படையில் நான்கு பெரும் பகுதிகளாக பிரித்து நோக்கப்படுகின்றது. அவையாவன கர்மயோகம்,பக்தியோகம், ஞானயோகம், ராஜயோகம் என்பனவாகும். இவற்றைப் பிரயோகிக்கும் வழிமுறைகள் வெவ்வேறானவையாகினும் அவற்றின் இறுதி இலக்கு ஒன்றே. அதாவது உண்மைத்தன்மையை- பூரணத்துவத்தை அறிந்துகொள்வதேயாகும். இங்கு உடலையும் மனதினையும் மையப்படுத்திய யோகத்தை இராஜ யோகமுறைக்குள்ளடக்கப்படுகிறது. யோகக்கலையின் தந்தையாக விளங்குகின்ற பதஞ்சலி மாமுனிவரின் 196 யோக சூத்திரங்களும் இராஜ யோக முறைக்குள்ளேயே வருகின்றது. பொதுவாக நோக்குமிடத்து சித்தர்கள், யோகிகள் கடைப்பிடித்த யோக முறையானது பதஞ்சலி மாமுனிவரால் யாக்கப்பெற்ற ராஜ யோகமுறையை அடியொற்றியதாகும். இஃது உடல், மனம், ஆன்மா ஆகியவற்றை ஒன்றிணைக்கும் கருவியாக தொழிற்படுகின்றது. அதாவது, ஆன்மா விடுதலையடைந்து பேரின்ப நிலையை எய்த வேண்டும் என்பதே இதன் பிரதான குறிக்கோளாகும். இது மனிதனது உடல், உள, ஆன்மீக நலன்களை மேம்படுத்துவதில் தொடங்கி இறுதி இலட்சியமான மோட்ச நிலையையடைதலீறான வாழ்வியற் கோட்பாடுகளை படிமுறையாக விளக்குகின்றது.

ராஜயோகம் வலியுறுத்துகின்ற முக்கிய விடயப் பரப்பாகிய அட்டாங்கயோகம் எனும் எட்டுவகையான வாழ்வியற் படிமுறைகள் காணப்படுகின்றன. இது பற்றிய விளக்கத்தை மிகச் சுருக்கமாக நோக்கும்போது,

1. இயமம்- தீய வற்றை விட்டொழித்தல். (கொல்லாமை,பொய் கூறாமை, களவுசெய்யாமை,காமமின்மை)

2. நியமம்- நன்றாற்றல். (பிறருக்குஉதவுதல், பரோபகாரம், தூய்மையுடைமை, வாய்மை,தவம் புரிதல்)

3. ஆசனம்-இருக்கை நிலை. (உடல் நன் நிலையடைதலுக்கான உடல் சார்ந்த பயிற்சி முறைகளை செய்தல்)

4. பிராணாயாமம்- சுவாசத்தை சீராக்கம் செய்தல். (பிராணனை தன்வயப்படுத்தி அடக்கியாளும் கலை)

5. பிரத்தியாகாரம்- ஐம்புலன்களையும் புறவுலகப் பொருட்களிலிருந்து விடுவித்து அகமுகமாகத் திருப்புதல்.

6. தாரணை- மனதை ஒருநிலைப்படுத் தல்.

7. தியானம்- மனதை கட்டுப்படுத்தி எடுத்துக்கொண்ட பொருள் மீதான உண்மைத் தன்மையை ஆழ்ந்து சிந்தித்தல், தெளிதல் நிலைதிரியா மனதினைப் பெறல்.

8. சமாதி- உணர்வொடுங்கியநிலை. அதாவது இறைவனுக்குச் சமமான (மோட்ச) நிலை என்பதாக யோகத்தின் எட்டுவிதமான படிமுறைகளும் அமைந்துள்ளமை இங்கு குறிப்பிடற்பாலது.


மனிதவாழ்வியலின் பன்முகத்தளத்தில் ஒப்புயர்வற்றதாக விளங்கும் இக்கலையின் மகத்துவத்தை தற்காலத்தில் சர்வதேசம் நன்குணர்ந்திருக்கின்றது என்பதனை நிதர்சனமாக்குவதாக உலக மக்களால் இன,மத, பேதம் கடந்து அனுசரிக்கப்பட்டு வருகின்ற சர்வதேச யோகா தினத்தைத் குறிப்பிடலாம். சமகாலத்தில் மேலைத் தேய நாடுகளைப் பொறுத்தவரையில் யோகக்கலையானது பரவலாக்கம் பெற்று வருகின்றமையைக் காணலாம்.

ஆரம்பக்கல்வி நிறுவனங்களிலிருந்து உயர்பல் கலைக்கழகங்கள் வரை இக்கலைக்கு உயரிய கௌரவம் வழங்கப்பட்டிருப்பது, வழங்கப்பட்டு வருவது இக்கலையின் பயனுறுதித் தன்மையை - சிறப்பினைப் பறைசாற்றி நிற்கிறது. தற்காலத்தில் உலகளாவிய ரீதியாக யோகப்பயிற்சி வழங்கும் நிலையங்களின் எண்ணிக்கையும்பெருகி வருகின்றமையும் அதனை கற்றுக் கொள்வதற்கான மக்கள் காட்டும் அதீத ஈடுபாடுகளும் ஆர்வங்களும் அதிகரித்து வருகின்றமையும் இக் கலை மீதான மக்களின் பற்றுறுதியை வெளிப்படுத்துகின்றது.

காலமாற்றத்தால் மக்களின் நாளாந்த வாழ்வியல் கூறுகளிலும் மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்ற நிலையில் இம்மாற்றங்களின்விளைவினால் அவர்களின் உடல், உள.சமூக.ஆன்மீக ரீதியிலான நிலைகளிலும் எதிர்மறையான தாக்கங்களும் முனைப்புற்று விளங்குகின்றன.

நவீன மருத்துவ விஞ்ஞானமானது வளர்ச்சியடைந்து உச்சம் தொட்டு நின்றாலும் அதற்கு ஈடுகொடுக்க முடியாதளவிற்கும் மனித ஆரோக்கியத்திற்கு வேட்டு வைக்கும் அளவிற்கும் உடல், உளரீதியிலான நோய்களின் தாக்கங்களும் பல்வேறு வடிவங்களில் வேகமெடுத்து வருவதனையும் காணலாம். இவற்றுக்கான ஒட்டுமொத்த அணுகுமுறையாக-தீர்வாக நமது அன்றாடவாழ்வியல் நடவடிக்கைகளில் ஒன்றாக, யோகப்பயிற்சிமுறைகளைக் கைக் கொண்டால்,எமது எதிர்கால வாழ்வு பிரகாசமானதாக மாறும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

எனவே, இத்தகு மகத்துவம் மிக்க, மிகப்புராதன காலத்துக் கலையானயோகக் கலையினை இன்றளவிலும் புனிதங்கெடாமல் பாதுகாத்து எதிர்கால சந்ததியினருக்கும் கொண்டுசெல்ல வேண்டிய வரலாற்றுக் கடமையும்பொறுப்பும் நமக்கிருக்கின்றது என்பதனை நாம் நன் குணர்ந்து செயற்பட வேண்டும். இதனை நாம் செய்யத் தவறுவோமேயாக இருந்தால் மிகப்பெரும் வரலாற்றுத் தவறை இழைத்தவர்களாவோம் என்பது சர்வ நிச்சயம்.



நாளை ஜூன் 21 ஆம் திகதி சர்வதேச யோகா தினமாகும்.இதனை முன்னிட்டு இக் கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது

ஸ்ரீ.நந்தீபரன்
யோகா போதனாசிரியர்

# ஆனி மாத இராசி பலன்கள்

## 15.06.2018-16.07.2018



விளம்பி வருடம் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசியில் குரு பகவான் வக்கிர இயக்கத்தில் இருக்கிறார். ஜூலை 4 ஆம் திகதிக்கு மேல் குரு வக்கிர நிவர்த்தியாகிறார். இராசிநாதன் வக்கிரம்பெற்று வலிமை இழந்திருக்கும் பொழுது எதிர்பார்ப்புகள் நடைபெறுவதில் தாமதங்கள் ஏற்படும். இல்லத்தில் அமைதி குறையும். பணத்தேவைகள் கடைசி நேரத்தில் தான் பூர்த்தியாகும். நெருக்கடி நிலையைச் சமாளிக்க, பிறரிடம் கைமாற்று வாங்கும் சூழ்நிலை உருவாகலாம்.

வக்கிர நிவர்த்திக்குப் பிறகு வளர்ச்சி கூடும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். ஆரோக்கியத் தொல்லை அகலும். அதிகாரிகளோடு ஏற்பட்ட பகை மாறும். அனைத்து நம்பிக்கைகளும் படிப்படியாய் நடைபெறும். ஆனால் அதே நேரத்தில் ஏழரைச் சனியில் ஜென்மச் சனியின் ஆதிக்கம் நடைபெறுகிறது. தனாதிபதியாகவும் சகாய ஸ்தானாதிபதியாகவும் விளங்கும் சனிபகவான் ஏழரையாக உலாவரும் பொழுது வாழ்வில் பல அனுபவங்களைக் கொடுப்பார்.

நண்பர்கள் யார்? பகைவர்கள் யார்? என்பதை இனம் கண்டு கொள்வீர்கள். உறவினர்களின் சுயரூபம் உங்களுக்குப் புரியும். எதிரிகளின் பலம் ஏழரைச் சனியின் ஆதிக்க காலத்தில் அதிகரிக்கும் என்பார்கள். அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது, இப்பொழுது உங்களுக்கு மறைமுக எதிர்ப்புகள் இருக்கத்தான் செய்யும். சில காரியங்களுக்கு திட்டவட்டமாக முடிவெடுக்க இயலாது. திறமை இருந்தும் அதை வெளிக் கொணர்வதில் பல தடைகள் ஏற்படலாம். மனக்குழப்பங்கள் அகலவும் பணப்புழக்கம் அதிகரிக்கவும் இனத்தார் பகை மாறவும் எடுத்த காரியங்கள் எளிதில் வெற்றி பெறவும் ஒவ்வொரு சனிக்கிழமையும் விரதமிருந்து சனிபகவானை வழிபட்டு வருவது நல்லது. ஆதியந்தப்பிரபு அருள்வழங்கும் ஆலயங்களுக்கும் சென்று வழிபட்டு வரலாம்.

இம்மாதத் தொடக்கத்தில் இருந்தே சனி வக்கிரத்தில் இருக்கிறார். குரு வக்கிர நிவர்த்தியாகிறார். செவ்வாய் வக்கிரம் பெறப்போகிறார். பஞ்சம விரயாதிபதி செவ்வாய் வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. பிள்ளைகளால் தொல்லைகள் ஏற்படும். அவர்களால் விரயங்களும் உண்டாகும். அவர்களை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. 2இல் கேது, 8இல் ராகு இருப்பதால் சர்ப்பக் கிரக வழிபாடுகளைச் செய்வது நல்லது.

### கடக புதனின் சஞ்சாரம்

ஜூன் 23ஆம் திகதி கடக இராசிக்குப் புதன் செல்கிறார். அஷ்டமத்தில் மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் கிடைக்கும். எனவே பொருளாதார பிரச்சினை ஓரளவு அகலும். புதிய முயற்சிகளில் அனுகூலம் கிடைக்கும். இல்லற வாழ்வில் இருந்த இடையூறுகள் மாறும். ஒரு சிலருக்கு வெளிநாட்டு வாய்ப்பு கைகூடும்.

### குரு வக்கிர நிவர்த்தி

ஜூலை 4ஆம் திகதி துலாம் இராசியில் குரு வக்கிர நிவர்த்தியாகிறார். இராசிநாதன் வக்கிர நிவர்த்தியாகிய பின்னால் உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள். முயற்சிகளில் முழுமையாக வெற்றி கிடைக்கும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் விலகும். பிறருக்கு வாங்கிக் கொடுத்த தொகை உரிய விதத்தில் வந்து சேரும்.




### சிம்ம சுக்கிரன் சஞ்சாரம்

ஜூலை 5 ஆம் திகதி சிம்ம இராசிக்குச் சுக்கிரன் செல்கிறார். 9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் சுக்கிரன் உத்தியோக மாற்றங்களை உருவாக்கலாம். நேர்முகத் தேர்விற்குச் சென்றும் இதுவரை பலன் கிடைக்காதவர்களுக்கு இப்பொழுது அவர்களுடைய கோரிக்கைகள், எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேறும். கடன் சுமை பாதிக்கு மேல் குறையும். கடல் பயண வாய்ப்புகள் கைகூடும். அலுவலகப் பிரச்சினைகள் அகலும்.

### செவ்வாய் வக்கிரம்

ஜூலை 9 ஆம் திகதி மகரத்தில் சஞ்சரிக்கும் செவ்வாய் வக்கிரமடைகின்றார். விரயாதிபதி செவ்வாய் வக்கிரமடைவது நன்மைதான் என்றாலும் பஞ்சமாதிபதியாகவும் செவ்வாய் விளங்குவதால் பிள்ளைகள் வழியில் பிரச்சினைகள் உருவாகலாம். விடுதிகளில் தங்கிப் படிக்கும் பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. விரயங்கள் கூடும் நேரமிது.

இம்மாதம் குடும்பத்துடன் வீற்றிருந்து அருள் வழங்கும் நவக்கிரகங்களை வழிபட்டு வருவது நல்லது.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

ஜென்மச் சனியின் ஆதிக்கம் ஒருபுறம், குருவின் வக்கிர இயக்கம் மறுபுறம் இருப்பதால், நினைத்ததை நினைத்த நேரத்தில் செய்ய இயலாது. இதுவரை மிச்சம் பிடித்து சேமித்த சேமிப்புகள் கரையலாம். கோபத்தைக் குறைத்துக் கொண்டு செயற்படுவது நல்லது. கணவன்-மனைவி ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்பட்டால் பிரச்சினைகள் ஏற்படாது. தாய் மற்றும் சகோதர வர்க்கத்தினருடன் பகை பாராட்டாமல் பேசுவது நல்லது. பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி ஒரு தொகையைச் செலவிடுவீர்கள். விலை உயர்ந்த மின்சாதனப் பொருட்களை வாங்கும் யோகம் உண்டு. பணிபுரியும் பெண்கள் மேலிடத்தின் வெறுப்பிற்கு ஆளாகலாம். எதிர்பாராத இடமாற்றம் உண்டு. அஷ்டமத்து ராகு, 2இல் கேது இருப்பதால் ஏற்படும் தடைகள் அகல யோகமான நாளில் நாகசாந்தி செய்வது நல்லது.

## ஆதாயத்தை விட விரயம் கூடும்!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



விளம்பி வருடம் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனிபகவான் விரய ஸ்தானத்தில் வக்கிரம் பெற்றிருக்கிறார். தனாதிபதியாகவும் விளங்கும் சனிபகவான் வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. மேலும் ஏழரைச் சனியும் தொடங்கி சில மாதங்களாகி விட்டது. என்னதான் உங்கள் இராசிநாதனாக சனி பகவான் இருந்தாலும், விரயச் சனியின் ஆதிக்க காலத்தில் அவர் விரயத்தைக் கொடுத்தே தீரவேண்டும். எனவே குடும்பச்சுமை கூடும். செலவுகள் அதிகரிக்கின்றதே என்று கவலைப்படுவீர்கள். திடீர், திடீரென எண்ணங்கள் மாறும். நினைத்ததைச் செய்ய முடியவில்லையே என்ற கவலை மேலோங்கும்.

உங்கள் இராசியிலேயே கேது நீண்ட நாட்களாக இருக்கிறார். ஞானகாரகன் கேது ஜென்ம இராசியில் சஞ்சரிக்கும் பொழுது ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். குலதெய்வ வழிபாடு முதல் இஷ்ட தெய்வ வழிபாடு வரை, நாளொரு தெய்வத்தை வழிபட்டுக் கொண்டிருக்கும் நேரமிது. 10இல் குரு சஞ்சரிப்பதால் பதவி மாற்றம், இடமாற்றம், உத்தியோக மாற்றம் போன்றவை பரிசீலனை செய்யப்படாமலேயே உங்களுக்கு வந்துசேரலாம்.

ஜென்ம கேதுவும், 7இல் ராகுவும் இருந்து கால சர்ப்ப தோஷத்தை உருவாக்குவதால் ஏற்ற இறக்க நிலை தொடர்ந்து வந்து கொண்டே இருக்கும். ஒருகாலத்தில் கைநிறையப் பொருள் உங்களிடம் இருக்கும். ஒருநேரத்தில் கடன் வாங்கிக் காலம் கழிக்கும் சூழ்நிலை உருவாகும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பொறுப்புகள் அடிக்கடி மாற்றப்படும். முக்கிய புள்ளிகளைப் பகைத்துக் கொள்ள நேரிடும். சொத்துகளால் பிரச்சினைகளும் சொந்தங்களால் பகையும் உருவாகலாம். நாகதோஷ அடிப்படையில் ஜாதகம் அமையும் பொழுது, தேக நலனிலும் தொல்லை வந்து கொண்டேயிருக்கும். திடீர், திடீரென மாற்றங்கள் உருவாகும். அதற்குப் பரிகாரமாக ராகு-கேதுக்களுக்குரிய சிறப்பு தலங்களுக்குச் சென்று வழிபட்டு வருவது நல்லது.

6ஆம் இடத்தில் உள்ள புதனை 12இல் உள்ள சந்திரன் பார்ப்பதால், கல்வி மற்றும் கலை சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் கைகூடும் நேரமிது. சந்திர பலம் 6 இல் இருப்பதால் துாரதேசப் பயணங்கள் கூட ஒரு சிலருக்கு அமையலாம். வெளிநாட்டில் பணிபுரிந்தவர்கள் வேலையை விட்டு விலகி, சொந்த ஊரில் இருந்தால், அவர்களுக்கு மீண்டும் புதிய வாய்ப்புக் கிடைத்து, வேறு ஒரு நாட்டிற்கு வேலைக்கு செல்லும் வாய்ப்பு வரும். இம்மாதம் 4, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் வக்கிரம் பெறப் போவதால், மாதத்தின் பிற்பகுதியில் உறவினர் பகையும், வருமானப் பற்றாக்குறையும் ஏற்படலாம். அதிலிருந்து மீள அங்காரகப் பிரீதி செய்து வருவது நல்லது.

### கடக புதன் சஞ்சாரம்

ஜூன் 23ஆம் திகதி கடக இராசிக்குப் புதன் செல்கிறார். இதன் விளைவாக விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்துசேருவார்கள். பங்காளிப் பகை மாறும். எதிர்கால முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு அதிகாரப் பதவி கிடைக்கலாம். பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துகள் நல்ல முடிவிற்கு வரும். உத்தியோகம் சம்பந்தமாகச் செய்த முயற்சிகளில் வெற்றி கிட்டும்.

### குரு வக்கிர நிவர்த்தி

உங்கள் இராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு பகவான். அவர் ஜூலை 4ஆம் திகதி 10ஆம் இடத்தில் வக்கிர




நிவர்த்தியாவதால் சகோதர பகை அகலும். பயணங்கள் அதிகரிக்கும். வாகனம் வாங்க, விற்க எடுத்த முயற்சிகளில் நற்பலன்கள் கிடைக்கும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. தன்னிச்சையாக அவர்கள் ஏதேனும் முடிவெடுப்பதன் மூலம் உங்களுக்கு மனக் கலக்கங்கள் உருவாகும்.

### சிம்ம சுக்கிரன் சஞ்சாரம்

ஜூலை 5ஆம் திகதி சிம்ம இராசிக்குச் சுக்கிரன் செல்கிறார். 5, 10இற்கு அதிபதியான சுக்கிரன் அஷ்டமத்தில் மறையும் பொழுது, தொழில் மாற்றங்களைச் செய்ய முன் வருவீர்கள். புதிய தொழில் தொடங்கும் முயற்சிக்கு நண்பர்கள் உறுதுணை புரிவர். உத்தியோகத்தர்களுக்கு சம்பள உயர்வோடு கூடிய எதிர்பார்த்த புதிய வேலை கிடைக்கலாம். எதிர்கால நலன் கருதி நீங்கள் தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். நூதனக் கருவிகள் மற்றும் குளிர்சாதனப் பொருட்களை வாங்குவதற்கான சூழ்நிலை உண்டு.

### மகர செவ்வாய் வக்கிரம்!

ஜூலை 9 ஆம் திகதி மகரத்தில் சஞ்சரிக்கும் செவ்வாய் வக்கிரம் பெறுகிறார். செவ்வாய் வக்கிரமடைவது அவ்வளவு நல்லதல்ல. இடம் தொடர்பான பிரச்சினைகள் தலை தூக்கும். பண நெருக்கடி அதிகரிக்கும். பக்கபலமாக இருப்பவர்கள் விலகிச் செல்லலாம். நிதானத்துடன் செயற்பட வேண்டிய நேரமிது.


இம்மாதம் ராகு-கேதுக்கள் வழிபாடும் வடக்குப் பார்த்த ஆனைமுகப் பெருமானையும் வழிபட்டு வருவது நல்லது..

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

எதையும் அவசரப்படாமல் நிதானமாகச் செயற்படவேண்டிய மாதம் இது. பணப் பற்றாக்குறை ஏற்படும் என்றாலும், காரியங்கள் கடைசிநேரத்தில் கைகூடி விடும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட அனுசரித்துச் செல்வது நல்லது. பிள்ளைகளுக்கான சுபகாரியங்கள் கைகூடும். விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்திணைவர். பிறருக்காக பணப் பொறுப்புகள் சொல்வதைத் தவிர்ப்பது நல்லது. தாய்வழி ஆதரவு ஓரளவே கிடைக்கும். பிள்ளைகளின் உத்தியோக நலன்கருதி எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும். பணிபுரியும் பெண்களுக்கு வேலை பார்க்கும் இடத்தில் தொல்லைகளும் சகப் பணியாளர்களால் மனக்கசப்புகளும் உருவாகும். இடமாற்றங்கள் வருவதில் தாமதம் ஏற்படலாம். நடராஜப் பெருமான் வழிபாடும், நந்தி வழிபாடும் நன்மையை வழங்கும்.

## விலை உயர்ந்த பொருட்களை வங்குவீர்கள்!

(தொடரும்)



யாழ்ப்பாணம்-அச்சுவேலி பத்தமேனி பிள்ளையார் கோவில் முதலாம் திருவிழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு வெகுவிமரிசையாக இடம்பெற்றது. (படங்கள்: தீபன்)

# கடவுளாலும் கைவிடப்பட்டவர்கள்

ஒருநாட்டின் அசாதாரண சூழ்நிலைகளின் காரணமாகக் கட்டாயத்தின் பேரில் அல்லது வலுக்கட்டாயமான நிர்ப்பந்தத்தின் மூலமாக சூழ்நிலைக் கைதியாகதான் பிறந்து வளர்ந்த நாட்டை விட்டு உயிரைப் பாது காக்கும் ஒரே நோக்குடன் தனது நாட்டின் பூகோள வரைபட எல்லையை தாண்டி புகலிட அந்தஸ்து கோரிசெல்பவர் "அகதி" என சர்வதேச சட்டங்களால் வரையறை செய்யப்படுகின்றனர். போரும் மனிதாபிமான நெருக்கடியும் நிறைந்த இவ்வுலகில் 65.6 மில்லியன் மக்கள் கடவுளாலும் கைவிடப்பட்ட அகதிகள் எனும் அந்தஸ்தில் வாழ்ந்து வருகின்றனர். டிசெம்பர் மாதம் 4ஆம் திகதி 2000 ஆம் ஆண்டு ஐ.நா பொதுச் சபையின் தீர்மானத்தின்படி ஆண்டுதோறும் ஜூன் மாதம் 20 ஆம் திகதி அகதிகளின் உரிமைகளை வலுப்படுத்தும் நோக்குடன் ஐ.நா அகதிகள் அலுவலகத்தின் உயர்ஸ்தானிகரின் தலைமையில் கொண்டாடுவது என முடிவெடுக்கப்பட்டு 2001 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை தொடர்ச்சியாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இந்நாளில்ஏனைய பல பொது சிவில் செயற்பாட்டு அமைப்புகள் மற்றும் ஏனைய பல மனிதநேய தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் மேற்படிதினத்தை எழுச்சியுடன் கொண்டாடி வருகின்றன. முதலாம் உலகப் போர் மற்றும் இரண்டாம் உலகப்போர் என்பன பூமிக்கு கோடிக்கணக்கான அகதிகளை பரிசாக அளித்தது. அதன் விளைவாக 1951 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை அகதிகளுக்கான உரிமைகளை வலியுறுத்தும் சட்டங்களை மிக கவனத்துடன் சட்டவாக்கம் செய்தது. எது எப்படியாயினும் சட்டங்கள் இன்றளவு வரை பெரும்பாலும் புத்தக அளவிலேயே சிறை வைக்கப்பட்டுள்ளன, நடைமுறையில் பலவிதத்திலும் தோற்றுள்ளது.

ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரையில் அக்தி என்பது நன்கு பரிச்சயமானதும் இயல்பானதுமான வார்த்தைப் பிரயோகம். ஈழத்தமிழர்களில் ஒருமில்லியனுக்கும் மேற்பட்டவர்கள் அகதிகளாகச் சென்று தற்சமயம் இந்தியா, கனடா, பிரித்தானியா, பிரான்ஸ், அவுஸ்திரேலியா, ஜேர்மனி, இத்தாலி, அமெரிக்கா, சுவிஸ், நோர்வே போன்ற பல நாடுகளில் கணிசமான அளவில் வாழ்ந்து வருகின்றனர். 1983 ஆம்ஆண்டு ஜுலைக்கலவரம் மற்றும் அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற ஆயுதப் போராட்டம் இலங்கையின் ஈழத் தமிழர்களை உலகமெங்கும் பரவச் செய்தது. நம்பத்தகுந்த இணையத்தளங்களின் கருத்துக்களின்படி கனடாவில் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்களும் பிரித்தானியா, இந்தியா ஆகிய நாடுகளில் தலா ஒன்றரை இலட்சத்திற்கும் அதிகமான ஈழத் தமிழர்களும் பிரான்ஸில் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான ஈழத்தமிழர்களும் அகதி எனும் போர்வையில் அந்த நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர்.

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்தியாவில்வாழும் தமிழ் அகதிகளின் துயரங்கள் வார்த்தைகளால் விபரிக்க முடியாதவை. 1983ஆம் ஆண்டிலிருந்து 1991 ஆம் ஆண்டு வரை ஓரளவு சுதந்திரமாக வாழ்ந்த அவர்களின் சுதந்திரம் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் அரசியல் படுகொலையின் பின்னர் மிக இறுக்கமாக மாறியமை சுட்டிக்காட்டத்தக்கது.

**இன்று ஜூன் 20 ஆம் திகதி சர்வதேச அகதிகள் தினம். இதனை முன்னிட்டு இக்கட்டுரை இங்க பிரசுரமாகின்றது.**

தமிழ்நாட்டில் மாத்திரம் 107 இற்கும் அதிகமான அகதி முகாம்களில் சுமார் ஒன்றரை இலட்சத்திற்கும் அதிகமான ஈழத்தமிழர்கள் அகதி எனும் பேரில் நாடற்ற பிரஜைகளாக தங்கவைக்கப்பட்டுள்ளனர். மேலும் கேரளா, கர்நாடகா, ஒரிசா போன்ற நாடுகளிலும் குறைந்த அளவில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் நடமாடும் சுதந்திரம் விரும்பிய தொழிலை செய்வதற்கான சுதந்திரம், கல்வி கற்பதற்கான உரிமை என்பன பெருமளவில் நசுக்கப்பட்டே வருகின்றது. இத்தகைய அழுத்தங்களினால் அகதிகளில் பலர் மனவுளைச்சலை சந்தித்து மனநோய்க்கு ஆளாகி தற்கொலை செய்து கொண்ட சம்பவங்களும் அதிகமாக உண்டு. ஈழத்தமிழர்களின் அழுகையை அரசியலாக்கி அதன்மூலம் வாக்கு ஜனநாயகம் செய்யும் எந்த அதிகார அரசியல் கட்சிகளும் ஏழைத் தமிழ் அகதிகளுக்காக ஆக்கபூர்வமான அரசியல் காய் நகர்த்தல்களையோ, பொருளாதார உதவிகளையோ குறைந்தபட்சமேனும் செய்யவில்லை என்பதே கசப்பான உண்மை.

ஐரோப்பிய அமெரிக்க தேசங்களைப் பொறுத்தவரை அகதிகளாகச் சென்ற தமிழர்கள் உச்சபட்ச அளவில் பாதுகாக்கப்பட்டார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. அரச எந்திரங்களின் முகவர்களினால் முன்னெடுக்கப்படும் கொலை முயற்சிகள் வலிந்து காணாமல் ஆக்கப்படல் சட்ட விரோதமான முறையற்ற தடுப்புவைப்புக்கள், மிலேச்சத்தனமான சித்திரவதைகள், தொடர்ச்சியான பாலியல் துன்புறுத்தல்கள் போன்ற அரசின் மனிதாபிமான சட்டங்களுக்கு எதிரான அரசின் நடத்தைகள் ஐரோப்பிய நாடுகள் ஈழத்தமிழர்களின் புகலிட அந்தஸ்து கோரிக்கையை நிராகரிக்க முடியாமைக்கான வலுவான காரணங்களாகும். இருப்பினும் மறுபுறத்தே தத்தம்பொருளாதார நலன்களை முன்னிறுத்தி பல ஆயிரக்கணக்கான தமிழர்கள் புலம்பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளுக்கு செல்வதும் வழக்கமாக மாறிவிட்டது. இலங்கையின் மொத்த வருமானத்தில் 7 வீதம் புலம் பெயர் தமிழர்களின் உழைப்பின் மூலமான வருவாயென மத்திய வங்கியின் 2015 ஆம் ஆண்டு அறிக்கைகள் சுட்டுகின்றன. முதலாம் தலைமுறையாக புலம்பெயர்ந்து சென்றவர்கள் சாதாரண ஊழியர்களாக தமது வாழ்வினைக்கழித்தாலும் இன்றைக்கு உருவாகியிருக்கக் கூடிய இரண்டாம் தலைமுறை அந்தந்த நாடுகளுக்குரிய மொழி, கலாசாரம் என்பவற்றில் மிகுந்த தேர்ச்சி உடையவர்களாகவும் அந்தநாட்டினுடைய பிரஜைகளுக்கே திறமையடிப்படையில் சவால் மிக்கவர்களாகவும் திகழ்கின்றனர். புலம்பெயர் தமிழர்கள் இன்று மேலைத் தேய நாடுகளில் அறிவுசார் புத்திஜீவிகளாகவும் புகழ்பூத்த அரசியல்வாதிகளாகவும்தொழில் வாண்மையாளர்களாகவும் விளங்குகின்றனர். இன்றைக்கு யாழ்ப்பாணத்தில் தேர் ஓடுகின்றதோ இல்லையோ லண்டனிலும் அவுஸ்திரேலியாவிலும் இந்துக்கள் ஊர் கூடி தேர் இழுக்கின்றார்கள் என்று கூறுமளவிற்கு ஈழத்து தமிழர்களின் இனமான உணர்வு எழுந்து நிற்கின்றது.

2009 ஆம் ஆண்டு மே மாதம் இலங்கையின் ஆயுதப் போர் முடிவிற்கு கொண்டுவரப்பட்டு நிலைமாறு காலநீதி பருவத்தினில் சென்றுள்ள போதிலும் அகதி அந்தஸ்து கோருபவர்களின் எண்ணிக்கை குறைந்த பாடாகவில்லை. ஈழத்தமிழ் அகதிகளை மீளவும் இலங்கைக்கு திருப்பி அழைக்கும் முயற்சிகளில் இலங்கை அரசாங்கம் பலவிதங்களிலும் தோல்வி கண்டுள்ளது என்பதே நிதர்சனம். பல சலுகைகளை அறிவித்து நாட்டிற்கு அழைத்த போதிலும் பன்னிரண்டாயிரத்திற்கும் குறைவான இந்திய ஈழத்தமிழ் அகதிகளே நாடு திரும்பினர். புலம்பெயர் தமிழர்கள் ஐரோப்பிய தேசங்களில் நிரந்தர குடியுரிமை பெற்று தற்காலிக விடுமுறையில் தாயகம் திரும்பும் போது விமான நிலைய புலனாய்வு அதிகாரிகளால் மணிக்கணக்கில் விசாரணைக்கு உட்படுத்தப்படுதல்மழை நின்றாலும் தூவானம் ஓயவில்லையோ என்ற கேள்வியை முன்னிறுத்துகின்றது.

இவையெல்லாம் ஒரு புறத்தே இருக்க இலங்கையை நோக்கியும் அகதி அந்தஸ்து கோருபவர்கள் இருக்கத்தான் செய்கின்றார்கள் என்பது ஆச்சரியமூட்டும் உண்மை. இதுவரை 1333 பேர் இலங்கையில் புகலிட அந்தஸ்து கோரியுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கை 1951 ஆம் ஆண்டு அகதிகள் சம்பந்தமான சர்வதேச உடன்படிக்கையில் கைச்சாத்திடாத நாடு என்கிற காரணத்தினால் பிறநாட்டு அகதிகள் இலங்கைக்கு புகலிட அந்தஸ்து கோரும் போதெல்லாம் நழுவல்போக்குடன் விலகிச் செல்வதை அவதானிக்கலாம். பெரும்பாலும் உள் நாட்டு போர் காரணமாக ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், மியன்மார்,சோமாலியா போன்ற நாடுகளில் இருந்தே இலங்கைக்கு புகலிட அந்தஸ்து கோருகின்றனர். கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் கொடூரமான இன அழிப்பு உள்நாட்டு யுத்தத்தில் இருந்து தமது உயிரைப் பாதுகாத்து இலங்கைக்கு வந்த மியன்மார் நாட்டின் ரோஹிஞ்யா முஸ்லிம் மக்களை" இலங்கையின் இறையாண்மையை சிதைக்க வந்த தீவிரவாதிகள்" என அச்சுறுத்தி அவர்களின் இருப்பிடங்களுக்குள் புகுந்து அட்டகாசம் புரிந்த பௌத்த துறவியர்களையும்கடும்போக்கு சிங்கள தேசியவாதிகளையும் வரலாறு இன்னமும் மறக்காமல் குறித்து வைத்துள்ளது. கோடிகள் பலகொடுத்தாலும் தாயகக்காற்றுடன் இரத்த உறவுகளுடன் வாழும் வாழ்க்கை கனதியானது.

அத்தனையையும் தாண்டி புலம்பெயர்ந்து ஒருநபர் தனது நாட்டின் தேச எல்லையை கடந்து செல்கின்றார் ஆயின் அதற்கான முழுப் பொறுப்பையும் அந்தந்த நாட்டு அரசுகளே பொறுப்பேற்க வேண்டும். அகதிகளற்ற உலகம் தான் அமைதியான உலகமென பொருள் கோடல் செய்யலாம்.

ஸ்ரீ.சிவஸ்கந்தஸ்ரீ
சட்டத்துறை இறுதி ஆண்டு மாணவர்
யாழ்.பல்கலைக் கழகம்

# சாவகச்சேரி வைத்தியசாலையில் பொலிஸ் காவலரண் வேண்டும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வளாகத்தின் முன் பகுதியில் பொலிஸ் காவலரண் அமைக்கப்பட வேண்டும் என பொதுமக்கள் மற்றும் வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் தொடர்ச்சியாக கோரிக்கை முன்வைத்து வருகின்றனர்.

இது தொடர்பில் வைத்தியசாலையின் அத்தியட்சகர் பசுபதி அச்சுதன் கருத்து தெரிவிக்கையில்சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் முன் பகுதியில் எதிர்வரும் வாரமளவில் பொலிஸ் காவலரண் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படும்.

தற்போது வைத்தியசாலையின்பின்பகுதியிலேயே பொலிஸ் அறையுள்ளது. இதனால் வைத்தியசாலையின் முன்பகுதியில் இடம்பெறும் அசம்பாவிதங்கள் பொலிஸாருக்கு தெரியப்படுத்தி பொலிஸார் வருவதற்கு இடையில் அசம்பாவிதங்கள் நடந்து முடிந்து விடுகின்றன. சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இரவு வேளைகளில் அசம்பாவிதங்கள் இடம்பெற்ற வண்ணமேயுள்ளன.

அண்மையில் கூட அம்புலன்ஸ் இல்லை என்பதைக் காரணம் காட்டி கும்பல் ஒன்று வைத்தியசாலையின் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்ததுடன் கடமையில் இருந்த உத்தியோகத்தர்களை மிரட்டியது.

இதேவேளை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு டெங்கு சிகிச்சை மையத்திற்காகவும் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைக்கும் 30இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தம்மால் டெங்கு கட்டுப்பாட்டிற்கு தேவையான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் அடங்கிய பட்டியல் தயார்படுத்தி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை அத்தியட்சகர் தெரிவித்துள்ளார். (இ-30)

# இந்தியா, சீனாவிடமிருந்து ரயில் பெட்டிகள் இறக்குமதி

(கொழும்பு)


இலங்கையில் நாளாந்தம் சுமார் 4 இலட்சத்துக்கு மேற்பட்ட புகையிரத பயணிகள் பயணங்களில் ஈடுபடுவதாக ரயில்வே திணைக்கள பொது முகாமையாளர் எஸ்.எம்.அபேவிக்கிரம தெரிவித்துள்ளார்.

இதற்கமைவாக ரயில்வே துறையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக குறிப்பிட்ட அவர் 2020 ஆம் ஆண்டளவில் புகையிரத சேவையில் புதிதாக 232 ரயில் பெட்டிகள் ஒன்றிணைக்கப்படுமென்றும் தெரிவித்துள்ளார்.

இந்தப் பெட்டிகள் மற்றும் இயந்திரங்கள் இந்தியா, சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படவுள்ளன. இந்தியாவிலிருந்து எதிர்வரும் ஒக்டோபர் மாதத்தில் இயந்திரம் ஒன்றும் 12 புகையிரதப் பெட்டிகளும் இறக்குமதி செய்யப்பட உள்ளன.

மேலும் 5 ரயில் பெட்டிகள் எதிர்வரும் பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் கொண்டு வரப்படும். 2020 ஆம் ஆண்டில் மேலும் 160 பெட்டிகள் இறக்குமதி செய்யப்படவுள்ளன.

இவை தொடர்பான உடன்படிக்கை விரைவில் கைச்சாத்திடப்படும்என்றும்ரயில்வே திணைக்கள பொது முகாமையாளர் எஸ்.எம்.அபேவிக்கிரம தெரிவித்தார். (இ)



யாழ்.இளவாலை பொலிஸாரின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் இரத்ததானம் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் இடம் பெற்றது

வடலியடைப்பு சனசமூக நிலையத்தில் இடம்பெற்று வரும் பொலிஸ் நடமாடும் சேவையின் ஒருபகுதியாக இடம் பெற்ற இந் நிகழ்வில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை குருதி வங்கி பொறுப்பதிகாரி வைத்தியர் ம.பிரதீபன் தலைமையிலான குழுவினர் கலந்துகொண்டு குருதி சேகரிப்பில் ஈடுபட்டனர்.

# ஞானசார தேரரை விடுவிக்குமாறு ஜனாதிபதியைக் கோரமாட்டோம்

## சுமங்கல நந்த தேரர் உறுதி

(கொழும்பு)

ஞானசார தேரரை விடுதலை செய்யக்கோரி நாட்டின் பொது அமைதியை ஒரு போதும் சீர்குலைக்க மாட்டோம் எனவும், தேரரை விடுதலை செய்யக் கோரி ஜனாதிபதியிடம் கோரிக்கைகளையும் சமர்ப்பிக்க மாட்டோம் எனவும் பொதுபலசேனா அமைப்பின் ஏற்பாட்டாளர் சுமங்கல நந்த தேரர் தெரிவித்தார்.

அவ்வாறு செயற்படுவது அவரது கொள்கைகளுக்கு முரணானதாக அமையும். ஆறு மாத கடூழிய சிறைவாசம் என்பது அவரது மத ஆளுமையினை மேம்படுத்துவதற்கான வழிமுறையாகவே அமையும் எனவும் தேரர் தெரிவித்தார்.



ஞானசார தேரரின் கைதுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பு கோட்டையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சத்தியாக்கிரகக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே தேரர் இதனைத் தெரிவித்தார்.

சிறைவாசம் அனுபவிக்கும் பொதுபலசேனா அமைப்பின் செயலாளர் ஞானசார தேரர் விடுதலையாகி வந்த தன் பின்னரும் அவரது சமூக சேவைகள் தொடரும். அவரது பணிகளை முடக்கவே அரசாங்கம் அவருக்கு நியாயமற்ற முறையில் கடூழிய சிறைத் தண்டனையை வழங்கியுள்ளதாகவும் சுமங்கல நந்த தேரர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கூட்டு எதிரணியை குலைப்பதே சு.கவின் 16 பேரின் நோக்கம்

## பிரசன்ன எம்.பி. காட்டம்

(கொழும்பு)

அரசாங்கத்திலிருந்து வெளியேறிய 16 பேரும் பொதுஜன பெரமுனவை பிளவுபடுத்தும் சூழ்ச்சியில் ஈடுபட்டுள்ளதாக கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் கதிரையில் அமர்த்த வேண்டும் என சகல தேர்தல்களிலும் கூட்டு எதிர்க்கட்சி கூறிவந்ததை, கடந்த மூன்று வருடங்களின் பின்னர் இப்போதுதான் 16 பேருக்கும் விளங்கியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இவர்களுக்கு தேவையாக இருப்பது, பொதுஜன பெரமுனவை இரண்டாக உடைத்து அவர்களது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதாகும் எனவும் மகிந்த சார்பு கூட்டு எதிரணி பிரசாரச் செயலாளர் பிரசன்ன ரணதுங்க மேலும் தெரிவித்தார். (இ)

# பிரச்சினைகள் இருந்தாலும் மகிந்தவுக்கே ஆதரவு

## விமல் வீரவன்ச உறுதி



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் தனக்கும் தனிப்பட்ட ரீதியில் பல பிரச்சினைகள் இருந்தாலும் அவை அனைத்தையும் ஒதுக்கி வைத்து விட்டு கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதிக்கு பின்னர் தான் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக குரல் கொடுத்து வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

வார இறுதிப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில்அவர்இதனை கூறியுள்ளார்.

தனிப்பட்ட பிரச்சினைகளின் அடிப்படையில் அரசியல் முடிவுகளை எடுப்பதாக இருந்தால், 2015 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதிக்கு பின்னர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக செயற்பட்டிருக்க மாட்டேன். அவரை ஆதரிக்க முடியாத அளவில் எனக்கு பல பிரச்சினைகள் இருந்தன. எனினும் அவை கடந்த காலத்திற்குரியவை எனவும் விமல் வீரவன்ச தெரிவித்தார். (இ)

# எமது நிலத்தைப் பாதுகாக்க இளைஞர்கள் முன்வர வேண்டும்

## வியாழேந்திரன் எம்.பி. அழைப்பு

(ஏறாவூர்)

மத்திய அரசாங்கத்தின் நேரடிக்கட்டுப்பாட்டில் இயங்குகின்ற பல்வேறுபட்ட திணைக்களங்கள் மட்டக்களப்பு மாவட்டத்திலிருக்கின்ற காணிகளை தன்னிச்சையாக தங்களுக்குள் உள்வாங்குகின்ற நிலைமை இருந்து வருவதாக மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.



தேசிய ரீதியில் இளைஞர்களின் மேம்பாட்டுக்காக தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் இளைஞர் விவகார அமைச்சு ஆகியன இணைந்து நாடளாவிய ரீதியில் முன்னெடுத்துவரும் இலத்திரனியல் நூலகத்தினை உருவாக்கும் செயற்றிட்டம் மட்டக்களப்பில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன்று மட்டக்களப்பு மாவட்டத்தினுடைய பாரிய பிரச்சினையாக இருப்பது நில ஆக்கிரமிப்பாகும். நில ஆக்கிரமிப்பிற்கு எதிராக களத்திலே நின்று போராடுவதில் எங்களுடைய காலமும் நேரமும் கூடுதலாக கழிந்து செல்கின்றது.

மட்டக்களப்பு மாவட்டம் வளமானதொரு மாவட்டமாகும். 2640 சதுர கிலோமீற்றரை கொண்ட மிகப்பெரிய மாவட்டமாகும். 345 கிராம சேவகர் பிரிவுகளையும் 1085 கிராமங்களையும் கொண்ட மாவட்டமாகும்.

எங்களுடைய மக்கள் பூர்வீகமாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற பகுதிகளை அண்டியிருக்கின்ற நிலங்களை அபகரிக்கின்ற அல்லது கூறையாட நினைக்கின்ற நிகழ்ச்சி நிரல் 2009ஆம் ஆண்டிலே எங்களுடைய போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்பு இந்த மாவட்டத்திலே வெருகல் தொடக்கம் துறைநீலாவணை வரை நடந்து கொண்டிருப்பதை நாங்கள் அறிவோம்.

மட்டக்களப்பு படுவான் கரை பகுதிகளில் 92 தமிழ்ப் பாடசாலைகள் மூடப்படுகின்ற அபாய நிலையில் இருக்கின்றன. ஒரு கிராமத்திலே பாடசாலைமூடப்படும்பொழுது அக்கிராமத்தில் இருக்கின்ற மக்கள் அக்கிராமத்தை விட்டு இடம்பெயர வேண்டிய சூழ்நிலை ஏற்படும். மக்கள் அங்கிருந்து இடம்பெயரும் பொழுது அந்த நிலங்கள் பறிபோகின்ற நிலைமை ஏற்படும்.

இந்த நாட்டிலே பல்லாயிரக்கணக்கான போராளிகளும், இலட்சக்கணக்கான பொது மக்களும் இந்த மண்ணிலே வித்துடலாக்கப்பட்டமை சுதந்திரமானதொரு தேவைக்காகவோ, கிரவல் வீதிகளுக்காகவோ, அன்றாட தேவைகளுக்காகவோ அல்ல. இந்த நிலத்தை பாதுகாப்பதற்காகவே போராட்டங்கள் நடந்தன.

இன்று நாங்கள் அதனை மறந்துவிடக்கூடாது.

எங்களுடைய மொழி, கலை, கலாசாரம், பண்பாடு, விழுமியங்கள் பேணப்பட வேண்டுமானால் முதலில் எங்களுடைய இருப்பு பாதுகாக்கப்பட வேண்டும். இருப்பை இழந்தபின்பு நாங்கள் எதை வைத்தும் ஒன்றும் செய்துவிட முடியாது.

முதலில் இளைஞர்கள் இந்த விடயத்தில் விழிப்புணர்வு பெறவேண்டும். இளைஞர்கள் சமூகப்பொறுப்புணர்வு உள்ளவர்களாக மாறவேண்டும். பலர் சமூகப் பொறுப்புணர்வோடு இருக்கின்றீர்கள். செயற்படுகின்றீர்கள். எங்கள் சமூகம் சார்ந்து சிந்திக்கின்ற அந்தப் பொறுப்புணர்வை நாங்கள் கூடுதலாக வளர்த்துக் கொள்ள வேண்டும்.

எங்களுடைய சமூகத்தையும் சமூகத்தின் அடுத்த தலைமுறையையும் எங்களுடைய நிலத்தையும்மொழியையும் கலை, பண்பாட்டு அம்சங்களையும் பாதுகாப்பதில் இளைஞர்கள் முன்வர வேண்டும். இளைஞர்கள் முன்வரும்போதுதான் இளைஞர் சக்தியை மகத்தான சக்தியாக ஒன்றுதிரட்டி எங்களுடைய இருப்பை தக்க வைப்பதற்கான வழிவகைகளை நாங்கள் மேற்கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 160 | 120 | 120 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 130 | 110 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 400 | 320 | 320 | 400 | 300 | 300 |
| தக்காளி | 300 | 250 | 300 | 250 | 300 | 280 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 35 | 50 | 40 | 40 |
| கோவா | 180 | 150 | 80 | 160 | 160 | 140 |
| கரட் | 230 | 400 | 220 | 300 | 400 | 300 |
| பூசணி | 50 | 30 | 20 | 40 | 40 | 30 |
| புடோல் | 80 | 120 | 80 | 140 | 120 | 120 |
| வாழைக்காய் | 60 | 40 | 35 | 80 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 150 | 160 | 110 | 160 | 160 | 130 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 90 | 120 | 120 | 100 |
| பாகற்காய் | 250 | 400 | 180 | 200 | 300 | 320 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 80 | 100 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | -- | 120 | 120 | 80 |
| பயற்றங்காய் | 200 | 250 | 160 | 150 | 200 | 180 |
| லீக்ஸ் | 250 | 400 | 240 | 300 | 400 | 300 |
| பீற்றூட் | 140 | 160 | 70 | 100 | 160 | 100 |
| கறிமிளகாய் | 250 | 400 | 80 | 250 | 400 | 250 |
| முருங்கைக்காய் | 500 | 400 | 300 | 300 | 320 | 500 |
| போஞ்சி | 320 | 400 | -- | 500 | 300 | 250 |
| கத்தரிதம்புள்ள | 120 | 80 | -- | -- | 100 | 100 |
| கீரை - 1 பிடி | 50 | 30 | 40 | 50 | 30 | 50 |
| தேசிக்காய் | 140 | 100 | 90 | 120 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 30-60 | 30-55 | 60 | 50-75 | 70 |
| இராசவள்ளி | 200 | 200 | -- | 180 | 200 | 160 |
| வெங்காயப்பூ | 250 | 300 | -- | 280 | 400 | 250 |
| முள்ளங்கி | 120 | 120 | 40 | 100 | 160 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 10 | 40 | 30 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 20 | 60 |
| ஈரப்பலா | 80 | 100 | -- | 80 | 100 | 100 |

# தூதரகங்கள், உயர்ஸ்தானிகராலயங்களை பராமரிக்க 8.3 பில்லியன் ரூபாய் செலவு

## கணக்காய்வாளர் நாயகம் தகவல்

(கொழும்பு)

கடந்த ஆண்டில் தூதரகங்கள், உயர்ஸ்தானிகராலயங்கள் என்பனவற்றை பராமரிப்பதற்காக 8.3 பில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் காமினி விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த விடயம் குறித்து கணக்காய்வு நடத்தப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படும் எனவும், நாட்டுக்கு எவ்வித நலனும் கிடைக்காது. இவ்வளவு பாரிய தொகைப் பணம் எவ்வாறு செலவிடப்பட்டது என்பது குறித்து விசாரணை நடத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

பத்தரமுல்லயில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மத்திய வங்கி பிணைமுறி மோசடிகளின் மூலம் அரச சேவையில் காணப்படும் பலவீனங்களை கண்டுகொள்ள முடியும். அரச சேவையில் பிணைமுறி மோசடி போன்ற பல்வேறு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

நிலக்கரி கொள்வனவு செய்தமை அவ்வாறான ஓர் மோசடிகளில் ஒன்றாகும். இந்த மோசடியினால் 15 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. கணக்காய்வு ஆணைக்குழு உருவாக்கப்பட்டுமூன்று ஆண்டுகள் கடந்துள்ளன.

மாதமொன்றுக்கு இந்த ஆணைக்குழுவின் மொத்தச் செலவு 21 இலட்சம் ரூபாவாகும். எனினும், இந்த ஆணைக்குழுவினால் ஐந்து சதத்திற்கு எவ்வித சேவையும் வழங்கப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

உலக அமைதிக்கு ஒரே தீர்வு யோகா
- பாரத பிரதமர் நரேந்திர மோடி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# யோகாசனம் எங்கள் சித்தர்கள் தந்த அருமருந்து

நாளை 21ஆம் திகதி சர்வதேச யோகா தினம். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பெரு முயற்சியில் ஜூன் 21ஆம் திகதி சர்வதேச யோகா தினமாகப் பிரகடனப்படுத்தப் பட்டது.

சர்வதேச அளவில் யோகாசனம் முதன்மைப்படுத்தப்பட்டிருப்பது கண்டு நாம் அனைவரும் பெருமிதமடைய வேண்டும். ஏனெனில் அது நம் சித்தர்கள் தந்த அருமருந்து.

இந்த உலகம் முழுவதும் உடல் ஆரோக்கியம் பற்றிச் சிந்திக்கின்றது. அதன் பொருட்டு அந்தந்த நாட்டு மக்களின் ஆதிச்சமூகம் உடல் ஆரோக்கியத்துக்கான பயிற்சிகளை கண்டறிந்து வழங்கியுள்ளது.

இவ்வாறு மனித இனத்தின் மூதாதையர்கள் தந்த உடல் ஆரோக்கியப் பயிற்சிகளில் நம் இனத்தில் தோன்றிய சித்தர்கள் தந்ததே யோகப் பயிற்சியாகும்.

யோகாசனம் தெய்வீகத்துடன் சார்ந்தது. உடல் ஆரோக்கியம் தொடர்பில் பல்வேறு பயிற்சி முறைகள் முன்வைக்கப்பட்டுள்ளனவாயினும் அவை வெறும் உடல் ஆரோக்கியத்தை மட்டுமே முதன்மைப்படுத்துகின்றன.

உடல்பருமன் அல்லது உடல்வாகு இருந்தால் அதுவே ஆரோக்கியம் என்ற வகையில் சில உடற்பயிற்சி முறைகள் நம் மத்தியிலும் ஆதிக்கம் செலுத்துகின்றன.

எனினும் யோகாசனம் என்பது உடல் ஆரோக்கியம் என்பதைக் கடந்து உள ஆரோக்கியம், ஆன்மீக ஆரோக்கியம் என்பவற்றையும் நமக்குத் தருவதனூடு ஒழுக்கம் சார்ந்த வாழ்வுக்கு வழிவகுக்கின்றது.

மனிதன் ஆரோக்கியமாக வாழவேண்டுமாக இருந்தால், அவனின் வாழ்வு தெய்வீகத் தன்மை பொருந்தியதாக அமைய வேண்டும்.

எவனொருவன் தெய்வீகத்தன்மைக்கு ஆட்படுகின்றானோ அவன் மற்றவர்கள் மீது அன்பு செலுத்தவும் எல்லோரையும் சமமாக மதிக்கவும் பாவத்துக்கு பயப்படவும் எல்லாவற்றையும் கடந்த இறைவன் நமக்குத் தந்த இந்த மானிடப் பிறப்பின் மேன்மையை போற்றவும் தவறமாட்டான்.

எனவே மனிதப் பிறப்பின் மகிமையை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டுமாயின் யோகாசனம் என்ற தெய்வீகக் கலையை சகலரும் கற்றறிந்து அதனை நாளாந்த வாழ்வின் அங்கமாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

குறிப்பாக பாடசாலை மாணவர்கள் யோகாசனப் பயிற்சிகளைக் கற்று அதனை நாளாந்தம் செய்வதனூடாக, ஒழுக்கத்தையும் தெய்வீகத்தன்மையையும் உணர்ந்து கொள்கின்ற பக்குவத்தைப் பெற முடியும்.

ஆகவே பாடசாலைகளில் நடைபெறும் காலைப்பயிற்சியின்போது மாணவர்களுக்கு யோகாசனத்தைப் பயிற்றுவிப்பதன் மூலம் அவர்கள் எதிர்காலத்திலும் யோகாசனப் பயிற்சியைச் செய்து தங்கள் ஆரோக்கியத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கு வழிகாட்ட முடியும்.

ஆக, இது விடயத்தில் வடக்கு மாகாண கல்வி அமைச்சு சகல பாடசாலைகளிலும் யோகப் பயிற்சியை மாணவர்களுக்கான கால நேரப் பயிற்சி வழங்குவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வதன் மூலம் எங்கள் இனத்தின் நல்வாழ்வுக்கு உதவலாம்.

மாறாக சர்வதேச தினத்தில் மட்டும் யோகாசனத்தை நினைப்பதனால் யோகாசனம் எனும் தெய்வீகச் சுரங்கத்தின் முத்துக்களை பெற்றுக் கொள்ள முடியாது என்பதால்,

யோகாசனத்தை பாடசாலைகளில் பயிற்சியாக வழங்குவதே ஒரே வழியாகும்.

# நிறைவேற்றதிகார ஒழிப்பு குறித்து கமரூனுடன் ரணில் கலந்துரையாடல்

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையினை நீக்குவது தொடர்பாக பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் டேவிட் கமரூனுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குமிடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிரித்தானியாவுக்கு மேற்கொண்டிருந்த விஜயத்தின்போதே இக்கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இது குறித்து பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்தியா, சீனா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளினால் இலங்கையில் முன்னெடுக்கப்படுகின்ற திட்டங்கள் தொடர்பில் பிரித்தானியாவின முன்னாள் பிரதமர் டேவிட் கமரூனுக்கு தெளிவுபடுத்தியதுடன் தேசிய அரசியலில் பேசப்பட்டு வருகின்ற நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இரத்து செய்வது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் பிரித்தானிய வர்த்தக கொள்கைகள் தொடர்பான இராஜாங்க அமைச்சர் கிரேக் ஹேன்ஸ் மற்றும் அந்நாட்டு பாராளுமன்ற உறுப்பினர் ரணில் ஜயவர்த்தன ஆகியோரையும் பிரதமர் ரணில் இவ் விஜயத்தின் போது சந்தித்துக் கலந்துரையாடியுள்ளதாக பிரதமர் அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது. (இ)

# அரசியல் நோக்கங்களை இலக்கு வைத்து விசேட நீதிமன்றம் உருவாக்கப்படவில்லை

## பிரதியமைச்சர் பெரேரா விளக்கம்

(கொழும்பு)

நீதித்துறையின் சுயாதீனத்தினை பலப்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட விசேட நீதிமன்றம் எதிர்வரும் ஜூலை மாதம் முதல் வாரத்திலிருந்து தனது கடமைகளை ஆரம்பிக்கும் என பிரதியமைச்சர் அஜித் பி. பெரேரா தெரிவித்தார்.

தேசிய அரசாங்கம் 2015ஆம் ஆண்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளுக்கிணங்க நீதித்துறையின் சுயாதீனத் தன்மையினை மேலும் வலுப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட விசேட நீதிமன்றமானது எவ்வித அரசியல் நோக்கங்களையும் மையப்படுத்தி உருவாக்கப்படவில்லை.

வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாமல் காலம் தாழ்த்தப்பட்டு நிலுவையிலிருக்கும்போது மக்களுக்கு சட்டத்தின் மீதும் நீதித்துறை மீதும் நம்பிக்கையற்றுப் போகும். மக்கள் அரசாங்கத்தின் மீது நம்பிக்கையினை இழந்தாலும் நீதித்துறையின் மீதான நம்பிக்கையினை இழக்க மாட்டார்கள். ஆனால் கால சூழ்நிலை மக்களின் எண்ணங்களை திசைதிருப்பி விடுகின்றது.

ஆகவே நாட்டின் நீதித்துறையினை மேலும் வலுப்படுத்தும் நோக்கிலேயே விசேட நீதிமன்றம் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் எவ்வித அரசியல் நோக்கங்களும் பழிவாங்கல்களும் கிடையாது என்ற விடயத்தினை பொது மக்கள் உட்பட அரசியல்வாதிகளும்புரிந்துகொள்ள வேண்டும் என அவர் மேலும தெரிவித்தார். (இ)

# மோசடிகளில் ஈடுபட்டவர்கள் அரசை விமர்சிப்பது வேடிக்கை

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

(கொழும்பு)

அரச நிதியினை பல்வேறு வழிமுறைகளில் கொள்ளையடித்தவர்கள் இன்று அபிவிருத்தி தொடர்பிலும் நிதி குற்றம் தொடர்பிலும் தேசிய அரசாங்கத்திற்கு எதிராக குற்றம் சுமத்துவது வேடிக்கையாகவே உள்ளது என அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஆட்சியில் அதாவது 2005ஆம் ஆண்டு தொடக்கம் 2014 வரையிலான காலப்பகுதியில் கனிய வள எண்ணெய் இறக்குமதி, பெருந்தெருக்கள் அபிவிருத்தி, மிக் விமான கொள்வனவு உள்ளிட்ட பல வழிமுறைகளில் அரச நிதியினை கொள்ளையடித்தவர்கள் இன்று தேசிய அரசாங்கத்தின் சில குறை பாடுகள் தொடர்பில் விமர் சிப்பது வேடிக்கையாகவே உள்ளது.

தேசிய அரசாங்கத்தில் இடம்பெற்ற சில மோசடிகளை வைத்துக் கொண்டு முழுமையாக ஆட்சியினை தவறென்று குறிப்பிட முடியாது. இடம்பெற்ற நிதி மோசடிக்கு தகுந்த சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. கடந்த அரசாங்கத்தை போன்று மூடி மறைக்கவில்லை.

அரசாங்கத்தின் திருத்திக் கொள்ளக்கூடிய குறைகளை பெரிதுபடுத்தி தங்களை பிரபல்யப்படுத்துபவர்கள் நிதி மோசடி குற்றவாளிகளே ஆவர்.

தங்களின் குற்றங்களை மறைக்க அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்துவதை கடந்தகால அரசியல்வாதிகள் வழக்கமாக கொண்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# இன்புளுவன்ஸா மருந்துகளில் பக்றீரியா; அமைச்சர் ராஜித பதவி விலக வேண்டும்

## அரச வைத்திய அதிகாரிகள் போர்க்கொடி

(கொழும்பு)

தென் மாகாணத்தில் பரவி வரும் இன்புளுவன்ஸா வைரஸை கட்டுப்படுத்துவதற்கு பாகிஸ்தானிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ள மருந்துப் பொருட்களில் பக்றீரியாக்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதென, அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஆகவே இதற்கு பொறுப்பேற்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தனது அமைச்சுப் பதவியிலிருந்து விலகவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினால் கொழும்பில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அச்சங்கத்தின் செயலாளர் நவீன் டி சொய்சா இதனை தெரிவித்தார். (இ)

# மழலைகளின் விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்ட முன்பள்ளி மழலைகளின் விளையாட்டு விழா இன்று புதன் கிழமை பி.ப. 2.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எப்.எக்ஸ். அன்ரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் கலந்து கொள்வார். (இ)

# மும்மொழி தினம் இன்று

யாழ்.கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் மும்மொழித் தினம் இன்று புதன்கிழமை காலை 8.30 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் அதிபர் வேலழகன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராஜா, சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆங்கில மொழிகற்கை நிலைய சிரேஷ்ட விரிவுரையாளர் கே.சிறிகணேசன், யாழ்ப்பாண கல்வி வலய தமிழ் உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.பூபாலசிங்கம், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை சிங்கள விரிவுரையாளர் எம்.எச். எ.சஞ்ஜீவனி ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

# பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## எல்லாமே மனசுதான்!



✦ பழங்கள் நிறைந்த மரம் கனத்தினால் தாழ்ந்து வளைவது போல, பணிவுள்ளவனின் வாழ்க்கை பெருமைமிக்கதாக அமையும்.

✦ மனமே மனிதனுக்கு எல்லாமுமாக இருக்கிறது. அதனால், அதைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டியது நம் கடமை.

✦ பணத்தை எப்படி உபயோகிப்பது என்று அறியாதவன் மனிதன் என்னும் தகுதியை இழந்து விட நேரிடும்.

✦ "நான்" என்னும் அகந்தையை விட்டு செயலாற்றுபவன் கடவுளைத் தரிசிக்கும் தகுதி பெறுவான்.

# அல்வாய் யுத் விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை வென்றது வதிரி சிறிமுருகன்

புலோலி யுத் விளையாட்டுக்கழகம் நடத்திய மாபெரும் மென்பந்தாட்டக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் சம்பியன் பட்டத்தை வென்றது வதிரி சிறிமுருகன் விளையாட்டுக்கழக அணி.


அணிக்கு 8 பேர் 6 ஓவர்கள் கொண்ட இப் போட்டியில் 32 கழகங்களுக்கு மேல் பங்கேற்றிருந்தன. இறுதிப் போட்டியில் வதிரி சிறிமுருகன் அணியை எதிர்த்து அல்வாய் யுத் விளையாட்டுக்கழகம் மோதியது.

நாணயச் சுழற் சியில் வென்ற அல்வாய் யுத் விளையாட்டுக்கழக அணியின் தலைவர் முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தார்.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அல்வாய் யுத் விளையாட்டுக்கழக அணி ஆறு விக்கெட்களை இழந்து 40 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

41 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்றஇலக்குடன் துடுப்பெடுத்தாடிய வதிரி சிறி முருகன் அணி 5 ஓவர்கள் நிறைவில் 4 விக்கட்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்து புலோலி யுத் விளையாட்டுக்கழகத்தின் சம்பியன்பட்டத்தை பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக வதிரி சிறிமுருகன் அணியின் அணித்தலைவர் உமைசுதன் தெரிவு செய்யப்பட்டார். (க)



## அரையிறுதியில் கார்மேல் போய்ஸ்




மல்லாகம் ஸ்டார் விளையாட்டுக் கழகம் நடத்திய அணிக்கு 8 பேர் 6 ஓவர்கள் கொண்ட துடுப்பாட்ட போட்டியில் முதல் போட்டியில் பொற்பதி அணியுடன் 98 ஓட்டங்களை பெற்ற கார்மேல் போய்ஸ் பொற்பதி அணியினை 65 ஓட்டங்களுக்குள் வீழ்த்தி வெற்றி பெற்றது.

இரண்டாவது போட்டியில் அளவெட்டி மத்திய அணியுடன் 74 ஓட்டங்களை பெற்ற கார்மேல் போய்ஸ் அளவெட்டி மத்தி அணியினை 55 ஓட்டங்களுக்குள் வீழ்த்தி வெற்றி பெற்றது.

காலிறுதியில் மகேசன் அணியுடன் 56 ஓட்டங்களை பெற்ற கார்மேல் போய்ஸ் மகேசன் அணியினை 18 ஓட்டங்களுக்குள் வீழ்த்தி வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது. (க)

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

மூளாய் விக்ரோறியா விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் மென்பந்தாட்டக் கிரிக்கெட் சுற்றுப் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. அணிக்கு ஆறுபேர் ஐந்து பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட இச் சுற்றுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் அணிகள் 077 914 3882, 077 722 5330 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தங்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம். (க)



# குமாரசாமி வெற்றிக் கிண்ணத்தை கைப்பற்றியது சென்றலைட்ஸ் அணி








யாழ்ப்பாணம் ஜொலிஸ் ரார்ஸ் விளையாட்டுக்கழகம், மறைந்த முன்னாள் அதிபர் பி.எஸ்.குமாரசுவாமி ஞாபகார்த்தமாக யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் நடத்தி வந்தது.

சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டுக்கழகம், ஜொலிஸ் ரார்ஸ் விளையாட்டுக்கழகம், கொக்குவில் மத்திய சனசமூக நிலையம், பற்றீசியன் அணி, கே.கே.எஸ். விளையாட்டுக்கழகம் மற்றும் ஸ்கந்தா ஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழகம் என்பன இந்தச் சுற்றுப்போட்டியில் பங்குபற்றின. அணிகள் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு பிரிவுகளிலும் முதலிரு இடங்களைப் பெற்ற அணிகள் பிளே ஓவ் சுற்றுக்குத் தகுதி பெற்றன.

ஒவ்வொரு பிரிவிலும், முதல் இடத்தைப் பெற்ற அணிகளான சென்றலைட்ஸ் மற்றும் பற்றீசியன் அணியும் முதலாவது தகுதியாளர் போட்டியில் மோதின.

இதில் சென்றலைட்ஸ் அணி, 67:51 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று இறுதிக்குத் தகுதி பெற்றது. பற்றீசியன் அணி அடுத்த வாய்ப்புக்காக காத்திருந்தது.

ஒவ்வொரு பிரிவிலும், இரண்டாவது இடத்தைப் பெற்ற அணிகளான கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் மற்றும் ஜொலிஸ்ரார் அணிகள் எலிமினேற்றர் போட்டியில் மோதின.

இதில் ஜொலிஸ்ரார்ஸ் அணி, 86:33 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது. கொக்குவில் அணி சுற்றிலிருந்து வெளியேறியது.

தொடர்ந்து, இரண்டாவது தகுதியாளர் போட்டி பற்றீசியன் அணிக்கும் ஜொலிஸ் ரார்ஸ் அணிக்கும் இடையில் நடைபெற்றது. இதில் ஜொலிஸ் ரார்ஸ் அணி, 60:43 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று, இறுதிக்கு தகுதி பெற்றது.

ஜொலிஸ்ரார்ஸ் அணிக்கும் சென்றலைட்ஸ் அணிக்கும் இடையிலான இறுதிப் போட்டி கடந்த 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு நடைபெற்றது.

முதல் கால்பாதியாட்டம் முடியும் போது, ஜொலிஸ் ரார்ஸ் அணி, 18:13 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலையில் இருந்தது. எனினும், இரண்டாவது கால்பாதியாட்டத்தில் சிறப்பாக ஆடிய சென்றலைட்ஸ் அணி, இரண்டாவது கால் பாதியாட்டம் முடியும் போது, 33:28 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை வகித்தது. அதே உத்வேகத்துடன், தொடர்ந்து ஆடிய சென்றலைட்ஸ் அணி, மூன்றாவது கால்பாதியாட்டம் முடியும் போது, 50:42 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை வகித்தது.

நான்காவதும் இறுதியுமான கால்பாதியிலும் சென்றலைட்ஸ் அணியின் ஆதிக்கம் தொடர. ஆட்டம் முடியும் போது, சென்றலைட்ஸ் அணி, 63:51 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று சம்பியனாகியது.

இறுதிப் போட்டியில் விளையாடிய அணிகளில், ஜொலிஸ்ரார்ஸ் அணியிலிருந்து ஆர்.கீர்த்தனும், சென்றலைட்ஸ் அணியிலிருந்து, வி.தயாளனும் சிறந்த வீரர்களாக தெரிவு செய்யப்பட்டனர். (க-26)

## கணவனுக்கு மர...

தண்டனை விதித்து நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டில் கொக்கட்டிச் சோலை பகுதியில் 8 மாத கர்ப்பிணியான தனது மனைவியை கொலை செய்திருந்தார்.

இந்த வழக்கு விசாரணையானது நேற்று செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு மேல் நீதி மன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது, குற்றவாளியாக இனம் காணப்பட்ட குறித்த நபருக்கு மரண தண்டனை விதித்து நீதிபதி எம்.வை.எம்.இஸர்டீன் தீர்ப்பினை வழங்கி யுள்ளார்.

குறித்த நபர் தான் செய்த கொலையை மறைப்பதற்காக கொலைச் சம்பவம் இடம் பெற்றதாக பொலிஸில் முறைப்பாடு செய்தி ருந்தார். இந்த சம்பவம் தொடர்பில் பொலி ஸார் மேற்கொண்ட விசாரணைகளில் குறி த்த நபரே குற்றச்செயலில் ஈடுபட்டுள்ளமை கண்டறியப்பட்டது.

இந்நிலையில் கடந்த 2013 ஆம் ஆண்டு இவருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணைகள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## வயாவிளான்...

வலிகாமம் வடக்கில் இராணுவக்கட்டு ப்பாட்டிலிருந்து வயாவிளான் தெற்கு ஞான வைரவர் ஆலயம் நேற்று செவ்வாய்க்கிழமை விடுவிக்கப்பட்டது.

கடந்த காலங்களில் இவ்வாலயத்தில் வைரவர் மடை, விசாகப் பொங்கல் இடம் பெறும் போது அன்றைய தினம் மட்டும் மக் கள் செல்வதற்கு இராணுவத்தினர் அனும தித்திருந்தனர்.

இந்நிலையில் ஆலயக்குருக்கள் மற்றும் ஆலய நிர்வாகத்தினர் யாழ்.மாவட்ட கட் டளைத் தளபதியிடம் இக்கோயிலினை விடு வித்து தருமாறு கோரியிருந்த நிலையிலேயே இக்கோயில் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் வடக்கில் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்ட 60 ஏக்கர் நிலப்பரப்பிற்குள் வயாவிளான் ஞானவைரவர் ஆலயமும் உள்ளடங்கிய நிலையில் குறித்த ஆலயப் பிர தேசத்திற்குள் செல்ல இராணுவத்தினர் அனுமதித்துள்ளனர்.

மேலும் இப்பகுதியில் முகாம்கள் மற்றும் முட்கம்பி வேலிகளை அகற்றி வருவதால் நாளை அல்லது நாளை மறுதினம் மக்கள் விடுவிக்கப்பட்ட காணிகளுக்குள் பூரணமாக செல்ல முடியும் என இராணுவத்தினர் தெரி வித்துள்ளனர். (ம)

## வல்வை பொலி...

யில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வரு கின்றனர்.

வல்வெட்டித்துறை மீனாட்சி அம்மன் கோவிலடியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் கெங் காரூபன், தீருவிலைச் சேர்ந்த குகதாஸ் விஜயதாஸ் ஆகிய இருவருமே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளார்கள்.

கடந்த 16ஆம் திகதி சனிக்கிழமை ஊரில் குழு மோதல் இடம்பெற்றது. அதில் தாக்கு தலுக்குள்ளான நண்பர் ஒருவரை அழைத்து வந்தேன். மற்றத்தரப்புக்கு சாதகமாகச் செயற் பட்ட பொலிஸார், என்னையும் நண்பனை யும் உதயசூரியன் கடற்கரை மதவடிக்கு அழைத்துச் சென்று தாக்கினர். அத்துடன் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று தமது லத்தியால் எமது உடம்பு முழுவதும் கடுமையாகத் தாக்கினர்.

எம்மைத் தாக்கியதை மறைத்து, பொலி ஸார் பருத்தித்துறை நீதவான் முன்னிலை யில் எம்மை முற்படுத்தினர். எமக்கு பிணை வழங்கப்பட்டது.

ஊரணி வைத்தியசாலைக்குச் சென்றால் பொலிஸாரின் அச்சுறுத்தல் ஏற்படும் என்ற காரணத்தால், யாழ்ப்பாணம் மனித உரிமை கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு வழங்கி னோம். பின்னர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுகின்றோம்.

வல்வெட்டித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியே எம்மைத் தாக்கினார். அவர் சீருடையில்லாமல் சிவில் உடை அணிந்திருந்த போதே எம்மைத் தாக்கினார். அதனால் அவரது பெயரை அறியமுடியவி ல்லை.

எமக்கு எதிராக முறைப்பாடு வழங்கிய வருக்கு வெட்டுக்காயம் உள்ளது எனவும் அதனை எதனால் வெட்டி ஏற்படுத்தினார்கள் என்றும் கேட்டுத்தான் பொலிஸ் அதிகாரி எம் மைத் தாக்கினார் என்று சுந்தரலிங்கம் கெங் காரூபன் தெரிவித்தார்.

நண்பர்களுக்கு இடையே நடந்த தகராறு காரணமாக, தாக்குதலுக்குள்ளானவரை அழைத்து வந்து எம்மை ஏற்றிச் சென்று மத வடியில் வைத்து காதைப் பொத்தி அடித்த னர். பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று தாக்கினார்கள். பாதத்திலிருந்து முது குப் பகுதி முழுவதும் பொலிஸார் தாக்கினர். அதனால் என்னால் நடக்கவே முடியாமல் இருக்கிறது.

யாழ். போதனா வைத்தியசாலையில் இர ண்டு நாள்கள் சிகிச்சை பெற்று வருகின் றேன். 3 முறை எக்ஸ்ரே எடுத்துள்ளனர். மூன்று வேளையும் மாத்திரைகள் எடுக்கின் றேன்.

வல்வெட்டித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியே எம்மைத் தாக்கினார். மருத்துவ அறிக்கையை வைத்தியசாலை யில் வழங்குவார்கள். எமக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று குகதாஸ் விஜயதாஸ் தெரி வித்தார். (ம)

## வடக்கு சுகாதா...

வாக காணப்படுகிறது.

இந்த ஆளணி பற்றாக்குறையை நிவர் த்தி செய்யுமாறு சுகாதார அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தும் குறித்த பற் றாக்குறை நிவர்த்தி செய்யப்படவில்லை.

இந்த நிலையில் நேற்று முன்தினம் அரச குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்க ளுக்கு கொழும்பில் நியமனம் வழங்கப்ப ட்டுள்ளது.

இவர்களில் வடக்கு மாகாணத்தில் உள் ளவர்கள் வெளி மாகாணங்களுக்கு நியமிக் கப்பட்டுள்ளார்கள். தென்பகுதியில் உள்ள பெரும்பான்மை இனத்தை சேர்ந்தவர்கள் வடபகுதிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்கள். இத னால் வடக்கில் உள்ளவர்கள் பெரும் நெரு க்கடிக்குள்ளாகியுள்ளார்கள்.

அதாவது வடக்கு மாகாணத்தில் ஆளணி பற்றாக்குறை உள்ள போது வேறு மாகா ணத்தில் களப்பணி செய்வது பெரும் சவா லாக இருக்கும் என்றும் பெரும் கஷ்டங் களை எதிர்கொள்ளவேண்டி இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

இவர்கள் ஒரு வருடம் தாதிய பயிற்சிக் கல்லூரியிலும் 6 மாதங்கள் பிராந்திய பயிற்சி நிலையத்திலும் பயிற்சி பெற்று கடந்த வரு டம் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர்.

இதில் யாழ்ப்பாண பிராந்திய பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்ற 43 பேரும் வவு னியா பிராந்திய பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்ற 23 பேருமாக 66 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது இதில் 42 பேருக்கு வட க்கு மாகாணத்துக்கு நியமனம் கிடைத்துள்ளது.

ஏனைய 24 பேருக்கு கிழக்கு மாகாணம், ஊவா மாகாணம், மேல் மாகாணம் என்பவ ற்றுக்கு நியமனம் கிடைத்துள்ளது.

வெளி மாகாணங்களுக்கு நியமிக்கப்பட் டவர்கள் இந்த விடயம் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளதாகவும், இது தொடர்பாக மாகாண ஆளுநர், வடக்கு முதலமைச்சர், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர், சம்பந்தப்பட்ட சுகாதார திணை க்கள அதிகாரிகள் இந்த விடயத்தை கவன த்தில் எடுத்து வடக்கு மாகாணத்துக்கு தம்மை நியமிப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்து உத வுமாறு கேட்டுக்கொண்டுள்ளனர். (ம-9)

## மாகாண சபைத்...

துக்கு பொறுப்பான அமைச்சரை அழை த்து கலந்துரையாடப்படும் என சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியை பிரதிநிதி த்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப் பெரும நேற்று சபையில் எழுப் பிய கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் இத னைத் தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகளுக்கான தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டு இன்னும் 3 நாட்களில் ஒரு வருடம் நிறைவடைய உள்ளது.

எனினும் மாகாண சபைத் தேர்தல்கள் குறித்து ஜனாதிபதியினாலோ, பிரதமரி னாலோ அல்லது விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரினாலோ அறிவிக்க முடியாது ள்ளது என ஒன்றிணைந்த எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறு ப்பினர் டளஸ் அழகப் பெரும கேள்வி எழுப்பி யிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை , சட்டமா அதிபரின் ஆலோ சனை மற்றும் இணக்கம் கிடைத்தவுடன், மத்திய வங்கியின் முறி மோசடி அறிக்கையு டன் தொடர்புடைய ஏனைய முழுமைப்படு த்தப்பட்ட ஆவணங்கள் தொடர்பிலும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள ப்படும் என ஜனாதிபதி செயலாளர் சபாநாய கருக்கு அறிவித்துள்ளார். சபாநாயகர் கரு ஜயசூரிய நேற்று இந்த விடயத்தை நாடாளு மன்றத்திற்கு அறிவித்தார்.

அத்துடன், மாகாணசபைகள், உள்ளூரா ட்சி சபைகள் உள்ளிட்ட 837 அரச நிறுவன ங்களின் தகவல்கள் அரச கணக்காய்வு சபையின் முதலாவது அறிக்கையை பிரதி அமைச்சர் லசந்த அழகியவன்ன நேற்று நாடாளுமன்றத்திற்கு முன்வைத்தார். (ம)

## புத்திக பத்திரன...

யளவில் அவர் சத்தியப்பிரமாணம் எடுத்து பதவியேற்றார்.

கடந்த வாரம் பிரதி அமைச்சர்கள் 6 பேர் பதவியேற்றிருந்த நிலையில் புத்திக பத்திரன நேற்று பதவியேற்றார். (ம)

## மாவட்ட உத்தி...

சாரதியின் தவறால் ஹன்டர் வாகனம் வேகக்கட்டுப்பாட்டையிழந்து யாழ்.மாவட்ட செயலகத்தின் வாகனத் தரிப்பிடத்தில் நிறு த்தி வைக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்க ளின் 12 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 2 துவிச்சக்கர வண்டிகள் மீது மோதியதில் சேத மடைந்தன.

இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க்கி ழமை மாலை 4 மணியளவில் இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட செயலகத்துக்கு ஹன்டர் வாகனம் ஒன்றில் பொருள்கள் (கிராம சேவையாளர்களுக்கான பைகள் உள்ளி ட்டவை) ஏற்றிவரப்பட்டன. உத்தியோகத்தர் களின் வாகனத்தரிப்பிடத்துக்கு அருகில் ஹன்டர் வாகனத்தை நிறுத்த சாரதி திட்டமி ட்டுள்ளார்.

வாகனத்தின் பிரேக்கை அழுத்துவதற்கு பதிலாக அச்சிலேற்றரை சாரதி மாற்றி அழுத் தியதால் வாகனம் வேகக் கட்டுப்பாட்டையி ழந்து உத்தியோகத்தர்களின் வாகனத் தரிப் பிடத்துக்குள் புகுந்தது. சாரதியின் கவயீனத் தால் இந்த விபத்து ஏற்பட்டது. உத்தியோகத் தர்களின் 12 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 2 துவிச்சக்கர வண்டிகள் சேதமடைந்தன.

அவற்றில் பல பெண் உத்தியோகத்தர்க ளின் மோட்டார் சைக்கிள்கள் என்று தெரி விக்கப்பட்டது. (ம-9)

## அரசாங்கம் இன...

தமது அதிகாரத்தை தக்க வைப்பதற்காக எதிர்த்தரப்பினர் சிறையில் அடைக்கப்படுகி ன்றனர்.

இவ்வாறு இடம்பெற்றால், அவர்களின் செயற்பாடுகள் குறித்து பின்னர் வழக்கு தொடரவேண்டிய நிலை மக்களுக்கு ஏற்ப டும் என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஒன்றிணைந்த எதிர்க்கட் சியின் கட்சித் தலைவர்களுக்கு இடையி லான சந்திப்பு கொழும்பு விஜேராம மாவத் தையில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல் லத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## தபால் ஊழியர்களின் போராட்டம் காரணமாக
# இலங்கைக்கான அஞ்சல் சேவையை நிறுத்தியது ஓமான்

(கொழும்பு)

இலங்கையில் தொடரும் அஞ்சல் ஊழிய ர்களின் போராட்டம் காரணமாக, இலங்கை க்கான அஞ்சல் சேவையை தற்காலிகமாக நிறுத்துவதாக ஓமான் அஞ்சல் சேவை நிறுவ னம் அறிவித்துள்ளது.

அஞ்சல் நிறுவனத்தினால் வெளியிடப்பட் டுள்ள இணைய அறிக்கையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அஞ்சல் ஊழியர்களின் பணிப்புறக்கணி ப்பு போராட்டத்தினால் இலங்கையில் நில வும் சூழ்நிலை காரணமாக, இலங்கைக் கான அஞ்சல்களை ஏற்பதை நிறுத்தியுள்ள தாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மறு அறிவித்தல்வரை இலங்கைக்கான அஞ்சல்களை பொறுப்பேற்க வேண்டாம் என இலங்கை அஞ்சல் திணைக்களத்தினால் விடுக்கப்பட்ட மின்னஞ்சல் அறிவிப்பை தொடர்ந்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாக ஓமான் அதிகாரியொருவர் குறி ப்பிட்டுள்ளார். (ம)

# நாடளாவிய ரீதியில் முதல் 5 மாதங்களில்
## 33பேர் சுட்டுப்படுகொலை

(கொழும்பு) .

2018 இல் முதல் ஐந்து மாதங்களில் நாட ளாவிய ரீதியில் 33பேர் சுட்டுக்கொல்லப்பட்டு ள்ளப்பட்டுள்ளனர் என பொலிஸ்பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

24 கொலைகள் தொடர்பான விசார ணைகள் பூர்த்தியாகிவிட்டன. ஏனையவை தொடர்பான விசாரணைகள் தொடர்கின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பிலும் அதன் புறநகர் பகுதிகளி லும் திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபட்ட னர் என்ற சந்தேகத்தின் பேரில் 17 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸ் பேச் சாளர் தெரிவித்துள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர்களில் பிரபல பாதாள உலககுழுக்களை சேர்ந்தவர்கள் உள்ளனர் எனவும் பொலிஸ் பேச்சாளர் மேலும் குறிப் பிட்டுள்ளார். (ம)

# முல்லை -ஒட்டுசுட்டான் சந்தியில் டிப்பர் - மோ.சைக்கிள் விபத்து
## இளைஞன் படுகாயம்

முல்லைத்தீவு- ஒட்டுசுட்டான் சந்தியில், வீதியில் பயணித்த டிப்பர் வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் மோதுண்டதில், மோட் டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் படு காயமடைந்து ஆபத்தான நிலையில் வவு னியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு ள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க்கி ழமை மாலை இடம்பெற்றது என்று முல் லைத்தீவு பொலிஸார் தெரிவித்தனர். (ம)

# வவு.வில் ஆசிரியர் தாக்கியதில் பாடசாலை மாணவன் காயம்

(குருமன்காடு)

வவுனியாவில் ஆசிரியர் ஒருவர் மேற் கொண்ட தாக்குதலில் மாணவன் ஒருவன் காயமடைந்து வவுனியா பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நேற்று இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியால யத்தில் தரம் 10ல் கல்வி பயிலும் தி.கிருஜன் (வயது 15) என்ற மாணவன் பாடசாலையின் 8-ம் பாடநேர இறுதி வேளையில் தன் சக மாணவர்களோடு உரையாடிகொண்டு இரு ந்த வேளையில் அவ்விடத்திற்கு வந்த ஆசி ரியர் உரையாடியதை தவறாக நினைத்து குறித்த மாணவர்களை தாக்கியுள்ளார்.

மாணவனை தாக்கிய போது குறித்த மாணவனின் தலை அருகிலிருந்த சுவரில் மோதி தலையில் காயம் ஏற்பட்டுள்ளது. இத னால் பாதிப்புக்குள்ளான மாணவன் வவு னியா பொதுவைத்தியாசலையில் சிகிச்சை க்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை வைத்தியசாலை பொலி ஸாரிடம் இது தொடர்பாக முறைப்பாடு செய் யப்பட்டுள்ளதையடுத்து மேலதிக விசார ணைகளை பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர். காயமடைந்த மாணவன் வடமாகா ணசபை உறுப்பினர் ஒருவருடைய மகன் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-250-281)

**வேலையாட்கள் தேவை**

கைதடியில் அமைந்திருக்கும் ஆடைத் தொழிற்சாலை ஒன்றுக்கு ஆடைகள் தைப்பதில் அனுபவம் உள்ள பெண் வேலையாட்கள் தேவை.

**தொடர்புகளுக்கு:**

**077 375 0807**

**வேலைவாய்ப்பு**

பல்வேறு மாவட்டங்களில் வியாபித்து இருக்கும் எமது கம்பனியில் 05 பதவிக்கு உரிய 30 வேலைவாய்ப்புகள் உள்ளன. எமது கம்பனியில் இணைந்து முதல் 06 மாத காலம் 15000-30000 வரையிலான சம்பளமும் 06 மாத கால அனுபவத்தின் பின்னர் பதவிக்கேற்ப உயர்ந்த சம்பளமும் பெற முடியும். அனுபவம் தேவையில்லை.

O/L அல்லது A/L படித்தவர்கள் ✷ வயதெல்லை 40

தொடர்புகளுக்கு:- 077 408 3273

**விற்பனைக்கு**

34 அடி நீளம் 10அடி அகலம் கொண்ட யன்மார் 3C வள்ளம் விற்பனைக்கு உண்டு.

கொத்தியால், வல்வெட்டித்துறை. தொடர்புகளுக்கு:- 077 759 9662

வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION **070 330 5500** WESTERN UNION

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்

கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்

முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை

Techno World

க.பொ.த உயர்தர தொழில் நுட்பப்பிரிவில் தனித்துவமான கல்வி நிறுவனம்

A/L 2017இல் 65இற்கு மேற்பட்ட மாணவர்களை பல்கலைக்கழகத்துக்கு அனுப்பிய பெருமையுடன் A/L 2018இல் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்குரிய (இறுதிப்பரீட்சையை நோக்கியது)

**விசேட இலவசக் கருத்தரங்கு**

1ம் நாள் அமர்வு 23.06.2018 சனிக்கிழமை

08.00-10.00 பொறியியல் தொழில்நுட்பம் (Civil)

10.00-12.00 பொறியியல் தொழில்நுட்பம் (Automobile)

08.00-12.00 உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்

12.00-04.00 தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் (Physics)

அனுமதி இலவசம்

**077 017 5346**

O/L உடன் 3 - 4 மாத விசேட

**ஹொட்டேல் பயிற்சி**

& ஆங்கில தொடர்பாடல் பயிற்சியுடன்



PR ஏற்பாட்டுடன் **கனடா விசா**

26 ஐரோப்பிய நாடுகளுக்கான **செங்கன் விசா**

ஜேர்மன் உல்லாசப் பயணக் கப்பல் அமெரிக்க Mc Donalds, Marriot, Sheraton உட்பட முன்னணி நட்சத்திரத் ஹொட்டேல்களுக்கான

டுபாய், குவைத், ஓமான், பாஃரேன், கட்டார் விசாவுடன்

**வேலைவாய்ப்பு ஏற்பாடு**

SIKARAM ACADEMY

FAST TRACK TO CAREERS

0777 324 004

077 36 16 798

021 221 9 221

221-1/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்

www.sikaram.lk facebook.com/www.sikaram.lk/

**விரைவு பொதிகள் சேவை**

**விசேட விலை குறைப்பு**



DELIVERY IN 3-5 DAYS

UK- 550 /-Kg

கனடா-900 /-Kg

ஜேர்மனி- 700 /-Kg

நெதர்லாந்து-700 /-Kg

மானிப்பாய் 0768226240 V2 TRAVELS

யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி

நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

CNR உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால், பொதிகள் விநியோக சேவை



- அதிவேக மற்றும் சிக்கன பொதிகள் சேவை
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி
- அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்
- கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்குப் பரிமாற்ற சேவை

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 021 5674145 077 2931062 077 6655413

**உங்களுக்கு வேலை தேவையா?**

எமது Company யுடன் இணையுங்கள்

எமது கிளை நிறுவனத்திற்கு பின்வரும் பதவி வெற்றிடங்கள் நிரப்ப வேண்டியுள்ளது.

- Field Officer
- Clerk
- Stock Keeper
- Trainee
- Distributer

☞ 06 மாத காலம் வரை 20,000-30,000 வரையிலான வருமானமும் பின்னர் 45,000 வரையிலான வருமானமும் பெறமுடியும்.

☞ 06 மாத காலத்தின்பின்னர்வெளிநாட்டு சுற்றுலாப் பயணம் மற்றும் வெளிநாட்டில் உள்ள எமது கம் பனியில் பணியாற்ற வாய்ப்பினைப் பெறமுடியும்.

தொடர்புகளுக்கு:- 077 517 9034, 077 985 8580, 021 722 3317

**பெயர் மாற்ற அறிவித்தல்**

மயிலிட்டி தெற்கு தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகக் கொண்ட சண்முகராசா சரோஜினி ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை சண்முகராசா இந்துமதி எனப் பெயர் மாற்றம் செய்கின்றேன். இன்று முதல் எனது சகல ஆவணங்களிலும் இந்துமதி எனும் பெயரையே பயன்படுத்துவேன் என்பதனை சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

சண்முகராசா இந்துமதி 20.06.2018

**கணினி திருத்தம்**

உங்கள் வீடுகளுக்கே வந்து கணினிகள் திருத்தி தருகிறோம்! அழையுங்கள்.

GUNA BEST PC 0779086737

லப்டொப் கணினிகள் திருத்தம் விற்றல் வாங்குதல்

LAPTOP COMPUTERS CCTV CAMERA REPAIR SALE PURCHASE INSTALLATION

கணினி மதர்போட் டீசீரிவி திருத்தம் விற்றல் பொருத்துதல் 522 மானிப்பாய் வீதி ஓட்டுமடம் யாழ்ப்பாணம்.

**முதலாம் ஆண்டு நினைவலையும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்**

எமது குடும்பத்தின் ஒளி விளக்கு

தோற்றம் 17 . 02 . 1932



மறைவு 30 . 06 . 2017

அமரர்

**சிவசுந்தரம் சிறீதேவி**

கடந்த 30.06.2017 அன்று சிவபதமடைந்த எமது குலவிளக்கு அமரர் சிவசுந்தரம் சிறீதேவி அவர்களின் முதலாம் ஆண்டு ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (20.06.2018) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 11.30 மணியளவில் நடைபெறும். எனவே இந்நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்

வி.எம்.றோட், பருத்தித்துறை.

-குடும்பத்தினர் 077 654 8308

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

**வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை**

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை

● அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
● அருள்ஸ் பிறைவேற் லிமிட்டற் நிறுவனங்களின் இணை நிறுவனம்.

**அருள்**

சாவகச்சேரி: இல. 01 NDB வங்கிக் கட்டடம், தபாற் கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

நெல்லியடி: இல. 01 பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576

கிளிநொச்சி: இல. 10, கரடிப்போக்கு, கிளிநொச்சி. (வாகன புகைப்பரிசோதனை நிலையம் அருகில்) 076 443 1576


## விக்னே...

விக்னேஸ்வரனின் தைரியத்தையும் அவர் பாராட்டினார்.

கொழும்பில் நேற்று செவ்வாய்க் கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர், இதேவேளை, பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரப்பட்ட போது தமிழ் மக்களுக்காக அவர்கள் பிரதமருடன் மேற்கொண்ட பேரம் பேசுதலுக்கு, வடக்கு முதலமைச்சரை போன்று தமிழ் தேசிய கூட்டமைப்பையும் பாராட்ட வேண்டும்.

பிரதமரிடம் கூட்டமைப்பினர் 16 கோரிக்கைகளை முன்வைத்திருந்த நிலையில், அதில் 12 கோரிக்கைகள் தற்போது நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஆனால், முஸ்லிம் அமைச்சர்கள் தங்களுக்காக மாத்திரமே நாடாளுமன்றத்தில் போராடி வருகின்றார்களே தவிர மக்களுக்காக எதுவும் செய்வதாக இல்லை எனத் தெரிவித்தார். (ம)

## மருத்...

ஆகியவற்றுக்கு அறவிடப்படும் 15 சதவீத பெறுமதிசேர் வரியை (வற்) நீக்குவதற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

வரும் ஜூலை முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மேற்படி மருத்துவ சேவைக் கட்டணங்கள் மீதான வற் வரி நீக்கப்படுவதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது. (ம)

## துப்பா...

துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

உயிரிழந்த இளைஞரின் சடலம் பிரேத பரிசோதனைகளின் பின்னர் நேற்று முன்தினம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. இந்நிலையில், நேற்று மாலை சடலம் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது.

இதன்போது மல்லாகம் நீதிமன்ற வளாகத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. (ம)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.06.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.